

# செங்கை ஆழியானின் படைப்புலகம்

என். செல்வராஜா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கை ஆழியானின் படைப்புலகம்

## (ஓர் ஆய்வுக் கையேடு)

எஸ்.செல்வராஜா
தொகுப்பாசிரியர்

வெளியீடு

எங்கட புத்தகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்முகம் : செங்கை ஆழியானின் படைப்புலகம்
(ஓர் ஆய்வுக் கையேடு)

ஆசிரியர் : என்.செல்வராஜா

வெளியீடு :

பக்கம் : viii+104

முதற் பதிப்பு : ஒக்டோபர் 2022

பிரதிகள் : 300

அட்டை வடிவமைப்பு: குலசிங்கம் வசீகரன்

நூல் பதிப்பு : மிக்கி பிறிண்டிங் ஸ்பெஷலிஸ்ற்,
தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.

நூல் அளவு : 15x22.5 சமீ.

விலை : ரூபாய் 300.00

பதிப்புரிமை : என்.செல்வராஜா

சர்வதேச நியம புத்தக இலக்கம் ISBN 978-624-97823-3-4

Copy Right 2022 by N.Selvarajah

All Right Reserved. No part of this publication may be reproduced or utilised or, stored in a retrieval system, or transported in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

உலகளாவிய ஈழத்துப் படைப்பாளர்களின் தமிழ் நூல்களைத் தேடிப்பெற்று அதன் நூலியல் விபரங்களை குறிப்புரையுடன் தொகுத்து ""39 நூல்தேட்டம்" என்ற பன்னூல் தொகுதிகளாக வெளியிடும் பெரும்பணியினை ஆற்றிவரும் நூலியலாளர் என். செல்வராஜா அவர்களின் 60 ஆவது புத்தகமாக "39 செங்கைஆழியான் படைப்புலகம்" வெளிவருகிறது. 'எங்கட புத்தகங்கள்" நூல் வெளியீட்டுத் தொடரில் இது ஐந்தாவது புத்தகம் என்பதோடு" நமக்கென்றொரு பெட்டகத்தை தொடர்ந்து இரண்டாவதாக வெளிவரும் என்.செல்வராஜா அவர்களுடைய புத்தகமாகவும் இது அமைகின்றது.

ஈழத்து பதிப்பிலக்கியத்துறையில் தனக்கென நிலையான ஓரிடத்தை நிறுவிவிட்டுச் சென்றுவிட்ட செங்கை ஆழியான் அவர்களது படைப்புகளின் குறிப்புரையுடனானதொரு விபரப்பட்டியலாக இந்தப் புத்தகம் அமைந்துள்ளது. கந்தையா குணராசா என்ற இயற்பெயரைக் கொண்டவர், செங்கை ஆழியான், நீலவண்ணன் ஆகிய புனைபெயர்களில் பல்வேறு துறைகளிலும் பல ஆக்கங்களை படைத்துள்ளார். குறிப்பாக, வளரிளம் பருவத்தினருக்காக இவர் வழங்கிச்சென்ற அறிவியல், கற்பனைப் படைப்புக்கள் சிறப்பானவை.

இவரது படைப்புக்கள் வெளிவந்து பல ஆண்டுகள் ஆகியும் இன்றும் வாசகர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் என பலராலும் இவரது படைப் பாக்கங்கள் தேடப்படுவதும் விரும்பி வாசிக்கப்படுவதும் அவரது சிரஞ்சீவியான எழுத்து வல்லமைக்கு மகத்தான சாட்சியாகவுள்ளது. அவ்வாறான ஒருவரது புத்தகங்கள் பற்றிய ஆவணப்பதிவொன்றினை எங்கட புத்தகங்கள் வெளியீடாக வெளியிடுவது எங்கட புத்தகங்களின் செல்திசைக்கு மிகவும் பொருத்தமான விடயமாக நாம் கருதுகிறோம். அந்தவகையில் இந்த ஆய்வு வழிகாட்டியை எங்கட புத்தகங்கள் வெளியீடாக பதிப்பிக்க முன்வந்துள்ள நூலியலாளர் என் செல்வராஜா அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி.

அமரர் செங்கை ஆழியான் 28.02.2016 அன்று மறைந்து இன்று ஆறாவது ஆண்டு நிறைவடையும் வேளையில் அவருக்கு நாம் செலுத்தும் நினைவஞ்சலியாக இவ்வெளியீடு அமைகின்றது.

**குலசிங்கம் வசீகரன்**
எங்கட புத்தகங்கள்
28-02-2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாஹித்தியரத்னா செங்கை ஆழியான்

| | |
|---|---|
| இயற்பெயர் | : கந்தையா குணராசா |
| புனைபெயர்கள் | : மணாளன், சர்வசித்தன், சற்குணம், நீலவண்ணன். |
| வீட்டுப் பெயர் | : சற்குணம் |
| பிறந்த திகதி/இடம் | : 25.01.1941, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் |
| மறைந்த திகதி | : 28.2.2016, நீராவியடி, யாழ்ப்பாணம் (75 வயதில்) |
| பெற்றோர் பெயர் | : கந்தையா-அன்னம்மா |
| துணைவியார் | : கமலாம்பிகை |
| பிள்ளைகள் | : ரேணுகா, பிரியா, ஹம்சா |
| ஆரம்பக் கல்வி | : யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. |
| உயர் கல்வி | : பேராதனைப் பல்கலைக்கழகம் (1964 புவியியல் சிறப்புப் பட்டதாரி) |
| மேலதிக உயர்கல்வி | : முதுகலைமாணி (1984), கலாநிதி (1991) |
| முதல் இலக்கியப் பயணம் | : 1957, கல்கண்டு வார இதழில் ஒரு பக்கக் கதை |

**அரச சேவைப் பணிகள்:**

- 1964-1971 ஆசிரியர் பணி
- 1971-1992 இலங்கை உயர் நிர்வாக சேவை அதிகாரி (காரியாதிகாரி-கிண்ணியா, செட்டிகுளம், உதவி அரசாங்க அதிபர்-துணுக்காய், பாண்டியன்குளம், கிளிநொச்சி, மேலதிக அரசாங்க அதிபர்/பிரதிக் காணி ஆணையாளர்-கிளிநொச்சி
- 1992-1997 பிரதேசச் செயலாளர்-யாழ்ப்பாணம்
- 1997-2000 பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- 2000-2001 பிரதேசச் செயலாளர்-நல்லூர் (யாழ்ப்பாணம்)

**ஓய்வுநிலைப் பணிகள்:**

- 2001-2003 பிரதேச செயலாளர்-சங்கானை, தெல்லிப்பழை
- 2004-2005 ஆணையாளர், யாழ்ப்பாண மாநகர சபை.
- 2006-2015 சமூகப் பணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கை ஆழியானின் படைப்புலகம்

செங்கை ஆழியான் என்ற புனைபெயரால் பரவலாக அறியப்படும் அமரர் க. குணராசா ஒரு பன்னூலாசிரியராவார். சமூக நாவல்கள், குறுநாவல்கள், வரலாற்று நாவல்கள், சிறுகதைகள், பல்துறைக் கட்டுரை நூல்கள், சிறுவர் அறிவியல் நூல்கள், பாடநூல்கள், வரலாற்று ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் மற்றும் பதிப்புத்துறை எனப் பல துறைகளிலும் இவரது பங்களிப்பு பரந்து விரிந்தது.

இலங்கை அரசின் உயர் விருதான சாகித்திய ரத்னா விருதினைப் பெற்ற ஈழத்துப் படைப்பிலக்கியவாதியான செங்கை ஆழியான் தனது ஆரம்பக் கல்வியை யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும், உயர் கல்வியை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பெற்றார். புவியியல் சிறப்புப் பட்டதாரியாக பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்தார். 1984ஆம் ஆண்டு முதுகலைமாணிப் பட்டத்தையும், 1991ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பெற்றார். செங்கை ஆழியானுக்கு இலக்கிய உலகு, கல்வி உலகு, நிர்வாக உலகு என மூன்று ஆளுமையாற்றல்கள் உள்ளன. இவரது படைப்புலகமும் இம்மூன்றையும் சார்ந்தே இயங்கிவந்துள்ளது.

பெரும்பான்மையான ஈழத்துப் படைப்பாளிகள் கடந்துசெல்லும் சிறுவர் இலக்கியப் பணியில் இவரது பங்களிப்பினை இங்கு குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். 1980களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ‘அர்ச்சுனா" என்றொரு சிறுவர் இதழ் வெளிவரத் தொடங்கியிருந்தது. அதில் ‘ஹம்சாக்குட்டிக்கு அப்பா சொன்ன கதைகள்" என்று தொடராக சிறுவர் கதைகளை செங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழியான் எழுதிவந்தார். (செங்கை ஆழியானின் இளைய மகளின் பெயர் ஹம்சா என்பதை அறிகிறேன்). இவரது கற்பனையில் உருவாகிய ஆறுகால்மடம் (1991), பூதத்தீவுப் புதிர்கள்(1997) ஆகிய சிறுவர் கதைகளும், சூரியனின் கதை (1986), சந்திரனின் கதை (1986), பூமியின் கதை (1986) போன்ற அறிவியல் நூல்களும் ஈழத்துச் சிறுவர் இலக்கிய வரலாற்றில் முக்கிய மைல்கற்களாகும்.

அமரர் குணராசா அவர்கள் புவியியல் துறையில் சிறப்புப்பட்டம் பெற்றவர். தனது அறிவை பாடநூல்களாக மாணவர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கிவந்தவர். 1963-1997 காலகட்டத்தில் பல்வேறு புவியியல், படவரைகலை, புவிவெளியுருவவியல், சுற்றாடல் புவியியல் சார் நூல்களை இவர் இளையோருக்கு எழுதி வழங்கி இளவயதிலேயே அவர்களை அத்துறையின்பால் ஈர்த்தெடுக்க வழிசெய்தார். இத்துறையில்அவர் மேற்கொண்ட மற்றுமொரு முன்னோடி முயற்சியாகவே இவர் எழுதிய சூரியனின் கதை, சந்திரனின் கதை, பூமியின் கதை ஆகிய சிறுவர்களுக்கான அறிவியல் நூல்களை நாம் பார்க்கவேண்டும். இன்று பல்கலைக்கழக மட்டத்தில் பல்வேறு துறைசார் விற்பன்னர்கள் இருக்கிறார்கள். அவர்களில் எவராவது தமது துறைசார் அறிவை இளையோரிடம் சுவையாக எளிமைப்படுத்தி வழங்கி அவர்களை அத்துறையில் இளவயதிலேயே ஆர்வம் கொள்ளச் செய்திருக்கிறார்களா என்பது என்னுள் எழுந்து விடைதேடி நிற்கும் கேள்வியாகும்.

இன்று இலங்கையில் தொல்லியல்துறை, அகழ்வாராய்ச்சிகள், ஊடகத்துறை, மற்றும் பல்வேறு சமூகத்துறைகளும் அரசியல் கலந்து, ஊடகங்களில் செய்திகளாகி எமது அன்றாட வாழ்வாகிப் போய்விட்டன. இன்றைய இளையோரிடம் இத்துறைசார் அடிப்படைத் தகவல்களை வழங்கினாலேயன்றி பாடசாலைப் பாடத்திட்டத்தை மட்டுமே கற்கத் தூண்டும் ஒரு கல்வித்திட்டச் செயற்பாட்டிலிருந்து அவர்களை 'பெட்டிக்கு வெளியே வந்து" விரிவான உலகியலைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டும் அவசியமான வழித்தடத்தைக் காட்டுவதென்பது கடினமானதாயிருக்கும். ஒரு சிறுவன் தன்னைச் சூழ நடக்கும் அரசியல்மயப்படுத்தப்பட்ட தொல்லியலை புரிந்துகொள்ள எமது புத்திஜீவிகள் அவர்களுக்கு எதிர்காலத்தில் எத்தகைய சிறுவர் அறிவியல் நூல்களை தமிழில் விட்டுச் செல்லவிருக்கிறார்கள்? இத்துறைசார் அறிவினைப் புரிந்துகொள்வதற்கு பல்கலைக்கழக நுழைவு வரையில் இதற்காக எமது சிறார்கள் காத்திருந்தாக வேண்டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடயத்தில் தனது துறைசார் நூல்களின் வழியாக செங்கை ஆழியான் தனக்கென விதிக்கப்பட்ட சமூகக் கடமையை செவ்வனே செய்துவிட்டிருக்கிறார் என்று தெரிகின்றது.

'செங்கை ஆழியானின் படைப்புலகம்" என்ற இந்நூலில் செங்கை ஆழியானின் படைப்பிலக்கிய வாழ்வினை அவரது படைப்புகளின் மூலமாகத் தரிசிக்கும் வாய்ப்பினை வாசகர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறேன். அவரது வாழ்வும் பணிகளும் பற்றி எதிர்காலத்தில் ஆய்வுசெய்யவிருக்கும் ஆய்வாளர்களுக்கு அவர்களின் தேடல் சுமையை இது ஓரளவு குறைக்கும் என்று நம்புகின்றேன். இதுவொரு முழுமையான தொகுப்பு என்று அடிக்கோடிட்டுக் கூறும் வல்லமை எனக்கில்லை. முழுமையை நாடிய ஒருமுயற்சி என்று குறிப்பிடவே விரும்புகின்றேன். இத்தொகுப்பில் இடம்பெற்றிராத மேலும் சில நூல்கள் கண்டறியப்படுமிடத்தில் அவற்றை பின்னைய பதிப்புகளில் சேர்த்து மேலும் முழுமையை நாடிச் செல்லலாம் என்பதே எனது நோக்கமாகும். இதிலுள்ள குறைகளை வாசகர்கள் எனக்குத் தெரிவித்தால் அடுத்த பதிப்புகளில் இந்நூலை மேலும் திருப்திகரமாக செம்மைப்படுத்தலாம்.

செங்கை ஆழியான் தனது முதலாவது நூலாக 1962இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயிலும் காலத்தில், பேராசிரியர் க.கைலாசபதியின் முன்னுரையுடன் வெளியிட்டிருந்த 'கதைப் பூங்கா" என்ற சிறுகதைத் தொகுதியில் இன்று பிரபல்யமாகியுள்ள பல ஈழத்துப் படைப்பாளிகளின் ஆரம்பகாலக் கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இதுவே அவரது நூலியல் பயணத்தில் பதிந்த முதலாவது தடம். தொடர்ந்து வந்த காலத்தில் மறுமலர்ச்சிக் கதைகள் (1997), சம்பந்தன் சிறுகதைகள் (1998), ஈழகேசரிச் சிறுகதைகள் (2000), ஈழத்து முன்னோடிச் சிறுகதைகள் (2001), சுதந்திரன் சிறுகதைகள் (2002), மல்லிகைச் சிறுகதைகள் - இரு பாகங்கள் (2002,2003), சிங்களச் சிறுகதைகள் (2004), ஈழநாடு சிறுகதைகள் (2008), கனகசெந்தி கதாவிருது பெற்ற சிறுகதைகள் (2008), பூ (க.பரராஜசிங்கம் சிறுகதைகள்) (2009) என்று தொடர்ந்த இவரது தொகுப்பாவண முயற்சியானது. 2010 இல் வெளியான முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள் வரை தொடர்ந்து நிறைவெய்தியது. ஈழத்துச் சிறுகதை வரலாற்றை ஆய்வுசெய்ய முனையும் ஆய்வாளர்களுக்கு இத்தேர்ந்த தொகுப்புகள் மிகுந்த பெறுமதியானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாய்வுக் கையேட்டில் செங்கை ஆழியானின் படைப்புக்கள் ஆண்டுவாரியாக 1962 முதல் 2016 வரை பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவரது நூல்களில் பல மீள்பதிப்புகளாக பின்னைய காலங்களில் வெளியிடப்பட்டிருந்த போதிலும் முதற் பதிப்பு வெளிவந்த ஆண்டின் கீழேயே அவையும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு படைப்பின் கீழும் அந்நூல் பற்றிய சிறு குறிப்பொன்றும் தரப்பட்டுள்ளது. வாசகரின் மேலதிக தேடலுக்கு இக்குறிப்புகள் உதவிடக்கூடும்.

இந்நூலில் ஆண்டுவாரியான பிரதான பதிவையடுத்து, அவரது நூல்களை வகைப்படுத்தும் முயற்சி ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. செங்கை ஆழியானின் நூல்கள் அனைத்தையும் நாவல்கள்/குறுநாவல்கள், வரலாற்று நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், பல்துறைக் கட்டுரை நூல்கள், சிறுவர் இலக்கியங்கள், திரைப்படப் பிரதிகள், அறிவியல் நூல்கள்: சமூகக் கல்வி-சூழலியல், புவியியல், பொது அறிவு, பொது உளச்சார்பு, வரலாற்று நூல்கள், செங்கை ஆழியான் தொகுத்த நூல்கள், செங்கை ஆழியான் பற்றிய நூல்கள் ஆகிய பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவின் கீழும் நூல்கள் வெளியிட்ட ஆண்டு ஒழுங்கில் நூல் தலைப்புகள் நிரல்படுத்தப்பட்டுள்ளன.

மூன்றாவது பிரிவில் நூல்களின் தலைப்புகள் அகரவரிசைப்படுத்தித் தரப்பட்டுள்ளன, அடைப்புக்குறிக்குள் வெளியிட்ட ஆண்டும் தரப்பட்டுள்ளது. அகர வரிசையில் ஒரு நூலை பிரதான பதிவின் கீழ் தேட முனையும் ஆய்வாளருக்கு இது உதவியாகவும், நேரத்தை மீதப்படுத்தவும் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. செங்கை ஆழியானின் படைப்புலகம் - ஓர் அறிமுகம்

2. வகைப்படுத்தப்பட்ட நூல் தலைப்புப் பட்டியல்
(ஆண்டுவாரியாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன)

3. நூல்களின் தலைப்புப் பட்டியல்

4. செங்கை ஆழியானின் படைப்புலகம்
(ஆண்டுவாரியான பிரதான பதிவு)
   - நாவல்கள்/குறுநாவல்கள்
   - வரலாற்று நாவல்கள்
   - சிறுகதைத் தொகுப்புகள்
   - பல்துறைக் கட்டுரை நூல்கள்
   - சிறுவர் இலக்கியங்கள்
   - திரைப்படப் பிரதிகள்
   - அறிவியல் நூல்கள்: சமூகக் கல்வி, சூழலியல்
   - அறிவியல் நூல்கள்: புவியியல்
   - அறிவியல் நூல்கள்: பொது அறிவு, பொது உளச்சார்பு
   - அறிவியல் நூல்கள்: வரலாற்று நூல்கள்
   - செங்கை ஆழியான் தொகுத்த நூல்கள்
   - செங்கை ஆழியான் பற்றிய நூல்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகைப்படுத்தப்பட்ட படைப்புகள்

## (ஆண்டுவாரியாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன)

### நாவல்கள் / குறுநாவல்கள்

---

- **நந்திக் கடல்.** *(ஏப்ரல் 1969)*
- **ஆச்சி பயணம் போகிறாள்.** *(ஏப்ரல் 1969)*
- **முற்றத்து ஒற்றைப்பனை.** *(1972)*
- **சித்திரா பௌர்ணமி: குறுநாவல்.** *(மே 1972)*
- **வாடைக்காற்று.** *(நவம்பர் 1973)*
- **கொத்தியின் காதல்: நகைச்சுவை நவீனம்.** *(ஏப்ரல் 1975)*
- **யானை.** *(ஜனவரி 1978)*
- **பிரளயம்.** *(1975)*
- **இரவின் முடிவு.** *(ஆகஸ்ட் 1976)*
- **காட்டாறு.** *(பெப்ரவரி 1977)*
- **கங்கைக் கரையோரம்.** *(ஓகஸ்ட் 1978)*
- **கனவுகள் கற்பனைகள் ஆசைகள்.** *(ஆகஸ்ட் 1981)*
- **அக்கினிக்குஞ்சு.** *(ஜனவரி 1983)*
- **காற்றில் கலக்கும் பெருமூச்சுகள்.** *(1983)*
- **நடந்தாய் வாழி, வழுக்கியாறு.** *(1984)*
- **கிடுகுவேலி.** *(1984)*
- **ஓ அந்த அழகிய பழைய உலகம்.** *(1984)*
- **மழைக்காலம்.** *(ஏப்ரல் 1988)*
- **தீம்தரிகிட தித்தோம்.** *(ஜூன் 1988)*
- **மண்ணின் தாகம்.** *(1989)*
- **இந்த நாடு உருப்படாது.** *(1989)*
- **மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து.** *(1989)*
- **ஒரு மைய வட்டங்கள்.** *(ஜனவரி 1991)*
- **யாக குண்டம்.** *(தை 1991)*
- **ஜன்மபூமி.** *(ஏப்ரல் 1991)*
- **அக்கினி.** *(1991)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **செங்கை ஆழியான் நாவல்கள்.** *(ஜனவரி 1992)*
- **காவோலை.** *(ஏப்ரல் 1994)*
- **கொழும்பு லொட்ஜ்.** *(டிசம்பர் 1998)*
- **மரணங்கள் மலிந்த பூமி.** *(ஏப்ரல் 2000)*
- **போரே நீ போ.** *(ஜூன் 2002)*
- **சாம்பவி.** *(ஏப்ரல் 2003)*
- **வானும் கனல் சொரியும்.** *(மே 2003)*
- **ஆயிரமாயிரம் ஆண்டுகள்.** *(டிசம்பர் 2005)*
- **யுத்த பூமி.** *(ஏப்ரல் 2006)*
- **மீண்டும் வருவேன்.** *(டிசம்பர் 2007)*
- **அலையின் கீதம்:** *(ஜனவரி 2008)*
- **மெல்ல இருள் இனி விலகும்.** *(ஓகஸ்ட் 2009)*
- **ருத்திர தாண்டவம்:** *(டிசம்பர் 2009)*
- **விடியலைத்தேடி.** *(2011)*
- **பனங்கூடல்** *(நவம்பர் 2015)*

## வரலாற்று நாவல்கள்

- **கடல் கோட்டை.** *(ஜனவரி 1985)*
- **கந்தவேள் கோட்டம்.** *(ஜனவரி 1991)*
- **குவேனி.** *(தை 1991)*
- **ஈழராஜா எல்லாளன்.** *(ஜனவரி 2004)*
- **மாமன்னன் சங்கிலியன்.** *(டிசம்பர் 2012)*

## சிறுகதைத் தொகுப்புகள்

- **இதயமே அமைதிகொள்:** *(ஓகஸ்ட் 1972)*
- **யாழ்ப்பாணத்து இராத்திரிகள்.** *(ஒக்டோபர் 1993)*
- **இரவுநேரப் பயணிகள்.** *(ஜனவரி 1995)*
- **கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும்.** *(ஏப்ரல் 2003)*
- **குந்தி இருக்க ஒரு குடிநிலம்:** *(ஜனவரி 2007)*
- **வற்றா நதி.** *(ஓகஸ்ட் 2007)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்துறைக் கட்டுரை நூல்கள்

- **யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுருட்டுக் கைத்தொழில்.***(ஏப்ரல் 1966)*
- **பிரபஞ்சம்: ஆய்வு.** *(ஜனவரி 1997)*
- **நானும் எனது நாவல்களும்.** *(ஆகஸ்ட் 2000)*
- **ஈழத்துச் சிறுகதை வரலாறு.** *(டிசம்பர் 2001)*
- **ஈழத்து தமிழ்ச் சிறுகதை வரலாறு.** *(டிசம்பர் 2001)*
- **சுனாமி: கடற்கோள் 26/12 (2004).** *(பெப்ரவரி 2005)*
- **பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி.** *(ஒகஸ்ட் 2006)*
- **கூடார வாழ்க்கை: பல்சுவை பல்துறைக் கட்டுரைத் தொகுப்பு.** *(ஒக்டோபர் 2007)*

## சிறுவர் இலக்கியங்கள்

- **ஞாயிற்றுத் தொகுதி.** *(ஜூலை 1979)*
- **சூரியனின் கதை.** *(ஒக்டோபர் 1986)*
- **சந்திரனின் கதை: சந்திரத் தரையியல்.** *(நவம்பர் 1986)*
- **பூமியின் கதை.** *(நவம்பர் 1986)*
- **ஆறுகால்மடம்: சிறுவர் நாவல்.** *(ஜனவரி 1991)*
- **பூதத் தீவுப் புதிர்கள்.** *(டிசம்பர் 1997)*
- **யாழ்ப்பாண தேசம்.** *(ஏப்ரல் 2006)*

## திரைப்படப் பிரதிகள்

- **பாடிப்பறந்த பறவைகள்: திரைக்கதை வசனம்.** *(கல்லச்சுப்பிரதி . இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றது. சேர்க்கை இலக்கம் 55180).*

## அறிவியல் நூல்கள்: சமூகக் கல்வி, சூழலியல்

- **சமூகக்கல்வி - தரம் 10.** *(ஓகஸ்ட் 1978)*
- **ஆறாந்தரப் படவேலை சமூகக் கல்வி.** *(ஜனவரி 1979)*
- **எட்டாந்தரப் படவேலை சமூகக் கல்வி.** *(ஜனவரி 1981)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **வரலாறும் சமூகக் கல்வியும்-படவேலைப் பயிற்சிகள் செயல்நூல்-ஆண்டு 11.** *(1993)*
- **சுற்றுச் சூழலியல்: சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும்.** *(ஏப்ரல் 1997)*
- **சூழலியல்.** *(ஏப்ரல் 1997)*
- **புதிய சமூகக் கல்வி பயிற்சிகள் (வினா-விடைகள்) தரம் 10.** *(0000)*

## அறிவியல் நூல்கள்: புவியியல்

---

- **இலங்கைப் புவியியல்.** *(ஓகஸ்ட் 1963)*
- **உலகப் புவியியல்** *(டிசம்பர் 1964)*
- **படவரைகலையில் எறியங்கள்: உயர்தர வகுப்பிற்குரியது.** *(ஏப்ரல் 1965)*
- **படவரைகலையில் வரைபடங்கள்.** *(ஜூலை 1966)*
- **செய்கைமுறைப் படவேலை** *(பெப்ரவரி 1967)*
- **புவியியல் வழிகாட்டி: க.பொ.த.சாதாரண தரம்.** *(ஜூன் 1967)*
- **ஆரம்ப புவியியல் (உலகம், இலங்கை): படப்பயிற்சி - எட்டாம் வகுப்புக்குரியது.** *(ஜனவரி 1968)*
- **ஆரம்ப புவியியல்: எட்டாம் வகுப்புக்குரியது.** *(ஜனவரி 1968)*
- **க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குரிய பௌதிகப் புவியியல் வினா-விடை.** *(ஜனவரி 1968)*
- **புவியியல் தேசப்படத் தொகுதி: உலகம்- இலங்கை.** *(ஒக்டோபர் 1969)*
- **ஏழாந்தரப் புவியியல்.** *(ஜனவரி 1970)*
- **ஏழாந்தரப் புவியியற் படப் பயிற்சி** *(பெப்ரவரி 1970)*
- **இலங்கையின் புவிச்சரிதவியல்** *(செப்டெம்பர் 1970)*
- **புதிய புவியியல்: இலங்கை.** *(டிசம்பர் 1970)*
- **பொருளாதாரப் புவியியல்.** *(ஒக்டோபர் 1972)*
- **புவியியல் வினாவிடை: ஜீ.சீ.ஈ. பரீட்சை வினா விடைகள்:** ***1965-1971.*** *(ஒக்டோபர் 1972)*
- **புவிவெளியுருவவியல்.** *(ஜனவரி 1978)*
- **இந்தியத் துணைக்கண்டப் புவியியல்.** *(ஜனவரி 1978)*
- **பிரித்தானிய தீவுகளின் புவியியல்** *(மார்ச் 1978)*
- **விமான ஒளிப்படங்கள்.** *(டிசம்பர் 1978)*
- **ஐக்கிய அமெரிக்காவின்புவியியல்.** *(மே 1979)*
- **பௌதிகச் சூழல் நிலவுருவங்கள்.** *(ஜூன் 1979)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **படம்வரை கலை.** *(ஜூலை 1979)*
- **பௌதிகச் சூழல்: காலநிலையியல்.** *(ஒகஸ்ட் 1979)*
- **புதிய புவியியல் புள்ளிவிபரவியல்: அடிப்படைப் புள்ளிவிபரவியல்.** *(ஒகஸ்ட் 1980)*
- **புவியியல் புள்ளிவிபரவியல்.** *(ஒகஸ்ட் 1980)*
- **அபிவிருத்திப் புவியியல்: உலகப் பாங்குகள்.** *(ஜூன் 1985)*
- **அபிவிருத்திப் புவியியல்: இந்தியா.** *(ஒகஸ்ட் 1985)*
- **அபிவிருத்திப் புவியியல்: ஐக்கிய இராச்சியம்.** *(1986)*
- **படவேலை: இட விளக்கவியற் பயிற்சிகள்.** *(ஜூன் 1992)*
- **புள்ளிவிபரப் பட வரைகலையியல்.** *(செப்டெம்பர் 1994)*
- **பூமித் தாய்.** *(டிசம்பர் 1994)*
- **புவிவெளியுருவவியல்.** *(ஒகஸ்ட் 1995)*
- **சுற்றாடற் புவியியல்.** *(ஒக்டோபர் 1995)*
- **மானிடப் புவியியல்.** *(ஜனவரி 1997)*
- **இடவிளக்கவியற் படங்கள்.** *(மார்ச் 1997)*
- **அடிப்படைப் புவியியல்: இலங்கை, உலகம்-தரம் 10,11.** *(செப்டெம்பர் 2005)*
- **பௌதிகப் புவியியல்-2: சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும்.** *(நவம்பர் 2009)*
- **புவியியல்: மாதிரி வினா-விடை: 6ஆம் தரம்: (மூன்றாம் பருவம்).** *(0000)*
- **மாணவர் இலகு தேசப்படத் தொகுதி.** *(0000)*

## அறிவியல் நூல்கள்: பொது அறிவு, பொது உளச்சார்பு

- **பொது அறிவு: பகுதி 1.** *(டிசம்பர் 1981)*
- **பொது அறிவு: பகுதி 2.** *(டிசம்பர் 1981)*
- **ஏன் எப்படி எவரால்?** *(பெப்ரவரி 1982)*
- **பொது அறிவு.** *(1982)*
- **பொது உளச்சார்பு.** *(1989)*
- **கிரகித்தல்.** *(ஏப்ரல் 1990)*
- **ஆய்ந்தறிதல் திறன்.** *(ஜனவரி 1992)*
- **பொது விவேகப் பயிற்சிகள்.** *(ஒகஸ்ட் 1992)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **ஆய்ந்தறிதல் திறன்.** *(ஜனவரி 1993)*
- **ஆய்ந்தறிதல் திறன்: புதிர்கள் (Puzzles).** *(ஜனவரி 1993)*
- **நுண்ணறிவு.** *(ஜூன் 1994)*
- **உங்கள் பொது உளச்சார்பு.** *(ஜனவரி 2005)*
- **பொது அறிவுச் (N)சாதனை: Your IQ.** *(ஏப்ரல் 2006)*

## அறிவியல் நூல்கள்: வரலாற்று நூல்கள்

- **இருபத்திநான்கு மணிநேரம்.** *(ஒக்டோபர் 1977)*
- **பன்னிரண்டு மணிநேரம்.** *(1979)*
- **மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது.** *(ஜூலை 1981)*
- **நல்லை நகர் நூல்.** *(1987)*
- **ஈழத்தவர் வரலாறு: கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ம் ஆண்டு வரை.** *(ஆகஸ்ட் 1992)*
- **வரலாறும் சமூகக் கல்வியும்-படவேலைப் பயிற்சிகள் செயல்நூல்-ஆண்டு 11.** *(1993)*
- **களம்பல கண்ட யாழ். கோட்டை: யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு.** *(பெப்ரவரி 1995)*
- **யாழ்ப்பாண அரசபரம்பரை.** *(ஏப்ரல் 2000)*
- **மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை: ஒரு மீள்வாசிப்பு.** *(ஒக்டோபர் 2001)*
- **ஆ.முத்துத்தம்பிப் பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம் 1912: ஒரு மீள்வாசிப்பு.** *(ஒக்டோபர் 2001)*
- **எஸ். ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம் 1878: ஒரு மீள்வாசிப்பு.** *(டிசம்பர் 2002)*
- **The Jaffna Dynasty: Vijayakalingan to Narasinghan-Royal History at it's Magnificient Best.** (February 2003)
- **மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம்.** *(செப்டெம்பர் 2003)*
- **சுவாமி ஞானப்பிரகாசரின் யாழ்ப்பாண வைபவ விமர்சனம்: தமிழுர் உகம் 1928.** *(ஜூலை 2004)*
- **நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்: வரலாறு.** *(ஜூலை 2005)*
- **பூதத்தம்பி.** *(2006)*
- **சூளவம்சம் கூறும் இலங்கை வரலாறு.** *(ஜனவரி 2008)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **இலங்கைச் சுருக்க வரலாறு: கி.மு.6ஆம் நூற்றாண்டு முதல் 2007 வரை.** *(ஏப்ரல் 2008)*
- **எச்சாட்டி அம்மன் ஆலய வரலாறு.** *(செப்டெம்பர் 2012)*
- **யாழ்ப்பாணம் பாரீர்.** *(2015)*
- **வரலாறு ஆண்டு 11 (புதிய பாடத்திட்டம்).** *(0000)*

## செங்கை ஆழியான் தொகுத்த நூல்கள்

- **கதைப் பூங்கா.** *(1962)*
- **மறுமலர்ச்சிக் கதைகள்.** *(டிசம்பர் 1997)*
- **சம்பந்தன் சிறுகதைகள்.** *(ஜனவரி 1998)*
- **ஈழகேசரிச் சிறுகதைகள்.** *(ஒக்டோபர் 2000)*
- **ஈழத்து முன்னோடிச் சிறுகதைகள்.** *(ஜூன் 2001)*
- **சுதந்திரன் சிறுகதைகள்.** *(ஏப்ரல் 2002)*
- **மல்லிகைச் சிறுகதைகள்.** *(ஜூன் 2002)*
- **மல்லிகைச் சிறுகதைகள்: இரண்டாம் தொகுதி.** *(மார்ச் 2003)*
- **சிங்களச் சிறுகதைகள்.** *(ஜனவரி 2004)*
- **தேவன் யாழ்ப்பாணம் சிறுகதைகள்.** *(மே 2004)*
- **ஈழநாடு சிறுகதைகள்: தொகுதி - 1.** *(2008)*
- **கனகசெந்தி கதாவிருது பெற்ற சிறுகதைகள்: தொகுதி 1** *(2003-2007). (ஜூலை 2008)*
- **பூ (சிறுகதைகள்).** *(ஏப்ரல் 2009)*
- **முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள்.** *(மாசி 2010)*

## செங்கை ஆழியான் பற்றிய நூல்கள்

- **செங்கை ஆழியான் நாவல்கள்: ஒரு திறனாய்வு நோக்கு.** கந்தையா முருகதாசன். *(டிசம்பர் 2006)*
- **செங்கை ஆழியானின் வாழ்வும் படைப்புகளும்.** ரேணுகா பிரதீபகுமார் *(ஜனவரி 2007)*
- **சாகித்தியரத்னா செங்கைஆழியான் நேர்காணல்.** *(2013)*
- **செங்கை ஆழியான் நினைவலைகள்.** *(மார்ச் 2016)*
- **ஜீவநதி செங்கை ஆழியான் சிறப்பிதழ்.** *(வைகாசி 2016)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களின் தலைப்புப் பட்டியல்

- *அக்கினி (1991)*
- *அக்கினிக்குஞ்சு (1983)*
- *அடிப்படைப் புவியியல்: இலங்கை, உலகம்-தரம் 10,11. (2005)*
- *அபிவிருத்திப் புவியியல்: இந்தியா (1985)*
- *அபிவிருத்திப் புவியியல்: உலகப் பாங்குகள் (1985)*
- *அபிவிருத்திப் புவியியல்: ஐக்கிய இராச்சியம் (1986)*
- *அலையின் கீதம்: நாவல் (2008)*
- *ஆ.முத்துத்தம்பிப் பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம் 1912: ஒரு மீள்வாசிப்பு (2001)*
- *ஆச்சி பயணம் போகிறாள் (1969)*
- *ஆய்ந்தறிதல் திறன் (1992).*
- *ஆய்ந்தறிதல் திறன் (1993)*
- *ஆய்ந்தறிதல் திறன்: புதிர்கள்* (Puzzles) *(1993)*
- *ஆயிரமாயிரம் ஆண்டுகள் (2005)*
- *ஆரம்ப புவியியல் (உலகம், இலங்கை): படப்பயிற்சி - எட்டாம் வகுப்புக்குரியது. (1968)*
- *ஆரம்ப புவியியல்: எட்டாம் வகுப்புக்குரியது (1968)*
- *ஆறாந்தரப் படவேலை சமூகக் கல்வி (1979)*
- *ஆறுகால்மடம்: சிறுவர் நாவல் (1991)*
- *இடவிளக்கவியற் படங்கள் (1997)*
- *இதயமே அமைதிகொள்: சிறுகதைத் தொகுதி (1972)*
- *இந்த நாடு உருப்படாது (1989)*
- *இந்தியத் துணைக்கண்டப் புவியியல் (1978)*
- *இரவின் முடிவு (1976)*
- *இரவுநேரப் பயணிகள் (1995)*
- *இருபத்திநான்கு மணிநேரம் (1977)*
- *இலங்கைச் சுருக்க வரலாறு: கி.மு.6ஆம் நூற்றாண்டு முதல் 2007 வரை (2008)*
- *இலங்கைப் புவியியல் (1963)*
- *இலங்கையின் புவிச்சரிதவியல் (1970)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஈழகேசரிச் சிறுகதைகள் *(2000)*
- ஈழத்தவர் வரலாறு: கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ம் ஆண்டு வரை *(1992)*
- ஈழத்து முன்னோடிச் சிறுகதைகள் *(2001)*
- ஈழத்துச் சிறுகதை வரலாறு *(2001)*
- ஈழத்து தமிழ்ச் சிறுகதை வரலாறு *(2009)*
- ஈழநாடு சிறுகதைகள்: தொகுதி1 *(2008)*
- ஈழராஜா எல்லாளன் *(2004)*
- உங்கள் பொது உளச்சார்பு *(2005)*
- உலகப் புவியியல்: க.பொ.த. பத்திர சாதாரண வகுப்பிற்கும் உயர்தர வகுப்பிற்கும் உரியது *(1964)*
- எச்சாட்டி அம்மன் ஆலய வரலாறு *(2012)*
- எட்டாந்தரப் படவேலை சமூகக் கல்வி *(1981)*
- எஸ்.ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம் 1878: ஒரு மீள்வாசிப்பு *(2002)*
- ஏழாந்தரப் புவியியல் *(1970)*
- ஏழாந்தரப் புவியியற் படப் பயிற்சி *(1970)*
- ஏன் எப்படி எவரால்? *(1982)*
- ஐக்கிய அமெரிக்காவின்புவியியல் *(1979)*
- ஒரு மைய வட்டங்கள் *(1991)*
- ஓ அந்த அழகிய பழைய உலகம் *(1984)*
- க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குரிய பௌதிகப் புவியியல் வினா-விடை. *(1968)*
- கங்கைக் கரையோரம் *(1978)*
- கதைப் பூங்கா *(1962)*
- கந்தவேள் கோட்டம் *(1991)*
- கடல் கோட்டை *(1985)*
- களம்பல கண்ட யாழ். கோட்டை: யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு *(1995)*
- கனகசெந்தி கதாவிருது பெற்ற சிறுகதைகள்: (2003-2007) தொகுதி 1 *(2008)*
- கனவுகள் கற்பனைகள் ஆசைகள் *(1981)*
- காட்டாறு *(1977)*
- காவோலை *(1994)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *காற்றில் கலக்கும் பெருமூச்சுகள் (1983)*
- *கிடுகுவேலி (1984)*
- *கிரகித்தல் (1990)*
- *குந்தி இருக்க ஒரு குடிநிலம்: சிறுகதைகள் (2007)*
- *குவேனி (1991)*
- *கூடார வாழ்க்கை: பல்சுவை பல்துறைக் கட்டுரைத் தொகுப்பு (2007)*
- *கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும் (2003)*
- *கொத்தியின் காதல்: நகைச்சுவை நவீனம் (1975)*
- *கொழும்பு லொட்ஜ் (1998)*
- *சந்திரனின் கதை: சந்திரத் தரையியல் (1986)*
- *சம்பந்தன் சிறுகதைகள் (1998)*
- *சமூகக்கல்வி - தரம் 10. (1978)*
- *சாகித்தியரத்னா செங்கைஆழியான் நேர்காணல் (2013)*
- *சாம்பவி (2003)*
- *சிங்களச் சிறுகதைகள் (2004)*
- *சித்திரா பௌர்ணமி: குறுநாவல் (1972)*
- *சுதந்திரன் சிறுகதைகள் (2002)*
- *சுவாமி ஞானப்பிரகாசரின் யாழ்ப்பாண வைபவ விமர்சனம்: தமிழர் உகம் (2004)*
- *சுற்றாடற் புவியியல் (1995)*
- *சுற்றுச் சூழலியல்: சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும் (1997)*
- *சுனாமி: கடற்கோள் 26/12 (2004) (2005)*
- *சூரியனின் கதை (1986)*
- *சூழலியல் (1997)*
- *சூளவம்சம் கூறும் இலங்கை வரலாறு (2008)*
- *செங்கை ஆழியான் நாவல்கள் (1992)*
- *செங்கை ஆழியான் நாவல்கள்: ஒரு திறனாய்வு நோக்கு (2006)*
- *செங்கை ஆழியான் நினைவலைகள் (2016)*
- *செங்கை ஆழியானின் வாழ்வும் படைப்புகளும் (2007)*
- *செய்கைமுறைப் படவேலை (1967)*
- *ஞாயிற்றுத் தொகுதி (1979)*
- *தீம்தரிகிட தித்தோம் (1988)*
- *தேவன் யாழ்ப்பாணம் சிறுகதைகள் (2004)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *நடந்தாய் வாழி, வழுக்கியாறு (1984)*
- *நந்திக் கடல் (1969)*
- *நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்: வரலாறு (2005)*
- *நல்லை நகர் நூல் (1987)*
- *நானும் எனது நாவல்களும் (2000)*
- *நுண்ணறிவு (1994)*
- *படவரைகலையில் எறியங்கள்: உயர்தர வகுப்பிற்குரியது (1965)*
- *படவரைகலையில் வரைபடங்கள் (1966)*
- *படவேலை: இட விளக்கவியற் பயிற்சிகள் (1992)*
- *படம்வரை கலை (1979)*
- *பன்னிரண்டு மணிநேரம் (1979)*
- *பனங்கூடல் (2015)*
- *பாடிப்பறந்த பறவைகள்: திரைக்கதை வசனம்(0000)*
- *பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி (2006)*
- *பிரபஞ்சம்: ஆய்வு (1997)*
- *பிரளயம் (1975)*
- *பிரித்தானிய தீவுகளின் புவியியல் (1978)*
- *புதிய சமூகக் கல்வி பயிற்சிகள் (வினா-விடைகள்) தரம் 10. (0000)*
- *புதிய புவியியல்: இலங்கை (1970)*
- *புதிய புவியியல் புள்ளிவிபரவியல்: அடிப்படைப் புள்ளிவிபரவியல் (1980)*
- *புவிவியல் தேசப்படத் தொகுதி: உலகம்- இலங்கை (1969)*
- *புவியியல் புள்ளிவிபரவியல் (1980)*
- *புவியியல்: மாதிரி வினா-விடை: 6ஆம் தரம்: (மூன்றாம் பருவம்) (0000)*
- *புவியியல் வழிகாட்டி: க.பொ.த.சாதாரண தரம் (1967)*
- *புவியியல் வினாவிடை: ஜீ.சீ.ஈ. பரீட்சை வினா விடைகள்: 1965-1971 (1972)*
- *புவிவெளியுருவவியல் (1978)*
- *புவிவெளியுருவவியல் (1995)*
- *புள்ளிவிபரப் படவரைகலையியல் (1994)*
- *பூ (சிறுகதைகள்) (2009)*
- *பூதத்தம்பி (2006)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *பூதத் தீவுப் புதிர்கள் (1997)*
- *பூமித் தாய் (1994)*
- *பூமியின் கதை (1986)*
- *பொது அறிவு (1982)*
- *பொது அறிவு: பகுதி 1 (1981)*
- *பொது அறிவு: பகுதி 2 (1981)*
- *பொது அறிவுச் (N)சாதனை:* Your IQ *(2006)*
- *பொது உளச்சார்பு (1989)*
- *பொது விவேகப் பயிற்சிகள் (1992)*
- *பொருளாதாரப் புவியியல் (1972)*
- *போரே நீ போ (2002)*
- *பௌதிகச் சூழல்: காலநிலையியல் (1979)*
- *பௌதிகச் சூழல் நிலவுருவங்கள் (1979)*
- *பௌதிகப் புவியியல்-2: சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும் (2009)*
- *மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம் (2003)*
- *மண்ணின் தாகம் (1989)*
- *மரணங்கள் மலிந்த பூமி (2005)*
- *மல்லிகைச் சிறுகதைகள் (2002)*
- *மல்லிகைச் சிறுகதைகள்: இரண்டாம் தொகுதி (2003)*
- *மழைக்காலம் (1988)*
- *மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து (1989)*
- *மறுமலர்ச்சிக் கதைகள் (1997)*
- *மாணவர் இலகு தேசப்படத் தொகுதி (0000)*
- *மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை: ஒரு மீள்வாசிப்பு (2001)*
- *மாமன்னன் சங்கிலியன் (2012)*
- *மானிடப் புவியியல் (1997)*
- *மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது (1981)*
- *மீண்டும் வருவேன் (நாவல்) (2007)*
- *முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள் (2010)*
- *முற்றத்து ஒற்றைப்பனை (1972)*
- *மெல்ல இருள் இனி விலகும் (2009)*
- *யாக குண்டம் (1991)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *யாழ்ப்பாண அரசபரம்பரை (2000)*
- *யாழ்ப்பாண தேசம் (2006)*
- *யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுருட்டுக் கைத்தொழில் (1966)*
- *யாழ்ப்பாணத்து இராத்திரிகள் (1993)*
- *யாழ்ப்பாணம் பாரீர் (2015)*
- *யானை (1978)*
- *யுத்த பூமி (2006)*
- *ருத்திர தாண்டவம்: நாவல் (2009)*
- *வரலாறு ஆண்டு 11 புதிய பாடத்திட்டம் (0000)*
- *வரலாறும் சமூகக் கல்வியும்-படவேலைப் பயிற்சிகள் செயல்நூல்-ஆண்டு 11 (1993)*
- *வற்றா நதி (2007)*
- *வாடைக்காற்று (1973)*
- *வானும் கனல் சொரியும் (2003)*
- *விடியலைத்தேடி (2011)*
- *விமான ஒளிப்படங்கள் (1978)*
- *ஜன்மபூமி (1991)*
- *ஜீவநதி செங்கை ஆழியான் சிறப்பிதழ் (2016)*
- The Jaffna Dynasty: Vijayakalingan to Narasinghan-Royal History at it's Magnificient Best. (2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கை ஆழியானின் படைப்புலகம்
## (ஆண்டுவாரியான பிரதான பதிவு)

## 1962

**கதைப் பூங்கா.** க.குணராசா, க.நவசோதி (தொகுப்பாசிரியர்கள்). பேராதனை: பல்கலை வெளியீடு, பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1962. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

(6), 112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மாணவர்களாக பயின்று கொண்டிருந்த செங்கை ஆழியான், நவசோதி, செம்பியன் செல்வன் ஆகியோர் உள்ளிட்ட ஒரு குழுவினர் இணைந்து பல்கலை வெளியீடு என்னும் அமைப்பை உருவாக்கி ஆண்டுக்கொரு சிறுகதைத் தொகுதியை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். கதைப்பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள், யுகம், என்னும் நான்கு தொகுதிகளையும் வெளியிட்டனர். அவற்றில் செங்கை ஆழியான் தொகுத்திருந்த சிறுகதைத் தொகுப்பே இதுவாகும். பேராசிரியர் க.கைலாசபதியின் முன்னுரையுடன் வெளிவந்துள்ள இச்சிறுகதைத் தொகுதியில் அன்று மாணவர்களாயிருந்து, இன்று பிரபல்யமாகியுள்ள பல ஈழத்துப் படைப்பாளிகளின் ஆரம்பகாலக் கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. செ.யோகநாதன் (மலர்கள்), க.குணராசா (அவன் சமாதியில்), கோகிலா மகேந்திரன் (சமரசம்), வெ.கோபாலகிருஷ்ணன் (இடி விழ), அங்கையன் (சுவடு), வாணி (இறைவன் எங்கே), செ.கதிர்காமநாதன் (எட்டு மாதங்கள்), எம்.ஏ.எம்.சுக்ரி (வாரிசு), அ.சண்முகதாஸ் (ஏமாற்றம்), செம்பியன் செல்வன் (பாதி மலர்), முத்து சிவஞானம் (இறுதி மூச்சு), க.நவசோதி (வாழ்க்கைத் துணை) ஆகிய 12 கதாசிரியர்களின் பன்னிரு கதைகள் இங்கு இடம்பெற்றுள்ளன.

## 1963

**இலங்கைப் புவியியல்.** க.குணராஜா. யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, 5, சீனியர் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1963. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

188 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 3.75, அளவு: 18x12.5 சமீ.

க.பொ.த. சாதாரண வகுப்பிற்கு ஏற்ற முறையில் புதிய கலைச்சொற்களைக் கையாண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. புவியியல் பற்றிய விபரங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாக விளக்குவதற்காக ஆங்காங்கு விளக்கப்படங்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

**இலங்கைப் புவியியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, இல. 5, சீனியர் ஒழுங்கை, 2வது பதிப்பு, மார்ச் 1965, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1963. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம், 319, காங்கேசன்துறை வீதி).

(10), 11-170 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 3.75, அளவு: 21x14 சமீ.

இந்நூல் இலங்கையின் நிலையமும், பருப்பமும், இலங்கையின் தரைத்தோற்றம், இலங்கையின் காலநிலை, இலங்கையின் காலநிலைப் பிரதேசங்கள், இலங்கையின் இயற்கைத் தாவரம், இலங்கையின் பயிர்ச்செய்கை, இலங்கையின் கனிப் பொருட்கள், இலங்கையின் கைத்தொழில்கள், இலங்கையின் மீன்பிடித் தொழில், இலங்கையின் போக்குவரத்து வசதிகள், இலங்கையின் குடிப்பரம்பல், இலங்கையின் வர்த்தகம், தென்மேல் பிரதேசம், களனிகங்கை வடிநிலம், கொழும்புத் துறைமுகம், மலைநாடு, ஊவா வடிநிலம், கற்றன் மேட்டுநிலம், கண்டி மேட்டுநிலம், வரண்ட பிரதேசம், மகாவலி கங்கை வடிநிலம், யாழ்ப்பாணக் குடாநாடு ஆகிய பாடப்பிரிவுகளை தனித்தனியாக விளக்குகின்றது. நூலின் இறுதியில் மாதிரி வினா-விடைகளும், கேள்விகளும், கலைச்சொற்றொகுதி ஒன்றும் இடம்பெற்றுள்ளன.

**இலங்கைப் புவியியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: வி.மகாலிங்கம், ரேகா வெளியீடு, 2/1, 1வது ஒழுங்கை, பிறவுன் வீதி, நீராவியடி, திருத்திய பதிப்பு, மார்ச் 1973, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1963, 2வது பதிப்பு, மார்ச் 1965. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

176 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 5.00, அளவு: 21x14 சமீ.

இலங்கை அறிமுகம், இலங்கையின் தரைத்தோற்றம், இலங்கையின் அமைப்பு, இலங்கையின் காலநிலை, காலநிலைப் பிரதேசங்களும் இயற்கைத் தாவரமும், இலங்கையின் சுயதேவைக்குரிய பயிர்கள், இலங்கையின் வர்த்தகத்திற்குரிய பயிர்கள், இலங்கையின் கனிப்பொருட்கள், இலங்கையின் கைத்தொழில்கள், விலங்கு வேளாண்மை, இலங்கையின் மீன்பிடித் தொழில், இலங்கையின் குடிப்பரம்பல், இலங்கையின் வர்த்தகமும் போக்குவரத்து வசதிகளும், தென் மேல் தாழ்நிலம், மலைநாடு, உலர் பிரதேசத் தாழ்நிலங்கள், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள், யாழ்ப்பாணக் குடாநாடு ஆகிய பாடத் தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கைப் புவியியல்.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, புதிய பதிப்பு, ஜனவரி 1994, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1963. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு).*

viii, *276 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 100., அளவு: 21x14 சமீ.*

**இலங்கைப் புவியியல்.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, புதிய பதிப்பு, செப்டெம்பர் 2002, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1963, திருத்திய 22ம் பதிப்பு, செப்டெம்பர் 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*265 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ.*

*கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கைப் பாடசாலைகளின் தமிழ்மூல புவியியல் மாணவர்களின் ஏகபோக உப பாடநூலாக விளங்கிய நூல் இது. 'இலங்கையின் அமைப்பியல்" (இலங்கையின் கல்லியல், இலங்கையின் தோற்றம், இலங்கையின் உருவாக்கம், இலங்கையின் அமைவிடமும் தரைத்தோற்றமும், இலங்கையின் மண் வகைகள், இலங்கையின் கனிய வளங்கள், இலங்கையின் காடுகள்), 'இலங்கையின் காலநிலையியல்" (இலங்கையின் காலநிலைக் கட்டுப்பாடுகள், இலங்கையின் வெப்பநிலை, இலங்கையின் மழை வீழ்ச்சி, இலங்கையின் காலநிலைப் பிரதேசங்கள், இலங்கையின் இயற்கைத் தாவரம்), 'இலங்கையின் மக்களியல்" (இலங்கையின் குடித்தொகை, இலங்கையின் குடிப்பரம்பல், இலங்கையின் குடியமைப்பு, இலங்கையின் குடியிருப்புக்கள் - நகராக்கம்), 'இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள்" (இலங்கையின் நெற்செய்கை, இலங்கையின் பெருந்தோட்டங்கள், இலங்கையின் நீர்பாசனத் திட்டங்களும் குடியேற்றத் திட்டங்களும், இலங்கையின் கைத்தொழில்கள், இலங்கையின் மீன்பிடித் தொழில்), 'இலங்கையின் அபிவிருத்தியியல்" (இலங்கையின் துரித மகாவலித் திட்டம், இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள், இலங்கையின் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள், இலங்கையின் சமூகநலத் திட்டங்கள்) ஆகிய 5 தலைப்புகளின் கீழ் இலங்கைப் புவியியல் இந்நூலில் பதிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளது.*

**இலங்கைப் புவியியல்.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 20ஆவது பதிப்பு, ஜூலை 1988, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1963, (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).*
*(4), 120 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 25.00, அளவு: 21x14 சமீ.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களின் தேவையைக் கவனத்திற்கொண்டு திருத்திய புதுக்கிய பதிப்பாக வெளிவந்துள்ளது. இந்நூலின் அணுகுமுறை 'அபிவிருத்திப் புவியியல்" பாங்கானது. இதில் உள்ள ஏழு அத்தியாயங்களும் பௌதிக நிலைமை, வரலாற்று நிகழ்வுகள், பொருளாதார நடவடிக்கைகள், பெருந்தோட்டப் பயிர்கள், கைத்தொழில் நடவடிக்கைகள், இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகள், சமூக நிலைமைகள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.

**இலங்கைப் புவியியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா வெளியீடு, ஸ்ரீலங்கா புத்தக சாலை, காங்கேசன்துறை வீதி, 21ஆவது பதிப்பு, ஆவணி 1995, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1963, திருத்திய 20வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).
viii, 268 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 140., அளவு: 21x14.5 சமீ.

கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கைப் பாடசாலைகளின் தமிழ்மூல புவியியல் மாணவர்களின் ஏகபோக உப பாடநூலாக விளங்கிய நூல் இது. இலங்கையின் அமைப்பியல், இலங்கையின் காலநிலையியல், இலங்கையின் மக்களியல், இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள், இலங்கையின் அபிவிருத்தியியல் ஆகிய 5 தலைப்புகளின் கீழ் இலங்கைப் புவியியல் பதிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

## 1964

**உலகப் புவியியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, 550/7, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, ஜனவரி 1966, 1வது பதிப்பு, டிசம்பர் 1964. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம், 319, காங்கேசன்துறை வீதி).
332 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 6.80, அளவு: 20x14 சமீ.

க.பொ.த. பத்திர சாதாரண வகுப்பிற்கும் உயர்தர வகுப்பிற்கும் உரியது. நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலில் 'பௌதிகப் புவியியல்" என்ற முதலாம் பகுதியில் பூமி-பொதுவியல்புகள், புவியோடு, நிலப்பரப்பும் நீர்ப்பரப்பும், ஆசியாவின் தரைத் தோற்றம், ஆபிரிக்காவின் தரைத் தோற்றம், வட அமெரிக்காவின் தரைத் தோற்றம், தென் அமெரிக்காவின் தரைத் தோற்றம், ஐரோப்பாவின் தரைத் தோற்றம், அவுஸ்திரேலியாவின் தரைத் தோற்றம், காலநிலையும் வானிலையும், வெப்பநிலை, அமுக்கமும் காற்றுக்களும், மழைவீழ்ச்சி, காலநிலைப் பிரதேசங்கள், இயற்கைத் தாவரம்- காடுகள் ஆகிய 15 பாடங்களும், 'மக்கட் புவியியல்" என்ற இரண்டாம் பகுதியில் உலக மக்கள், உலக நாடுகளின் குடித்தொகை விபரங்கள் ஆகிய பாடங்களும், 'பொருளாதாரப் புவியியல்" என்ற மூன்றாம் பகுதியில் பொருளாதார நடவடிக்கைகள், தானிய வகைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான வகைகள், கைத்தொழிற் பயிர்கள், மீன்பிடித் தொழில், விலங்கு வேளாண்மை, காடுகளும் காட்டுத் தொழில்களும், வலுப் பொருட்களும் உலோகப் பொருட்களும், உலகின் பிரதான கைத்தொழிற் பிரதேசங்கள், போக்குவரத்து வசதிகள் ஆகிய பாடங்களும், இறுதியாக 'பிரதேசப் புவியியல்" என்ற நான்காம் பகுதியில் ஆசியா, இந்தியா, யப்பான், சீனா, தென்கிழக்காசிய நாடுகள், உலகின் சில நதி வடிநிலங்கள் ஆகிய பாடங்களுமாக மொத்தம் 32 பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**உலகப் புவியியல்.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 5ஆவது பதிப்பு, ஒக்டோபர் 1972, 1வது பதிப்பு, டிசம்பர் 1964, 2வது பதிப்பு, ஜனவரி 1966, 3வது பதிப்பு, நவம்பர் 1970, 4வது பதிப்பு, நவம்பர் 1970. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).*
*371 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 6.75, அளவு: 20x14 சமீ.*

க.பொ.த. பத்திர சாதாரண வகுப்பிற்கும் உயர்தர வகுப்பிற்கும் உரியது. பௌதிகப் புவியியல், மக்கட் புவியியல், பொருளாதாரப் புவியியல், பிரதேசப் புவியியல் ஆகிய நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலில் 2வது பதிப்பில் இடம்பெற்ற 'இயற்கைத் தாவரம்-காடுகள்" என்ற பாடம் மாத்திரம் நீக்கப்பட்டு முப்பத்தியொரு பாடங்களாக்கப்பட்டுள்ளன.

## 1965

**படவரைகலையில் எறியங்கள்: உயர்தர வகுப்பிற்குரியது.** *க.குணராஜா. யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, இல.5, சீனியர் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1965. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம்).*
*(7), 104 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 3.60, அளவு: 21.5x14 சமீ.*

Projection எனப்படும் எறியங்கள், படவரைகலையில் பயன்படுத்தப்படும் வகைமுறைகளை இந்நூல் விளக்குகின்றது. அகலநெடுங்கோடுகள் எனும் கற்பனைக்கோடுகள், எறியங்கள், உச்சியெறியங்கள், கூம்பெறியங்கள், உருளையெறியங்கள், எறியங்களைத் தெரிவுசெய்தல் ஆகிய ஆறு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**படவரைகலையில் எறியங்கள்: உயர்தர வகுப்பிற்குரியது.** *க.குணராஜா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 6வது பதிப்பு, டிசம்பர் 1999, 1வது பதிப்பு, ஏப்ரல் 1965. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு).*
*(4), 94 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படவரைகலையில் எறியங்கள்: உயர்தர வகுப்பிற்குரியது.** க.குணராஜா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 7வது பதிப்பு, ஒகஸ்ட் 2002, 1வது பதிப்பு, ஏப்ரல் 1965. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை).

88 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 120., அளவு: 21x14 சமீ.

Projection எனப்படும் எறியங்கள், படவரைகலையில் பயன்படுத்தப்படும் வகைமுறைகளை இந்நூல் விளக்குகின்றது. எறியங்கள், உச்சியெறியங்கள், கூம்பெறியங்கள், உருளையெறியங்கள், எறியங்களைத் தெரிவுசெய்தல் ஆகிய ஐந்து அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கும் பொதுக்கலைத்தேர்வு மாணவர்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் இந்நூலை ஆசிரியர் ஆக்கியுள்ளார்.

## 1966

**யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுருட்டுக் கைத்தொழில்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், மாநகரசபை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1966. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194 ஏ, பண்டாரநாயக்க வீதி).
66 பக்கம், வரைபடம், அட்டவணை, விலை: ரூபா 1.00, அளவு: 19x13.5 சமீ.

சுருட்டுக் கைத்தொழில், சுருட்டுத் தொழிலின் பரம்பல், சுருட்டுத் தொழிலின் தேவைகள், சுருட்டுக்களின் வகைகள், சுருட்டுத் தொழிலாளர், சுருட்டுச் சந்தைகள், சுருட்டுக் கைத்தொழிலின் எதிர்காலம் ஆகிய ஏழு அத்தியாயங்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் புவியியல் விரிவுரையாளராகப் பணியாற்றிய வேளையில் இவ்வாய்வினை மேற்கொண்டிருந்தார். இந் நூலுக்கான அணிந்துரையை கனக செந்திநாதன் வழங்கியுள்ளார்.

**படவரைகலையில் வரைபடங்கள்.** க.குணராஜா. யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, 550/7, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜூலை 1966. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).
133 பக்கம், புகைப்படங்கள், தேசப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களின் புவியியல் பாடத்தில் ஒரு வினாப் பத்திரமான படவரை கலை தொடர்பாக எழுதப்பட்ட நூல் இது. புள்ளிவிபரங்களைக் கையாளும் முறை, படவரை கலை தொடர்பான எளியமுறைகள் என்பன இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் 1966ம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியல்துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றியவேளையில் எழுதப்பட்ட நூல்.

## 1967

**செய்கைமுறைப் படவேலை.** க.குணராசா, ஆ.இராஜகோபால், க.பரமேஸ்வரன். யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, 550/7, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1967. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32, கண்டி வீதி).

84 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 3.80, அளவு: 28x22 சமீ.

**செய்கைமுறைப் படவேலை.** க.குணராசா, ஆ.இராஜகோபால், க.பரமேஸ்வரன். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு, 234 காங்கேசன்துறை வீதி, 7வது பதிப்பு, பெப்ரவரி 1972, 1வது பதிப்பு, பெப்ரவரி 1967. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

(2), 114 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 4.00, அளவு: 28x22 சமீ.

**செய்கைமுறைப் படவேலை.** க.குணராசா, ஆ.இராஜகோபால், க.பரமேஸ்வரன். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு, 234 காங்கேசன்துறை வீதி, 9வது பதிப்பு, பெப்ரவரி 1978, 1வது பதிப்பு, பெப்ரவரி 1967. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

(2), 114 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 9.50, அளவு: 28x22 சமீ.

க.பொ.த. சாதாரண வகுப்புக்குரிய பாடத்திட்டத்திற்கு அமைவானது. சமவுயரக் கோட்டுப்பட விளக்கம், சமவுயரக் கோட்டுப் பயிற்சிகள், தேசப்படத் தொகுதி, உலகப் படப் பயிற்சிகள், இலங்கைப் படப் பயிற்சிகள் என ஐந்து பிரிவுகளாக இந்நூல் வகுக்கப்பட்டுள்ளது. படப்பயிற்சிகளுக்குத் தேவையான விபரங்கள் யாவும் உள்ளதால், உலக, இலங்கைப் படப் பயிற்சிகளுக்கு முன்னால் தேசப்படத் தொகுதியை இணைத்துள்ளார்கள். இந்நூலிலுள்ள 'சமவுயரக் கோட்டுப்பட விளக்கம்" என்னும் முதற் பகுதி க.குணராசாவினால் எழுதப்பட்டது. ஏனைய ஆக்கங்கள் இவ்வாசிரியர்கள் மூவரினதும் கூட்டு முயற்சியாகும்.

**புவியியல் வழிகாட்டி க.பொ.த.சாதாரண தரம்**: க.குணராஜா. யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, 550/7, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜூன் 1967.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

74 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 2.50, அளவு: 28x22 சமீ.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சைக்குரிய வினா-விடைகளை உள்ளடக்கியுள்ள இந்நூல், டிசம்பர் 1965 தொடக்கம் டிசம்பர் 1966 வரை வெளிவந்த க.பொ.த. புவியியல் வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் உள்ளடக்கியுள்ளது. டிசம்பர் 1965 புவியியல் 1,2, ஆகஸ்ட் 1966 புவியியல் 1,2, டிசம்பர் 1966 புவியியல் 1,2 ஆகிய ஆறு பரீட்சை வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் இந்நூல் கொண்டுள்ளது.

## 1968

**ஆரம்ப புவியியல் (உலகம், இலங்கை) படப்பயிற்சி - எட்டாம் வகுப்புக்குரியது:** க.குணராசா (மூலம்), வே.க.கந்தசாமி (மீள்பார்வை). யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, 550/7, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1968. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).
202 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், நிழற்படங்கள், விலை: ரூபா 4.80, அளவு: 28.5x20.5 சமீ.

118 விளக்கப்படங்கள், 15 நிழற்படங்கள், 60 பயிற்சிப்படங்கள் என ஏராளமான படங்களுடன் எட்டாம் வகுப்புக்குரிய இப்படப்பயிற்சி நூல் எழுதப்பட்டுள்ளது. 'உலகம்" என்ற முதலாம் பகுதியில் நமது பூமி, நிலப்பரப்பும் நீர்ப்பரப்பும், புவியின் நிலத்தோற்றம், அரசியற் பிரிவுகள், வெப்பநிலை, அமுக்கமும் காற்றுகளும், மழை வீழ்ச்சி, காலநிலைப் பிரதேசங்கள், உலக மக்கள், பயிர்ச்செய்கை, மீன்பிடித் தொழில், விலங்கு வேளாண்மை, காடுகளும் காட்டுத் தொழில்களும், வலுப்பொருட்கள், கைத்தொழிற் பிரதேசங்கள், போக்குவரத்து வசதிகள், ஆசியா ஆகிய பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. 'இலங்கை" என்ற இரண்டாவது பகுதியில், இலங்கை-பொது விபரங்கள், இலங்கையின் தரைத்தோற்றம், இலங்கையின் காலநிலை, இலங்கையின் இயற்கைத் தாவரம், இலங்கையின் பயிர்ச்செய்கை, கனிப்பொருட்களும் கைத்தொழில்களும், மீன்பிடித் தொழில், இலங்கையின் குடிப்பரம்பல், இலங்கையின் போக்குவரத்து வசதிகள், இலங்கையின் வர்த்தகம், யாழ்ப்பாணக் குடாநாடு, இலங்கையின் நீர்ப்பாய்ச்சல் திட்டங்கள் ஆகிய பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. படப்பயிற்சி என்ற மூன்றாம் பகுதியில் உலகப் படப் பயிற்சிகள், ஆசியாப் படப் பயிற்சிகள், இலங்கைப் படப் பயிற்சிகள், யாழ்ப்பாணக் குடாநாட்டுப் படப் பயிற்சிகள், சமவுயரக் கோட்டு விளக்கம், சமவுயரக் கோட்டுப் பயிற்சிகள் ஆகிய பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆரம்ப புவியியல் எட்டாம் வகுப்புக்குரியது:** *க.குணராசா. யாழ்ப்பாணம்: க.குணராசா, 40, கல்லூரி வீதி, நீராவியடி, 5ஆவது பதிப்பு, பெப்ரவரி 1973, 1வது பதிப்பு, ஜனவரி 1968. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி).*

*173 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 4.00, அளவு: 21x14 சமீ.*

'ஆரம்ப புவியியல்" என்ற இந்நூல், எட்டாம் வகுப்பிற்குரிய அரசினர் பாடத்திட்டத்திற்கும், வடமாகாண ஆசிரியர் சங்கப் பாடத்திட்டத்திற்கும் ஏற்ப ஆக்கப்பட்டுள்ளது. புவியியல் கற்கும் மாணவர்கள் தங்களது ஆரம்பப் புவியியல் அறிவைச் சரிவரப் பெற்றுக் கொள்வதற்கு இந்நூல் உதவும். இந்நூலில் ஏராளமான விளக்கப் படங்களும் பயிற்சிகளுமுள்ளன. பல படங்கள் வர்ணப் படங்களாக இத் திருத்திய பதிப்பிலுள்ளன. நமது பூமி, அகலக்கோடுகளும் நெடுங்கோடுகளும், இலங்கைப் புவியியல், நெற்செய்கை, வியாபாரத் தானியப் பயிர்கள், இலங்கையின் வர்த்தகப் பயிர்கள், இலங்கையின் ஏனைய விளைபொருட்கள், பருத்திச் செய்கை ஆகியன முதலாம் பருவப் பாடங்களாகவும், காலநிலை மூலகங்கள், காலநிலைப் பிரதேசங்கள், இலங்கையின் நீர்ப்பாய்ச்சல் திட்டங்கள், விலங்கு வேளாண்மை, பாற்பண்ணைத் தொழில், மீன்பிடித் தொழில், காடுகளும் காட்டுத் தொழில்களும் ஆகிய பாடங்கள் இரண்டாம் பருவப் பாடங்களாகவும், இலங்கையின் கைத்தொழில்கள், இரும்பு உருக்குக் கைத்தொழில்கள், இலங்கையின் நீர்மின்சக்தி, உலகின் குடிப்பரம்பல், உலகின் பிரதான வியாபாரப் பாதைகள், இலங்கையின் குடியிருப்புகள் ஆகிய பாடங்கள் மூன்றாம் பருவப் பாடங்களாகவும் வகைப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. இறுதியில் வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளன.

**க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குரிய பௌதிகப் புவியியல் வினா-விடை.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, 550/7, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1968. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).*

*60 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 2.00, அளவு: 20x13.5 சமீ.*

**க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குரிய பௌதிகப் புவியியல் வினா-விடை.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு ஏப்ரல் 1975, 1வது பதிப்பு, ஜனவரி 1968. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).*

*60 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 3.00, அளவு: 20x13.5 சமீ.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குரிய பௌதிகப் புவியியல் வினா-விடை.** க.குணராசா. யாழ்ப்பாணம்: வி.மகாலிங்கம், ரேகா வெளியீடு, 1வது ஒழுங்கை, பிறவுன் வீதி, 5வது பதிப்பு 1983, 1வது பதிப்பு, ஜனவரி 1968. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

(4), 5-52 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 8.00, அளவு: 20x13.5 சமீ.

கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு மாணவர்கள், பௌதிகப் புவியியலை தெளிவாகப் புரிந்துகொண்டு கேள்விக்கு ஏற்ப விடையிறுக்கும் முறையை விளக்குவதற்காகவே இந்நூல் ஆக்கப்பட்டது. புவியியல் மாணவர்களுக்கு இந்நூல் பேருதவியாக அமைகின்றது. உயர்தரப் பரீட்சையில் படவேலை தவிர்ந்த ஏனைய பகுதிகளில், பௌதிகப் புவியியல், மக்கட் புவியியலும் பொருளாதாரப் புவியியலும், பிரதேசப் புவியியல் எனும் மூன்று பிரிவுகள் உள்ளன. அவற்றில் ஒன்றின் தேவையை இந்நூல் பூர்த்திசெய்கின்றது.

## 1969

**நந்திக் கடல்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், மாநகரசபை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1969. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).

(10), 128 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 21.5x14 சமீ.

செங்கை ஆழியானின் முதல் நாவல். கலைச்செல்வி நடத்திய நாவல் போட்டியில் பாராட்டைப்பெற்றது. யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பொற்காலத்தைச் சித்திரிக்கும் சங்கிலி, செகராசசேகரன், ஆட்சிக்காலத்தின் வரலாற்று நூல். காதலையும் வீரத்தையும் தியாகத்தையும் அரசியல் சதிகளையும் தமிழ் உணர்வுடன் இலக்கிய நடையில் சொல்லும் நூல். யாழ் இலக்கிய வட்டத்தின் 11வது நூலான இதில் யாழ்ப்பாண மன்னன் பரராஜசேகரனின் காமக்கிழத்தியின் மகனான சங்கிலி குமாரன் முடிக்குரியவர்களை சதிமூலம் அகற்றித் தானே பட்டம் சூடுகிறான். காதலி உதயவல்லியைக் கைவிட்டு அரசமாதேவியை மணம்புரிகிறான். போர்த்துக்கேயரின் துணையுடன் முடிக்குரியவர்கள் பின்னர் படையெடுத்துவரவே சங்கிலிகுமாரன் தப்பியோடிப் போர்த்துக்கேயரை அகற்றும் முயற்சியில் ஈடுபடுகிறான்.

**ஆச்சி பயணம் போகிறாள்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 3வது பதிப்பு, மே 2001, 1வது பதிப்பு, ஏப்ரல் 1969, 2வது பதிப்பு, ஒக்டோபர் 1978. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ்).
96 பக்கம், கேலிச் சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணச் சூழலில் கிணற்றுத் தவளையாக வாழ்ந்த ஒரு மூதாட்டி யாழ்ப்பாணத்துக்கு வெளியே உள்ள உலகத்தைக் காணும்போது ஏற்படும் உணர்வுகள் இங்கு சித்திரிக்கப்படுகின்றன. நகைச்சுவையோடு சமூகவியல் உணர்வுகளும் வெளிக்காட்டப்பட்டுள்ளன. சிவராசா தன் ஆச்சியையும், காதலியையும் கதிர்காமத்துக்கு அழைத்துச் செல்கிறான். கோண்டாவில் புகையிரத நிலையத்திலிருந்து தொடங்கி கதிர்காமம் வரை பிரயாணம் மலையகத்துக்கூடாக அமைகின்றது. பிரதேசப் புவியியல் விபரங்களும் மேற்படி மூவரது மனப்பாங்கும் உரையாடலும் கதையை நகர்த்துகின்றன. விவேகி மாத இதழிலும் சிரித்திரன் மாத இதழிலும் தொடராக வெளிவந்தது. முதற்பதிப்பு யாழ் இலக்கிய வட்டத்தினாலும், மறுபதிப்பு ஸ்ரீலங்கா புத்தகசாலையினாலும் ஏற்கெனவே பிரசுரமாகியுள்ளது.

**புவியியல் தேசப்படத் தொகுதி:** உலகம் - இலங்கை. க.குணராசா. *யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1969. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி)*

*44 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 3.75., அளவு: 28x20 சமீ.*

**புவியியல் தேசப்படத் தொகுதி:** உலகம் - இலங்கை. க.குணராசா. *யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, 8ஆவது பதிப்பு, ஜனவரி 1987, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1969, திருத்திய பதிப்பு, ஜீலை 1993, (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம், 225, ஸ்ரான்லி வீதி).*
*43 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 16.00, அளவு: 28x20 சமீ.*

**புவியியல் தேசப்படத் தொகுதி:** உலகம் - இலங்கை. க.குணராசா. *யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, திருத்திய பதிப்பு, ஜூலை 1993, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1969. (கொழும்பு 13: லக்சு கிராப்பிக்ஸ், 243A, ஜோர்ஜ் ஆர்.டீ.சில்வா மாவத்தை).*

*40 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 80.00, அளவு: 28x20 சமீ.*

புவியியல் கற்கும் மாணவர்களுக்கு உகந்தவகையில் தயாரிக்கப்பட்டுள்ள இத் தேசப்படத் தொகுதியில், 51 படங்கள் உள்ளன. இலங்கைக்குரிய பதினான்கு படங்கள் விளக்கமாக வரையப்பட்டுள்ளன. ஒவ்வொரு கண்டங்களுக்குமுரிய தரைத்தோற்றப் படங்களும், அரசியற் பிரிவுப் படங்களும் அளவோடு இணைக்கப்பட்டுள்ளன. இந்தியா, பெரிய பிரித்தானியா, ஆகிய இரு நாடுகளுக்கும் தனித்தனித் தேசப்படங்கள் காணப்படுகின்றன. உலகின் பொருளாதார நடவடிக்கைகளையும் இந் நூலின் இறுதியில் கண்டுதெளியக்கூடியதாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1970

**ஏழாந்தரப் புவியியல்.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி , 1வது பதிப்பு, ஜனவரி 1970. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 காங்கேசன்துறை வீதி).*

*115 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 3.00, அளவு: 24x18.5 சமீ.*

கல்வித் திணைக்களம் வெளியிட்டிருந்த ஏழாந்தரப் புவியியல் வழிகாட்டிக்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட பாடநூல். இலகுவாகவும் தெளிவாகவும் மாணவர்களுக்கு புவியியற் கல்வியைப் புரியவைக்கும் வகையிலும் அவர்களுக்குத் தேவையான படப்பயிற்சித் தேவையை பூர்த்திசெய்யும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ள நூல்.

**ஏழாந்தரப் புவியியற் படப் பயிற்சி.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1970. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி). (34) பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 1.35, அளவு: 28x22 சமீ.*

கல்வித் திணைக்களம் வெளியிட்டிருந்த ஏழாந்தரப் புவியியல் வழிகாட்டிக்கு இணங்கப் பருவம் பருவமாக வகுக்கப்பட்ட படவேலைப் பயிற்சி இதுவாகும். இலகுவாகவும் தெளிவாகவும் மாணவர்களுக்கு புவியியற் கல்வியைப் புரியவைக்கும் வகையிலும் அவர்களுக்குத் தேவையான படப்பயிற்சித் தேவையை பூர்த்திசெய்யும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ள நூல். இப்பயிற்சிகளைச் செய்யும்போது உரிய நிறப் பென்சில்களை உபயோகித்தல் அவசியமாகும். மலைகள், மேட்டுநிலங்கள், என்பனவற்றைக் குறிக்க கபில (பிரவுண்) நிறத்தாலும் நதி, கடல், ஏரி என்பனவற்றை நீல நிறத்தாலும், தாவரம் பயிற்செய்கை என்பனவற்றை பச்சை நிறத்தாலும் நிறந்தீட்டவேண்டும். (தேசப்படத் தொகுதி இணைந்துள்ளது).

**இலங்கையின் புவிச்சரிதவியல் (Geology of Ceylon).** *க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1970. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).*

*80 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 2.75, அளவு: 20x14 சமீ.*

இலங்கையின் புவிச்சரிதவியல் குறித்துக் காலத்திற்குக் காலம் பல அறிஞர்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அவர்களது கருத்துக்கள் நிறைந்த கட்டுரைகள் இன்றைய மாணவ உலகிற்குக் கிடைக்கக்கூடியனவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. திக்கிற்கு ஒன்றாக அக்கட்டுரைகள் பல்வேறு சஞ்சிகைகளில் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் ஒன்றுதிரட்டி, ஓர் ஒழுங்கின் கீழ் தொகுத்து புவியியலுலகிற்கு வழங்கவேண்டும் என்ற எண்ணம் இன்று நூலுருப் பெற்றிருக்கின்றது. இலங்கையின் புவிச்சரிதவியல் வரலாற்றை மூன்று கட்டங்களாக வகுத்து ஆராய்ந்துள்ளார். முதல் கட்டம், கொண்டுவானாலாந்தின் எஞ்சிய பகுதியே இலங்கை என நிறுவ முயல்கின்றது. இதற்கு அறிஞர்களது ஆதாரங்களைக் காட்டியுள்ளார். இரண்டாவது கட்டம், இந்தியத் துணைக் கண்டத்தினின்றும் பிரிவுற்ற பகுதியே இலங்கை என நிறுவுகின்றது. ஒரே கண்டமேடை, ஒரே அடித்தளப் பாறை, ஒரே கல்லியல், ஒத்தபாறைப் போக்குகள் என்பன இதற்கு ஆதாரமாக அறிஞர்கள் கருத்தாகக் காட்டப்பட்டிருக்கின்றன. மூன்றாம் கட்டம் புவியசைவுச் சக்திகளினதும் தின்னற் சக்திகளினதும் ஓயாத மோதலின் விளைவே இலங்கை என நிறுவியுள்ளது. இதற்கு அடம்ஸ், வாடியா, குலரத்தினம் ஆகியோரது கருத்துக்கள் ஆதாரமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. இறுதியில் இலங்கையின் தரைத்தோற்றம் குறித்து விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றது.

**புதிய புவியியல் இலங்கை:** *க.குணராசா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: புவியியல் வெளியீடு, புவியியற் கலைக் கழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1970. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி).*

*176 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 4.00, அளவு: 21x14 சமீ.*

புவியியற் கலைக் கழகத்தைச் சேர்ந்த எட்டு புவியியல் ஆசிரியர்கள் இணைந்து ஆக்கியுள்ள நூல். 18 அத்தியாயங்களில் இலங்கையின் தரைத்தோற்றம், அமைப்பு, காலநிலை, காலநிலைப் பிரதேசங்களும் இயற்கைத் தாவரங்களும், சுயதேவைக்குரிய பயிர்கள், வர்த்தகப் பயிர்கள், கனிப்பொருட்கள், கைத்தொழில்கள், விலங்கு வேளாண்மை, மீன்பிடித் தொழில், குடிப்பரம்பல், வர்த்தகமும் போக்குவரத்து வசதிகளும், தென் மேல் தாழ்நிலம், மலைநாடு, உலர் பிரதேசத் தாழ்நிலங்கள், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள், யாழ்ப்பாணக் குடாநாடு ஆகிய பிரிவுகளில் இலங்கையின் புவியியல் விளக்கப்பட உதவியுடன் விபரிக்கப்பட்டுள்ளது.

## 1972

**சித்திரா பௌர்ணமி: குறுநாவல்.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: சிரித்திரன் பிரசுரம், 67, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, மே 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).*

*32 பக்கம், விலை: சதம் 80, அளவு: 19.5x13.5 சமீ.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் 1963இல் நடத்திய பல்கலைக்கழக மாணவர்களுக்கான குறுநாவல் போட்டியில் இரண்டாம் பரிசைப்பெற்ற வரலாற்றுக் கற்பனை நாவல். 15 சிறு இயல்களாகப் பிரிக்கப்பட்ட இக்குறுநாவல், ஈழநாடு வாரமலரில் 1964இல் தொடராகவும் வெளியிடப்பட்டது. ரேகா மாதம் ஒரு நூல் வெளியீட்டுத் தொடரில் 2வது நூலாகவும் இது வெளியிடப்பட்டது. நூலின் பின்னிணைப்பாக குளிரும் சூடும், வாழ்க்கை, துரதிர்ஷ்டம், நியதி, பசி, அற்பம், முடிச்சு, நிர்ணயம், விதி, ஆதாரம் ஆகிய 10 குட்டிக்கதைகளும் இடம்பெற்றுள்ளன. இவை சிந்தாமணி வாரப் பத்திரிகையில் 1968இல் வெளியிடப்பட்டவை.

**இதயமே அமைதிகொள்: சிறுகதைத் தொகுதி.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: சிரித்திரன் பிரசுரம், 67, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).

(4), 93 பக்கம், விலை: ரூபா 1.80, அளவு: 19x13.5 சமீ.

இந்நூலில் செங்கை ஆழியானின் சிறுகதைகளில் 11 இடம்பெறுகின்றன. அவை முதலில் வெளியிடப்பட்ட சஞ்சிகையும் ஆண்டும் அடைப்புக் குறிக்குள் உள்ளன. இதயமே அமைதிகொள் (விவேகி 1966), திக் விஜயம் (மல்லிகை 1970), கேவலம் நாய்கள் (வீரகேசரி 1962), சிப்பியும் முத்தும் (இலக்கியம் 1966), உச்சிப் பொழுது (கலைச்செல்வி 1962), யாககுண்டம் (மலர் 1970), நினைவின் ஓரம் (வீரகேசரி 1964), விளைபூமி (கலைச்செல்வி 1965), இயற்கையின் கர்ப்பம் (தினகரன் 1964), ராசாத்தி (கலைச்செல்வி 1964), வேள்வித்தீ (கலைச்செல்வி 1964) ஆகியவை இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**புவியியல் வினாவிடை: ஜீ.சீ.ஈ. பரீட்சை வினா விடைகள்: 1965-1971.** க.குணராஜா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 காங்கேசன்துறை வீதி).
203 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 3.75, அளவு: 21.5x14 சமீ.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சைக்குரிய வினா-விடைகளை உள்ளடக்கியுள்ள இந்நூல், 1965 தொடக்கம் 1971 வரை வெளிவந்த 100 க.பொ.த. புவியியல் வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் உள்ளடக்கியுள்ளது.

**பொருளாதாரப் புவியியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, திருத்திய 2வது பதிப்பு, மே 1975, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*151 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 5.50, அளவு: 20x14 சமீ.*

இந்நூல் மனிதனும் சூழலும், உலக நாடுகளின் குடித்தொகை, பொருளாதார நடவடிக்கைகள், தானிய வகைகள், பான வகைகள், கைத்தொழிற் பயிர்கள், மீன்பிடித் தொழில், விலங்கு வேளாண்மை, காடுகளும் காட்டுத் தொழில்களும், வலுப் பொருட்களும் உலோகப் பொருட்களும், உலகின் பிரதான கைத்தொழில் பிரதேசங்கள், போக்குவரத்து வசதிகள் ஆகிய பதினொரு அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது.

**பொருளாதாரப் புவியியல்.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, திருத்திய 3வது பதிப்பு, ஏப்ரல் 1994, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலட்சுமி அச்சகம், 37, கண்டி வீதி). (8), 164 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.*

பொருளாதாரப் புவியியல் என்பது மனிதனையும் அவனது வாழ்க்கைத் தொழிலையும் விளக்கும் புவியியற் பகுதியாகும். பொருளாதாரப் புவியியல் பொருளாதார நடவடிக்கைகளை ஆராய்வதோடு, அந்த நடவடிக்கைகளை நிலைநாட்ட எக்காரணங்கள் ஏதுவாயிருந்தன என்பதையும் ஆராய்கின்றது. இந்நூலில் உலகின் குடித்தொகை, பண்டையமுறை வாழ்க்கை, உலகின் வேளாண்மை வகைகள், உலகின் நெற்செய்கை, உலகின் கோதுமைச் செய்கை, உலகில் சோளம், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, உலகின் மீன்பிடித் தொழில், உலகின் விலங்கு வேளாண்மை, வலுப்பொருட்களும் உலோகப் பொருட்களும், உலகின் பிரதான கைத்தொழில் பிரதேசங்கள், இரும்புருக்குத் தொழில்கள், பொறியியற் கைத்தொழில்கள், இரசாயனக் கைத்தொழில்கள், குடியிருப்புகள், காடுகளும் காட்டுத் தொழில்களும் போக்குவரத்து வசதிகளும் தொடர்பாடல் வசதிகளும் ஆகிய 17 அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளது.

**முற்றத்து ஒற்றைப்பனை.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, 2வது பதிப்பு, செப்டெம்பர் 1989. 1வது பதிப்பு, 1972. (யாழ்ப்பாணம்: சுவர்ணா அச்சகம், காங்கேசன்துறை வீதி). (8), 52 பக்கம், விலை: ரூபா 12.00, அளவு: 18.5x13 சமீ.*

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிராமத்தைக் களமாகக்கொண்டு அங்கு பாரம்பரியமாக நிலவிவரும் காற்றாடிக்கலையின் பெருமையைப் புலப்படுத்தும் வகையில் எழுதப்பட்ட நகைச்சுவைக் கிராமியச் சித்திரம். எழுபது வயதாகியும் முற்றத்துப்பனையில் விட்டம் போட்டுக் காற்றாடி விடுகின்ற பழக்கமும், வெறியும் தீராத வண்ணார்பண்ணைக் கொக்கர் மாரிமுத்தரையும், அந்த நெடுந் துயர்ந்த பனைமரம் காற்றுக்கு எங்கே தனது வீட்டின்மேல் பாறி விடுமோ என்று பயப்படுகின்ற அவரின் மைத்துனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலம்பல் காசிநாதரையும் அவர்களிடையே வளர்ந்துவரும் பகைமை உணர்வையும் வைத்துப் புனையப்பெற்ற நகைச்சுவை நவீனம்.

## 1973

**வாடைக்காற்று.** செங்கை ஆழியான். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, த.பெ.இலக்கம் 160, 1வது பதிப்பு, நவம்பர் 1973. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி)

*(4), 135 பக்கம், விலை: ரூபா 2.60, அளவு: 17x12 சமீ.*

**வாடைக்காற்று.** செங்கை ஆழியான். கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 340 செட்டியார் தெரு, 2வது பதிப்பு. ஜனவரி 2001, 1வது பதிப்பு, நவம்பர் 1973. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

*(8), 135 பக்கம், 8 தகடுகள் (புகைப்படங்கள்), விலை: ரூபா 125., அளவு: 17x12.5 சமீ.*

நெடுந்தீவு மீனவ சமூகத்தின் வாழ்க்கைமுறையைப் பகைப்புலமாகக் கொண்ட நாவல். மீனவ மக்களின் சொற்களையும், நெடுந்தீவு மக்களின் பிரதேசச் சொற்களையும் மீன்பிடித்தொழிலின் நுணுக்கங்களையும் ஆசிரியர் கலை அழகோடு சித்திரித்துள்ளார். வாடைக்காற்று பெயர்ந்ததும் பேசாலை கரையூர்ப்பகுதிகளிலிருந்து மீனவர்கள் நெடுந்தீவுக் கடற்கரைக்கு மீன்பிடிக்க இடம்பெயர்ந்து வருகின்றார்கள். அக்காலத்தில் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து கூழைக்கடா (பெலிக்கன்) பறவைகளும் அங்கே வருகின்றன. வாடைக்காற்றோடு இத்தீவுக்கு வரும் கூழைக்கடாக்கள் கதையோடு உருவகப் படுத்தப்படுகின்றன. மிகுந்த சர்ச்சைக்குரிய நூலாகவும், மூன்று மாதங்களுக்குள் முதற்பதிப்பின் முழுப் பிரதிகளும் (7000 பிரதிகள்) விற்பனையான நூலாகவும் அமைந்த நாவல். முதற்பதிப்பு வீரகேசரி பிரசுரமாக 1973இல் வெளியிடப்பட்டது.

## 1975

**கொத்தியின் காதல்: நகைச்சுவை நவீனம் :** செங்கை ஆழியான். கொழும்பு 6: மாணிக்கப் பிரசுரம், 29, கல்யாணி வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1975. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).

*104 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 3.40, அளவு: 17.5x12 சமீ.*

சிரித்திரன் மாத இதழில் தொடர்கதையாக வெளிவந்தது. பேய்களைப் பாத்திரங்களாகப் பெற்ற ஒரு கற்பனைப் படைப்பு. கொத்தி என்ற பேய்ப்பெண், சுடலைமாடன் என்ற பேய் வாலிபனைக் காதலிக்கிறாள். எறிமாடன் என்ற முரட்டுப்பேய் தடையாக வந்து கொத்தியைத் தானே மணம்புரிய விழைகிறான். குழப்பங்களின் முடிவில் சுடலைமாடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிமாடனும் சண்டையிட்டு இறக்கின்றனர். கொத்தி தற்கொலை செய்துகொள்கிறாள். யாழ்ப்பாணத்து அரசியல், சமூகக் குறைபாடுகள் பேய்களின் சமூகத்தில் உருவகப்படுத்தப்பட்டுள்ளன. கதைக்கான உள்உருவக ஓவியங்களை 'சௌ" என்ற புனைபெயருள் மறைந்திருக்கும் எஸ்.கே.சௌந்தரராஜா வரைந்திருக்கிறார்.

**பிரளயம்.** செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 2ம் பதிப்பு, 1989. 1ம் பதிப்பு, 1975. (யாழ்ப்பாணம்: கே.ரி. அச்சகம்).

122 பக்கம், விலை: ரூபா 30.00, அளவு: 18x13 சமீ.

1971ஆம் ஆண்டு சிரித்திரன் சஞ்சிகையில் மயான பூமி என்ற தலைப்பில் தொடராக வெளிவந்தது. வீரகேசரி பிரசுரமாக 1975இல் வெளிவந்தது. 1976 இல் அவ்வாண்டுக்குரிய சாகித்திய மண்டலப் பரிசையும் சுவீகரித்துக் கொண்ட நாவல். தமிழர் சமுதாயத்தின் சாதிப்பிரச்சினை தொடர்பான இந்த நாவலில், ஒரு பிரதேசத்தின் சலவைத்தொழிலாளர் சமூகம் தனது அடிமை-குடிமை நிலை யிலிருந்து விடுபடத்துடித்த உணர்வுநிலையே கதையின் கரு வாகும். சமூகமாற்றமானது கல்வி, தொழில்மாற்றம், செல்வம் தேடல் என்பவற்றின் மூலம் ஏற்படலாம் எனச் சித்திரிக்கின்றது.

## 1976

**இரவின் முடிவு.** செங்கை ஆழியான். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி 160, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1976. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி).
(4), 158 பக்கம், விலை: ரூபா 3.90, அளவு: 17.5x12.5 சமீ.

ஈழநாடு பத்திரிகை 10வது ஆண்டு நிறைவையொட்டி 1969இல் நடாத்திய இலக்கியப் போட்டியில் முதற்பரிசைப்பெற்ற நாவல். பின்னர் அதே பத்திரிகையில் 'போராடப் பிறந்தவர்கள்" என்ற தலைப்பில் 1971-72இல் வெளிவந்தது. சுருட்டுத் தொழிலாளியான ஐயாத்துரை வறுமையிற் செம்மையாக வாழமுயல்கிறார். மனைவி பாக்கியலட்சுமி தனக்குக் கிடைக்காத ஆடம்பர வாழ்க்கையை எண்ணி ஏங்கியபடியே குடும்பப் பொறுப்பை அலட்சியம் செய்கிறார். மூத்தமகன் துரைராசா குடும்பத்தைவிட்டு விலகிச்சென்று வாழ்க்கையில் ஏமாற்றப்படுகிறான். மகள் மகேஸ்வரியின் திருமண ஆயத்தம் தடைப்படுவதோடு அவளைப்பற்றிய அவப்பெயரும் பரவுகிறது. துயரம் தாளாமல் ஐயாத்துரை உயிர்துறக்கிறார். இளையமகன் சண்முகநாதன் குடும்பத்தின் பொறுப்பை ஏற்று நடத்தவேண்டியவனாகிறான். யாழ்ப்பாணத்துச் சுருட்டுத் தொழிலாளர் குடும்ப அவலவாழ்வைச் சித்திரிக்கும் கதையமைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1977

**காட்டாறு.** செங்கை ஆழியான். கொழும்பு: வீரகேசரி பிரசுரம், த.பெ.160, 1வது பதிப்பு, பெப்ரவரி 1977. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி).

(12), 244 பக்கம், விலை: ரூபா 4.90, அளவு: 18x13 சமீ.

**காட்டாறு.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிறவுன் வீதி, நீராவியடி, 2வது பதிப்பு, ஒக்டோபர் 1997, 1வது பதிப்பு, பெப்ரவரி 1977. (அச்சக விபரம் அறியமுடியவில்லை).

xxviii, 208 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 19x13.5 சமீ.

**காட்டாறு.** செங்கை ஆழியான். சென்னை 600017: கவிதா பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 6123, 8, மாசிலாமணி தெரு, பாண்டிபஜார், தி.நகர், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2005. (சென்னை: மணி ஓப்செட் அச்சகம்).

208 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x13.5 சமீ.

வீரகேசரியின் சிறந்த நாவலுக்கான பரிசில், இலங்கை இலக்கியப் பேரவைப் பரிசில், இலங்கை சாகித்திய மண்டலப் பரிசில், இலங்கை அரசகரும மொழித் திணைக்கள புத்தாக்கப் பரிசு போன்றவற்றைப் பெற்றுக்கொண்ட சமூக நாவல் இது. பல்வேறு விதங்களில் சுரண்டலுக்கும் பாதிப்புக்கும் உள்ளான மக்கள் தமக்கிழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராகப் போர்க்குணம் கொள்வது சமூக விழிப்புணர்வுடனும் கலையழகுடனும் இந்நாவலில் சித்திரிக்கப்பட்டுள்ளது. விவசாயக் கிராமமான கடலாஞ்சியில் நிகழும் சமுதாயச் சுரண்டல்களும் அவற்றிற்கெதிராக நிகழும் எழுச்சியுணர்வுமே இந்நாவலின் கதையம்சமாகும். இலங்கையில் 1வது பதிப்பினை பெப்ரவரி 1977 இலும் 2வது பதிப்பினை ஒக்டோபர் 1997 இலும் வெளியிடப்பெற்று, பின்னாளில் 'வனமத கங்க" என்ற தலைப்பில் சிங்கள மொழிபெயர்ப்பினையும் கண்ட பிரபல்யமான இந்நாவல், தமிழகத்தில் மீண்டும் முதற் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினை ஏழு தடவைகளுக்குமேல் பெற்றுக்கொண்ட செங்கை ஆழியான் சமகாலப் பிரச்சினைகளின் மானிட அவலங்களைத் தன் புனைகதைகளில் பதிவுசெய்யும் கலாபூர்வ எழுத்துக்களை வழங்குவதில் பெருமைபெற்றவர்.

**இருபத்திநான்கு மணிநேரம்.** நீலவண்ணன் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: கமலம் வெளியீடு, 75/10A பிரவுண் வீதி, 3வது பதிப்பு, மார்ச் 2003, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1977, 2வது பதிப்பு, நவம்பர் 1977. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 175., அளவு: 22x14 சமீ.

1977 ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி இலங்கையில் ஆரம்பமான இனக்கலவரத்தின் முதல் நாள் யாழ்ப்பாணத்தில் நடந்தது என்ன என்பதைச் சித்திரிக்கும் வரலாற்றுப் பதிவு. வரதர் வெளியீடாக 16.10.1977இல் வெளியிடப்பட்ட முதற்பதிப்பு 15 நாட்களில் விற்பனையாகி விட்ட நிலையில் 31.10.1977அன்று மீள்பதிப்புச் செய்யப்பட்டது. இந்நூலின் வரலாற்று முக்கியத்துவம் கருதி 25வருடங்களின் பின்னர் 3வது பதிப்பை 2003இல் காண்கின்றது.

## 1978

**இந்தியத் துணைக்கண்டப் புவியியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, மார்ச் 1979, 1வது பதிப்பு, ஜனவரி 1978. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

(4), 78 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 5.50, அளவு: 21x14 சமீ.

இந்தியாவின் அமைப்பும் தரைத் தோற்றமும், இந்தியாவின் காலநிலை, இந்தியாவின் நீர்ப்பாசனம், இந்தியாவின் பயிர்ச்செய்கை, இந்தியாவின் கனிப்பொருட்கள், இந்தியாவின் கைத்தொழில்கள், இந்தியாவின் மக்கள் தொகை, பிரதேசப் புவியியல்: தமிழ்நாடு, இந்தியாவின் நகரங்கள், பிரதேசப் புவியியல்: மேற்குப் பாக்கிஸ்தான், பிரதேசப் புவியியல்: வங்காளதேசம் ஆகிய பதினொரு பாடத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. க.பொ.த. பத்திர உயர்தர வகுப்பிற்கு உரியது.

**யானை.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 3வது பதிப்பு, ஆகஸ்ட் 2001, 2வது பதிப்பு, ஜனவரி, 1991, முதற் பதிப்பு, ஜனவரி 1978. (யாழ்ப்பாணம்: உயர் கல்விச் சேவை நிலையம்).
78 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14 சமீ.

அடக்கு முறைக்கு எதிரான ஒரு மனிதனின் போராட்டம் இந்நாவலில் கூறப்பட்டுள்ளது. யானையும் காடும் குறியீடுகளாக அமைகின்றன. தம்பலகமத்தில் வீட்டாருக்குத் தெரியாமல் இரு காதலர்கள் வீட்டைவிட்டுக் கிளம்பி காட்டுப்பாதையால் செல்கின்றனர். நொண்டி யானையினால் காதலி கொல்லப்படுகிறாள். காதலன் அந்த யானையைத் தொடர்ந்து சென்று பழிவாங்குவதாகக் கதை அமைகின்றது. The Beast என்ற பெயரில் ஆங்கிலத்தில் இந்நாவல் மொழிபெயர்க்கப்பட்டுமுள்ளது.

**புவிவெளியுருவவியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1978. (யாழ்ப்பாணம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா அச்சகம், 234 காங்கேசன்துறை வீதி).

162 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 7.40, அளவு: 21x14 சமீ.

புவிவெளியுருவவியல் (Geomorphology) பற்றிப்பல அறிஞர்களின் கட்டுரைகளை உள்ளடக்கிய நூல் இது. புவியியல்: ஒரு தொகுப்பியல் (ஜீ.ஜீ.ஆர். தம்பையாபிள்ளை), புவியின் தோற்றம் (க.குணராசா), புவியின் அமைப்பு (க.குணராசா), கண்டங்களினதும் சமுத்திரங்களினதும் தோற்றம் (ஆ.இராஜகோபால்), கண்டவாக்கமும் மலையாக்கமும் (ஆ.இராஜகோபால்), எரிமலையியல் (க.இலங்கைநாதன்), புவியோட்டின் பாறைகள் (பொ.புவனராஜன்), சாதாரண அரிப்பு (எஸ்.சண்முகராஜா), டேவிசின் தின்னல் வட்டக் கொள்கை (யோகா இராசநாயகம்), நிலவுருவங்களை உருவாக்குவதில் காற்றின் பங்கு (கிருபாசக்தி ஏழூர் இராசரத்தினம்), பனிக்கட்டியாறு (கு.சோமசுந்தரம்), சுண்ணாம்புக் கற்பிரதேச நிலவுருவங்கள் (ஜோர்ஜ் எஸ்.கந்தையா), கடலரிப்பாலுண்டாகும் நிலவுருவங்கள் (ஆ.இராஜகோபால்), புவியோட்டில் ஏரிகள் (பொ. புவனராஜன்), புவிச் சரிதவியற் கால அட்டவணை ஆகிய 15 தலைப்புகளில் இந்நூலில் உள்ள கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. க.குணராசா அவர்கள் 1965இல் தொடங்கி இரு வருடங்கள் தொடர்ந்து வெளியிட்டுவந்த 'புவியியல்" என்ற சஞ்சிகையில் பெரும்பான்மையான கட்டுரைகள் முன்னர் இடம்பெற்றிருந்தன.

**பிரித்தானிய தீவுகளின் புவியியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு, 234 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1978. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).
(4), 54 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 4.00, அளவு: 20x13.5 சமீ.

க.பொ.த. உயர்தர வகுப்புக்குரியது. ஐரோப்பாக் கண்டத்தின் வடமேற்கு ஓரத்தில் அத்திலாந்திக் சமுத்திரத்தில் பிரித்தானிய தீவுகள் அமைந்துள்ளன. இத்தீவுகள் இலங்கையைப்போல் ஐந்து மடங்கு பரப்பில் பெரியன. பிரித்தானிய தீவுகளில் பெரிய பிரித்தானியா, அயர்லாந்து என இருபெரும் தீவுகள் உள்ளன. இவற்றைவிட சட்லண்ட் தீவுகள், ஓர்கனிய தீவுகள், கேப்ரிடிஸ் தீவு, வைற் தீவு, மான் தீவு முதலான அநேக சிறு தீவுகளுமுள்ளன. பிரித்தானிய தீவுகளின் மொத்த நிலப்பரப்பு 1,21,000 சதுர மைல்களாகும். இந்நூல் பிரித்தானிய தீவுகளின் தரைத்தோற்றம், பிரித்தானிய தீவுகளின் காலநிலை, பிரித்தானிய தீவுகளின் பயிர்ச்செய்கை, பிரித்தானிய தீவுகளின் கைத்தொழில், பிரித்தானிய தீவுகளின் குடிப்பரம்பல், பிரித்தானிய தீவுகளின் போக்குவரத்து வசதிகள், பிரித்தானிய தீவுகளின் வர்த்தகம் ஆகிய ஏழு பிரிவுகளின்கீழ் மாணவர்களின் புவியியல் அறிவை விருத்திசெய்யும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கங்கைக் கரையோரம்.** செங்கை ஆழியான். கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1978. (கொழும்பு 14: Express Newspapers Ceylon Ltd., 185, Grandpass Road).

(6), 152 பக்கம், விலை: ரூபா 4.60, அளவு: 18x12 சமீ.

சிரித்திரன் சஞ்சிகையில் தொடராக 1974 ஜனவரி முதல் 1975 மார்ச் வரை வெளிவந்தது. 60களில் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்து மாணவர்களின் மனவுணர்வையும் புறச்செயல்களையும் அனுபவபூர்வமாகச் சித்திரிப்பதாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒரு மூலையிலிருந்து பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் மாணவர்கள் அங்கு எப்படி நடந்துகொள்கின்றார்கள், கடன்சுமை, நம்பிக்கைகள் என்பவற்றுடன் அவர்களுக்காக யாழ்ப்பாணத்துப் பெற்றோர்கள் செலவழித்துக் காத்திருக்க, அவர்களின் நம்பிக்கைகளையும் பல்கலைக்கழக மாணவர்கள் எவ்வாறு நிறைவேற்றுகிறார்கள் அல்லது அழிக்கிறார்கள் என்பதை இந்நாவல் உணர்வுபூர்வமாகச் சித்திரிக்கிறது. இது வீரகேசரி பிரசுரத் தொடர் இலக்கம் 65.

**சமூகக்கல்வி - தரம் 10.** க.குணராசா, கமலா குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1978. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம்).

(4), 140+112 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 8.40, அளவு: 20x13.5 சமீ.

இந்நூல் இரண்டு பகுதிகளாக பக்க இலக்கமிடப்பட்டுள்ளது. முதலாம் பகுதியில் ஜனநாயகம், போர்கள், இலங்கை மக்கள் என மூன்று பிரிவுகளின் கீழ் பாடங்கள் வகுக்கப்பட்டுள்ளன. உலக நாடுகள் என்ற நான்காவது பிரிவில் தனியாக பக்க இலக்கமிடப்பட்டு உலக நாடுகள் பற்றிய தகவல்கள் தரப்பட்டுள்ளன.

**விமான ஒளிப்படங்கள்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 2வது பதிப்பு, ஜீலை 1997, 1வது பதிப்பு, டிசம்பர் 1978. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், கல்வியங்காடு).

(3), 49 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 60.00, அளவு: 20.5x14 சமீ.

புவியியல்துறை மாணவர்கள், Air Photo Interpretation எனப்படும் விமான ஒளிப்படங்களைப் புரிந்துகொள்ளும் முறைமை பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளத்தக்க நூல் இதுவாகும். இந்நூலின் முற்பதிப்பு கல்லச்சுப் பிரதியாக (Cyclostyled) 1978இல் வெளிவந்திருந்தது. சிறிய நூலாயினும் புதிய பல விபரங்களையும் அறிவுபூர்வமான அணுகலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றது. பட்டப்படிப்பு மாணவர்களுக்கு விமானப்படங்கள் குறித்த தெளிவான விளக்கங்களை இந்நூல் தருகின்றது. நிலவளவைத் துறையினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விமானப்படங்கள் இந் நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன.

**விமான ஒளிப்படங்கள்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், *82, பிரவுண் வீதி, 3வது பதிப்பு, டிசம்பர் 2004, 1வது பதிப்பு, டிசம்பர் 1978, 2வது பதிப்பு, ஜூலை 1997. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை).*

*56 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், ஒளிப்படங்கள், விலை: ரூபா 120., அளவு: 20.5x13.5 சமீ.,* ISBN: *955-1013-09-3.*

விமான ஒளிப் படங்களின் வகைகள், நிலைக்குத்து / சாய்வு விமானப் படங்கள், விமானப் படங்களின் சிறப்பு, போலி நிறங்கள், இலங்கைக்கான விமானப் படங்கள், விமானப் பட வான் பாதை, விமானப் படங்களில் இணைப்பு, விமானப் படங்களைப் புரிந்துகொள்ளல், விமானப் படங்களை வாசித்தல், விமானப் படங்களை விளக்கல், புவியியல் நிலத்தோற்றம், இடவிளக்கவியற் படங்களும் விமானப் படங்களும், விமானப் படங்களின் புவியியல் அம்சங்கள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

## 1979

**ஆறாந்தரப் படவேலை சமூகக் கல்வி.** க.குணராசா, கமலா குணராசா. *யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 3வது பதிப்பு, பெப்ரவரி 1981, 1வது பதிப்பு, ஜனவரி 1979. (யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்).*

*28 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 4.50, அளவு: 21.5x14.5 சமீ.*

பாடசாலையின் நிலையத்தையும் பாடசாலைக் கட்டிடத்தை மையமாகக் கொண்டு எட்டுத் திசைகளையும் அறிதல், பிரதேசத்தின் முக்கிய இடங்கள் பாடசாலையின் எத்திசையில் அமைந்துள்ளன என்பதைக் கண்டறிதல், வகுப்பறை, பாடசாலைக் கட்டிடம், பாடசாலைத் தோட்டம் ஆகியவற்றை அளத்தலும், அவற்றின் படங்களை வரைதலும், அளவுத்திட்டத்தின் அறிமுகம், ஓர் அளவுத்திட்டத்திற்கமைய வகுப்பறை, பாடசாலைக் கட்டிடம் ஆகியவற்றின் படங்களை வரைதல், கிராமத்தின் அல்லது நகரத்தின் படம் ஒன்றை அளவுத்திட்டத்திற்கமைய வரைந்து முக்கிய இடங்களைத் தூரத்திற்கேற்ப குறிப்பிடுதல், இலங்கைப் படம்- இலங்கையின் புற உருவப்படத்தை வரைதல், இலங்கைப் படத்தை கையினால் வரையப் பழகுதல், இலங்கைப் படத்தில் கிராமம் அல்லது நகரம், அது அமைந்துள்ள மாவட்டம் என்பனவற்றைக் குறிப்பிடுதல், இலங்கைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தில் மலைப்பிரதேசத்திற்கும், தாழ் நிலத்திற்குமிடையேயுள்ள (சமவெளி) எல்லைக் கோட்டை வரைதல் ஆகிய பாடங்களில் இந்நூல் பயிற்சியளிக்கின்றது.

**ஐக்கிய அமெரிக்காவின் புவியியல்.** க.குணராசா, ஆ.இராஜகோபால். யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மே 1979. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம், 310, மணிக்கூட்டு வீதி).

(8), 134 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 7.50, அளவு: 20x13.5 சமீ.

'வட அமெரிக்கா - அறிமுகம்" (தரைத்தோற்றம் - நதிகளும் ஏரிகளும் கால நிலை - இயற்கைத் தாவரம்), 'ஐக்கிய அமெரிக்கா - பௌதிகப் பின்னணி" (தரைத்தோற்றமும் அமைப்பும் - மண் வகைகள் - கால நிலை - இயற்கைத் தாவரம் - கனிப்பொருள் வளம்), 'ஐக்கிய அமெரிக்கா - பொருளாதாரப் பின்னணி" (குடிப்பரம்பல் -பயிர் செய்கை -கலப்பு வேளாண்மை வலயம் - சோளவலயம் - பருத்தி வலயம் - அயன அயல் பயிர்வளம் - கோதுமை வலயம் - தானிய பழவலயம் - கைத் தொழில்கள் - கைத்தொழில்) வலயம் - கைத்தொழில் மையங்கள் - இரும்பு உருக்குத் தொழில் - யந்திர உற்பத்திக் கைத் தொழில் - கட்டால் கட்டுந் தொழில் - நெசவுக் கைத்தொழில் - ஆடை உற்பத்தித் தொழில் - தானியம் அரைத்தல் - மீன்பிடித் தொழில் - இறைச்சி யடித்தல் தொழில்), 'ஐக்கிய அமெரிக்கா - பிரதேசப் புவியியல் வடகீழ்ப் பிரதேசம்" (நியூ இங்கிலாந்துப் பிரதேசம் பேரேரிப் பிரதேசம் - வட அப்பலாச்சியன் மத்திய அத்திலாந்திப் பிரதேசம் - மத்திய சமவெளிப் பிரதேசம் தென்கீழ்ப் பிரதேசம் - தென் உண்ணாட்டுத் தாழ் நிலப்பிரதேசம் - விரி குடாக் கரையோரப்பிரதேசம் - புளோரிடாக் குடாநாட்டுப் பிரதேசம் - பெரும் சமவெளிகள் - மேற்குமலைப் பகுதி றொக்கி மலைப்பிரதேசம் - மலையிடை மேட்டு நிலப்பிரதேசம் - கரையோரப் பள்ளத்தாக்குகள் கலிபோர்ணியாப் பிரதேசம் - அலாஸ்காப் பிரதேசம்) ஆகிய நான்கு அத்தியாயங்களில் பிரதேசப் புவியியல் விளக்கப்பட்டுள்ளது. இறுதியில் கடந்த கால பரீட்சை வினாக்களும் இணைக்கப்பட்டுள்ளன.

**பௌதிகச் சூழல் நிலவுருவங்கள்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: வி.மகாலிங்கம், ரேகா வெளியீடு, 82, பிறவுண் வீதி, 1வது பதிப்பு, ஜீன் 1979. (யாழ்ப்பாணம்: விவேகானந்த அச்சகம்).
(8), 112 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 7.50, அளவு: 20x13.5 சமீ.

**பௌதிகச் சூழல் நிலவுருவங்கள்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: வி.மகாலிங்கம், ரேகா வெளியீடு, 82, பிறவுண் வீதி, 2வது பதிப்பு, ஜீலை 1982, 1வது பதிப்பு, ஜீன் 1979. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறை வீதி).

(8), 112 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 15.00, அளவு: 20x14 சமீ.

1979ஆம் ஆண்டு புவியியல் உயர் வகுப்பு மாணவர்களுக்கு, நீண்ட காலத்திற்குப் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடத்திட்டம் இதுவாகும். பௌதிகச் சூழலுக்கேற்ப மனிதன் துலங்குவது பற்றிய உணர்வைக் கொண்டிருத்தலும், அபிவிருத்தியில் புவியியலின் பங்கை விளங்கிக் கொள்ளுதலும் இப் புதிய பாடத்திட்டத்தின் அடி ஆதாரமாகவுள்ளன. அறிவு பூர்வமான அணுகல் முறையைப் புவியியல் கல்வியில், நாட்டின் அபிவிருத்தியை மனதிற்கொண்டு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவது இன்றைய தேவையாகும். இப்புதிய அணுகல் முறையின் முதல் நூலாக ' பௌதிகச் சூழல் - நிலவுருவங்கள்" என்ற இந்நூல் வெளிவருகின்றது. இதில் 'பாறைகள்" (தீப்பாறைகள் - அடையற் பாறைகள் - உருமாறிய பாறைகள் - பாறைகளும் தரைத் தோற்றமும் - பாறை வட்டக் கொள்கை), 'புவியின் அமைப்பு" (புவியின் உள்ளகம் - மிதக்கும் புவியோடு), 'முதல் வகை நிலவுருவங்கள்" (நிலப் பரப்பும் நீர்த்தொகுதியும், சமுத்திர வடிநிலம், சமுத்திர நீரோட்டங்கள், வற்றுப்பெருக்குகள், முருகைக்கற்பார், கண்டங்களினதும் சமுத்திரங்களினதும் தோற்றம் - கண்டநகர்வுக் கொள்கை), 'இரண்டாம் வகை நிலவுருவங்கள்" (மடிப்பு மலைகள், இழு விசையும் குறையாதலும், எரிமலைகள், மேட்டு நிலங்கள், சமவெளிகள்), 'மூன்றாம் வகை நிலவுருவங்கள்" (வானிலையாலழிதல் - நீரரிப்பு - நதித் தொகுதி - ஆற்றுச் சிறை - நீரூற்றுகள் - ஏரிகள் - சுண்ணாம்புக் கற்பிரதேச நிலவுருவங்கள் - காற்றரிப்பு - பனிக்கட்டி யாற்றரிப்பு - கடலரிப்பு - கடற்கரையோரங்கள்), 'தின்னல் வட்டக்கொள்கை" ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**பௌதிகச் சூழல் நிலவுருவங்கள்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 6ஆவது பதிப்பு, ஜனவரி 1994, 1வது பதிப்பு, ஜூன் 1979, 5ஆவது பதிப்பு, ஓகஸ்ட் 1992. (யாழ்ப்பாணம்: மணிஓசை அச்சகம், 12, சென். பற்றிக்ஸ் வீதி).
(8), 132 பக்கம், விளக்கப் படங்கள், விலை: ரூபா 70.00, அளவு: 20x13.5 சமீ.

இப்பதிப்பில் பாறைகள், புவியின் அமைப்பு, முதல்வகை நிலவுருவங்கள், இரண்டாம் வகை நிலவுருவங்கள், மூன்றாம் வகை நிலவுருவங்கள், நதித் தொகுதி, நீரூற்றுக்கள், ஏரிகள், சுண்ணாம்புக் கல் பிரதேசம், காற்றரிப்பு, பனிக்கட்டியாற்றரிப்பு, கடற்கரையோரங்களும் கடலரிப்பும், தின்னல் வட்டம் ஆகிய பதினொரு பாடங்கள் இடம்பெற்றுள்ளன.

**ஞாயிற்றுத் தொகுதி.** க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு, 234 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜூலை 1979. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம், 664, ஆஸ்பத்திரி வீதி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(4), 60 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 5.50, அளவு: 20x13 சமீ.*

*இந்நூலின் 'அடிப்படை உண்மைகளும் படிமுறை வளர்ச்சியும்" என்ற முதலாவது இயலில் பிரபஞ்சம், அண்டம், பால்வழி, அன்ட்ரொமீடா, ஞாயிற்றுத் தொகுதி ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 'ஞாயிற்றுத் தொகுதியின் தோற்றம் பற்றிய கொள்கைகள்" என்ற இரண்டாவது இயலில், தோற்றக் கோட்பாடுகள், மோதுகைக் கருதுகோள்கள், புகையுருக் கருதுகோள்கள், பெருக்குக் கருதுகோள்கள் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 'சூரியன் கோள்கள், துணைக்கோள்கள்" என்ற இறுதி இயலில் ஞாயிற்றுத் தொகுதியின் வயது, அதன் சமயம் எது, ஈர்ப்பு விசை, சூரியன், சூரியனின் மேற்பரப்பு, புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, ஏனைய வான்பொருட்கள், வால்வெள்ளி, உற்கைகள்-எரிவெள்ளி, ஆகாயக் கற்கள், சந்திரன் ஆகிய அடிப்படை விடயப் பரப்புகள் விளக்கப்பட்டுள்ளன. இளையோருக்கு அண்டம் பற்றிய அடிப்படை அறிவைப் போதித்து இத்துறையில் அவர்கள் மேலும் தேடலை வலுப்படுத்தும் வகையில் சுவாரஸ்யமாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

**படம்வரை கலை.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு, 234 காங்கேசன்துறை வீதி, 3வது பதிப்பு, ஜூலை 1984, 1வது பதிப்பு, ஜூலை 1979, 2வது பதிப்பு, ஒக்டோபர் 1981. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).*

*80 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 20.00, அளவு: 28x22 சமீ.*

*கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பு மாணவர்களின் புவியியல் பாடத்தின் படப் பயிற்சித் தேவையை இந்நூல் பூர்த்தி செய்கின்றது. புவியியில் விளக்கத்திலிருந்து புவியியல் நிலத்தோற்றத்தை எவ்வாறு வரையலாம் என்பதனை மாதிரி விளக்கப்படங்களுடன் படிப்படியாக இந்நூல் விளக்குகின்றது. புதிய பாடத்திட்டத்திற்கு இணங்க இந் நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. புதிய பாடத்திட்டத்தில் 'உலகப் பட வேலை"ப்பயிற்சிகள் தவிர்க்கப்பட்டுள்ளதன் காரணமாக இந்நூலின் முதலாம் பதிப்பில் இடம்பெற்ற உலகப் படப் பயிற்சிகள் இப்பதிப்பில் நீக்கப்பட்டுள்ளன.*

**பௌதிகச் சூழல்: காலநிலையியல்.** *க.குணராசா, ஆ.இராஜகோபால். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 2வது பதிப்பு, மார்ச் 1984, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1979. (யாழ்ப்பாணம்: விவேகானந்த அச்சகம்).*

*(2), 100 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 20.00, அளவு: 21x13.5 சமீ.*

*புதிய புவியியல் என்ற பதம் எண்பதுகளின் ஆரம்பத்தில் நவீன கல்வி உலகில் முக்கிய இடம்பெற்றிருந்தது. கல்வியுலகில் புவியியல் நோக்கும் பொருளும் (Scope and Content) காலந்தோறும் புதுப்பிக்கப்பட்டே வந்துள்ளதாயினும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய புதிய புவியியல் என்பது நடைமுறைப் புவியியல் என்ற சமூக அபிவிருத்திப் பண்பியலாக பயன்படுத்தப்படுகின்றது. இந்நூல் மேற்கூறிய அடிப்படையில் இலங்கைக் கல்வி அமைச்சு வகுத்த கல்வித் திட்டத்தை ஒட்டி உருவாகியுள்ளது. பாடநிலையில் மட்டுமல்லாது, மாணவரின் உள்ளூர் காலநிலை பற்றிய விருத்தியையும் ஆளுமையையும் மனதிற்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. வளிமண்டலம், சூரியக் கதிர்-வீச்சு-பெற்ற வெயில், ஈரப்பதன் படிவு வீழ்ச்சி-நீரியல் வட்டம், அமுக்கமும் காற்றுக்களும், உலகின் பிரதான காலநிலைப் பிரிவுகள், உலகின் இயற்கைத் தாவரம் ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எளியநடையில் எழுதப்பட்டுள்ளது.

**பௌதிகச் சூழல் காலநிலையியல்:** க.குணராசா, ஆ.இராஜகோபால். *யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி, 4வது பதிப்பு, ஓகஸ்ட் 1994, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1979. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாயி அச்சகம், 2/5, துரைராசா வீதி, வண்ணார்பண்ணை).*

*(4), 112 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13.5 சமீ.*

வளிமண்டலம், சூரியக் கதிர்வீச்சு பெற்ற வெயில், நீரியல் வட்டம், ஈரப்பதனும் மழைவீழ்ச்சியும், அமுக்கமும் காற்றுக்களும், கோட்காற்றுக்கள், சூறாவளிகள், வளிமண்டலப் பொதுச் சுற்றோட்டம், உலகின் காலநிலைப் பிரதேசங்கள், உலகின் இயற்கைத் தாவரம், வானிலைக் கருவிகள், மண் ஆகிய பன்னிரு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**பன்னிரண்டு மணிநேரம்.** நீலவண்ணன் (இயற்பெயர்: க.குணராசா). *யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1979. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).*

*164 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 7.60, அளவு: 18.5x12.5 சமீ.*

1973 நவம்பர் 23ம் திகதி இலங்கையின் கிழக்குக் கரையோரத்தில் முக்கியமாக மட்டக்களப்பில் பெருஞ்சூறாவளி வீசியது. அக்கொடிய சூறாவளியினால் மட்டக்களப்பில் ஏற்பட்ட அனர்த்தங்களை செங்கை ஆழியானும், செம்பியன்செல்வனும் நேரில் கண்டு கேட்டு எழுதிய Neo Journalisஅ வகையிலமைந்த நூல். சூறாவளியின் உற்பத்திக் களம், சூறாவளி மாதங்கள், அமைதி வலயம், சிதைந்தது அமைதி, காற்றுச் சுருள்கள், றிறோஸ் என்ற செய்மதி, பல பெயர் அரக்கன், காத்தான்குடி ஆஸ்பத்திரி, மரணங்கள், சூறாவளி அழிவுகள், மியாமி நகர சூறாவளி, கிழக்கு கரையை நோக்கி.., புயலில் சிக்கிய விமானம், சூறாவளியின் அமைப்பு, ஒற்றைக் கண் அரக்கன், வெளி வளையம், சூறாவளியின் முதற் தூதன், சரிந்த முதல் மரம், பாராட்டுப் பெறாத தியாகராசா, கடற்கொந்தழிப்பு, கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சி, வந்தான் அரக்கன், குரங்குகள் பறந்தன, மரங்கள் சரிந்தன, ஒரு பயங்கர அனுபவம், காற்றில் கிளம்பிய குழந்தை, கண் முன்னே குழந்தைகள் இறந்தன, கரையோரப் பகுதிகளில் வெள்ளம், கடலோடு அள்ளுண்டு, என் காலை வெட்டி.., தற்காலிக அமைதி, உக்கிரமான தாக்குதல், அமைச்சரின் வீட்டுக் கூரையும் தப்பவில்லை, யுத்தகளம், குழந்தைகளைத் தேடி, கடலின் பசி, எமது பயணம், காடு வழியே, பாதையில் விரிந்த அழிவுகள், துர் மரணங்கள், தேக்கமரக்காடு, கிளையில் தொங்கிய உடல், வாழைச்சேனை கடதாசி ஆலை, சித்தாண்டி.., ஏறாவூர் அழிவு, விண்ணில் தெரிந்த தீக்கோளம், கதிரவெளியில், ஓட்டமாவடி அழிவுகள், சேதமுற்ற கட்டிடங்கள், ஆஸ்பத்திரியில், கல்விக் கூடங்கள், புயலில் பிறந்த குழந்தை, புகையிரத நிலையம், குட்ஸ் வண்டி மோதி மரணம், காத்தான்குடியில்..., படுவான்கரை, நெல் ஆலை சரிந்தது, சுவரின் இடிபாடிற்குள், தலையில் மோதிய கல், கல்முனை அழிவின் உச்சம், கல்லூரி விடுதி சரிந்தது, ஆறு பேர் சமாதி, மண் மூடி மரணம், காரைதீவு கணேசன் மில், நிந்தாவூரில், கால்நடைகள் அழிந்தன, சூறாவளிக் கொள்ளைகள், சூறாவளியின் பயணம், பொலநறுவையில்.., சிலாபத்தில், மன்னாரில், தென்னிந்தியாவுக்குள் புகுந்தது, அழிவின் மதிப்பு, உடனடித் தேவைகள், சூறாவளி நிவாரணம், இனவாதம், அரசியல் வாதம், பிரதேச வாதம், மத வாதம், அதிகார வாதம், முடிவுரை ஆகிய தலைப்புகளின் கீழ் இந்நூல் விரிந்துள்ளது.

## 1980

**புவியியல் புள்ளிவிபரவியல்.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, **234** காங்கேசன்துறை வீதி, **3**வது பதிப்பு, ஓகஸ்ட் **1992**, **1**வது பதிப்பு, ஓகஸ்ட் **1980**, **2**வது பதிப்பு, ஓகஸ்ட் **1986**. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தாஅச்சகம்).*

***52** பக்கம், விளக்கப் படங்கள், விலை: ரூபா **40.00**, அளவு: **21x14** சமீ.*

எண்களாகப் பெறப்பட்ட தரவுகளை ஒழுங்குபடுத்தி, ஆராய்ந்து, முடிவுகளைப் பெற்று, ஒரு நாட்டின் பல் துறை சார்ந்த அபிவிருத்திகளுக்குப் பயன்படுத்த உதவும் அறிவியல் துறையாகப் புள்ளிவிபரவியல் (Statistics) விளங்குகிறது. புள்ளி விபரவியலில் தரவுகளே (Data) முதன்மையானவை. நவீன பொருளாதார அமைப்பில், தரவுகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. அதனால், அத் தரவுகளை ஒழுங்குபடுத்தி, ஆராய்ந்து, பொருத்தமான முடிவுகளை எடுக்கவேண்டியது அவசியமாகிறது. ஒரு நாடானது தனது இன்றைய நிலையைப் புரிந்து கொண்டு, எதிர்கால விருத்திக்குத் திட்டமிடுவதற்குப் புள்ளிவிபரவியலாய்வுகள் அத்தியாவசிய தேவையாகும். அவ்வகையில் அடிப்படைப் புள்ளிவிபரவியலின் எண்ணக் கருக்களை, புவியியல் புள்ளிவிபரவியல் என்ற இச் சிறுநூல் விளக்குகின்றது. ஒழுங்கற்ற தரவுகளை ஒழுங்கு படுத்தி, அவற்றை ஏற்ற வரைபடங்களாக வரைந்து, அவற்றிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ற முடிவுகளைக் காண்பதற்குரிய செய்முறைகளை இலகுவாக இந் நூல் விபரிக்கின்றது. புவியியல் புள்ளிவிபரவியலில், வரைபடங்கள் பிரதானமானவை. தரவுகளிலிருந்து முடிவுகளைக் கணித முறை மூலம் பெறமுடியும் என்றாலும், படவேலையின் ஓரம்சமாகக் கருதப்படும் புவியியல் புள்ளிவிபரவியலில் இறுதி முடிவுகள் வரைப்படங்களிலிருந்து பெறுவது செய்முறைக் கல்வியின் முக்கிய அம்சம். அதனால், இந் நூல் அந்த அம்சத்திற்கு முதன்மை கொடுத்து ஆக்கப்பட்டுள்ளது. இந்த நூலில் பின்வரும் மூன்று புள்ளிவிபரவியல் நுட்பங்களைக் கற்போம். (1). புள்ளிவிபரத் தரவுகளை ஒழுங்குபடுத்தல். (2). ஒழுங்குபடுத்திய தரவுகளை வரைப்படங்களில் அமைத்தல். (3). அவற்றிலிருந்து பொருத்தமான முடிவுகளைப் பெறுதல். உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு இந்த நூல் பேருதவியாக அமையும்.

**புதிய புவியியல் புள்ளிவிபரவியல்: அடிப்படைப் புள்ளிவிபரவியல்.** க.குணராசா. *யாழ்ப்பாணம்: வி.மகாலிங்கம், ரேகா வெளியீடு, 1வது ஒழுங்கை, பிறவுன் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1980. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 காங்கேசன்துறை வீதி).*

*48 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: ரூபா 6.50, அளவு: 20x14 சமீ.*

க.பொ.த. உயர்தர புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும், G.A.Q பாடநெறியினைப் பயிலும் மாணவர்களுக்கும் பயனளிக்கும் வகையிலும் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. எண்களாகப் பெறப்பட்ட தரவுகளை ஒழுங்குபடுத்தி, ஆராய்ந்து, முடிவுகளைப் பெற்று, ஒரு நாட்டின் பல்துறைசார்ந்த அபிவிருத்திகளுக்கும் பயன்படுத்த உதவும் அறிவியல் துறையாக பள்ளிவிபரவியல் (Statistics) விளங்குகின்றது. புள்ளிவிபரவியலின் தரவுகளே (Data) முதன்மையானவை. நவீன பொருளாதார அமைப்பில் தரவுகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. அதனால் அத் தரவுகளை ஒழுங்குபடுத்தி ஆராய்ந்து பொருத்தமான முடிவுகளை எடுக்கவேண்டியது அவசியமாகின்றது. இந்நூலில் பின்வரும் மூன்று புள்ளிவிபரவியல் நுட்பங்கள் விளக்கப்பட்டுள்ளன. 1. புள்ளிவிபரத் தரவுகளை ஒழுங்குபடுத்துதல், 2. ஒழுங்குபடுத்திய தரவுகளை வரைபடங்களில் அமைத்தல், 3. அவற்றிலிருந்து பொருத்தமான முடிவுகளைப் பெறுதல்.

## 1981

**எட்டாந்தரப் படவேலை-சமூகக் கல்வி.** க.குணராசா, கமலா குணராசா. *யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1981. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).*

*32 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 6.50, அளவு: 28x22 சமீ.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாந் தரத்திற்கான புதிய படவேலைப் பாடத்திட்டம் (புதிய பாடத் திட்டம்). படவேலை, உலகப் படம் (நெல், கோதுமை, சோளம் ஆகியவற்றின் பரம்பல், சமுத்திர நீரோட்டமும் மீன்பிடித் தளங்களும், இறைச்சிக்காக மாடு, செம்மறி ஆடு வளர்க்கப்படும் பிரதேசங்கள், பாற்பண்ணைப் பிரதேசங்கள், தேயிலை, கோப்பி, கொக்கோ விளையும் பிரதேசங்கள், பருத்தி சணல், நூற்சணல், பட்டு உற்பத்தி, செய்யும் பிரதேசங்கள், உலகின் பிரதான நிலக்கரி, பெற்றோலிய வயல்களின் பரம்பல்), இலங்கைப் படம் (நிர்வாக மாவட்ட எல்லைகளை வரைந்து மாவட்டங்களைப் பெயரிடுதல், மாவட்டங்களின் தலைப்பட்டினங்களைக் குறிப்பிடுதல்), சமவுயரக் கோட்டுப் பயிற்சி (தட்டையான தளத்தில் உயரத்தைக் காட்டுவதற்குக் கைக்கொள்ளப்படும் வழிவகைகள் அறிமுகம், சமவுயரக் கோட்டுப் படங்கள், சமவுயரக் கோட்டுப் படங்களில் பின்வருவனவற்றை இனம் கண்டுகொள்வதற்கான பயிற்சியை அளித்தல் - கூம்புக் குன்று, பாறைத் தொடர், பீடபூமி அல்லது மேட்டு நிலம், சமவெளி, பள்ளத்தாக்கு, சுவடு, வெளியரும்புப் பாறை, குத்துச் சாய்வு, மென்சாய்வு, குழிவுச் சாய்வு, குவிவுச் சாய்வு, இடவுயரங்கள், திரிகோண கணித நிலையங்கள்) ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இந்நூல் இப்பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களுக்கான பயிற்சிகளை வழங்குகின்றது.

**மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது.** நீலவண்ணன் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 1வது பதிப்பு, ஜூலை 1981. (யாழ்ப்பாணம்: ஆனந்தா புத்தகசாலை, 226 காங்கேசன்துறை வீதி).

84 பக்கம், புகைப்படங்கள், விலை: சாதாரண பதிப்பு: ரூபா 8.00, நூலகப் பதிப்பு: ரூபா 10.00, அளவு: 20.5x14 சமீ.

**மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது.** நீலவண்ணன் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 2வது பதிப்பு, ஆகஸ்ட் 1981, 1வது பதிப்பு, ஜூலை 1981. (யாழ்ப்பாணம்: ஆனந்தா புத்தகசாலை, 226 காங்கேசன்துறை வீதி).
80 பக்கம், புகைப்படங்கள், விலை: சாதாரண பதிப்பு: ரூபா 8.00, நூலகப் பதிப்பு: ரூபா 10.00, அளவு: 21x14 சமீ.

**மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது.** நீலவண்ணன். யாழ்ப்பாணம்: கமலம் வெளியீடு, 3வது பதிப்பு, மார்ச் 2003, 1வது பதிப்பு, ஜூலை 1981, 2வது (வரதர்) பதிப்பு, ஆகஸ்ட் 1981. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

(4), 80 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 175., அளவு: 22x14.5 சமீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1981* மே *31* ம் திகதி இரவு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தற் பிரச்சாரக் கூட்டத்தில் ஆரம்பமான வன்செயல்களும் அதையொட்டி யாழ் நகரெங்கும் பரவி, யாழ். பொது நூலகம், ஈழநாடு அலுவலகம், நாச்சிமார் கோவில், வீடுகள், கடைகள், வாகனங்கள் என யாழ் நகரமே அரசபடைகளினால் எரியூட்டப்பட்டமையும் இந்நூலில் செய்திகள், புகைப்படங்கள், நேரடி அறிக்கைகள் ஆகியவற்றின் துணையுடன் தொகுக்கப்பெற்றுள்ளது. புகைப்பட உதவி கே.வி.சாமி, ஏ.வி.எம்.

**கனவுகள் கற்பனைகள் ஆசைகள்.** செங்கைஆழியான். கொழும்பு: வீரகேசரி பிரசுரம், த.பெ.இல. *160, 1*வது பதிப்பு, ஆகஸ்ட் *1981.* (கொழும்பு *14:* எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், *185* கிராண்ட் பாஸ் வீதி).

*(4), 234* பக்கம், விலை: ரூபா *7.90*, அளவு: *18x12.5* சமீ.

மறைநின்ற குளம் என்ற ஒரு காட்டுக்கிராமம் கதைக்குரிய பகைப்புலமாகும். அக்கிராமத்தில் குடியேறிய மக்களின் சாதாரண ஆசாபாசங்களை அவர்கள் தொழில் பின்னணியில் இந்நாவல் பேசுகின்றது. சமூக விரோதிகளால் பாதிக்கப்பட்ட கிராம மக்களின் காட்டாற்று எழுச்சியல்ல இந்நாவல். கனவுகளையும் கற்பனைகளையும் ஆசைகளையும் மனங்களில் நிறைத்து நிற்கும் ஒரு கிராமத்தின் குளத்தேக்கம் அது. மடை திறந்ததும் வயல்களுக்குள் குளத்துநீர் விரைவது போல, மனம் திறந்ததும் கனவுகள், கற்பனைகள், ஆசைகள் சமூகக் களத்தில் பொங்குகின்றன. அந்த உணர்வுப் போராட்டங்களை இந்த நாவலில் சமூகப் பொலிவுடன் செங்கை ஆழியான் சித்திரித்துள்ளார். வீரகேசரியின் *72*வது வெளியீடு. ஆசிரியரின் நூலுருப் பெறும் *14*ஆவது நாவல்.

**பொது அறிவு: பகுதி 1.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், *82,*பிரவுண் வீதி, *1*வது பதிப்பு, டிசம்பர் *1981.* (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம், செம்பியன் ஒழுங்கை).
*(4), 92* பக்கம், வரைபடம், விலை: ரூபா *30.00*, அளவு: *21x14* சமீ.

**பொது அறிவு: பகுதி 1.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், *82,*பிரவுண் வீதி, *3*வது பதிப்பு, ஜனவரி *1991, 1*வது பதிப்பு, டிசம்பர் *1981.* (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம், செம்பியன் ஒழுங்கை).

*(4), 92* பக்கம், வரைபடம், விலை: ரூபா *30.00*, அளவு: *21x14* சமீ.

பொது அறிவுக் கேள்வி பதில்கள். அரசாங்க உத்தியோகங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான தகுதிகாண் பொதுப்பரீட்சைகளுக்குத் தோற்று பவர்களுக்கும், தமது திறனையும் அறிவையும் விருத்தி செய்து கொள்ள விரும்பும் பிறருக்கும் ஏற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொது அறிவு: பகுதி 2.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1981. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

xxxii, 97- 140 பக்கம், விலை: ரூபா 10.00, அளவு: 20x14 சமீ.

இந்நூல் பொது அறிவுக் கேள்வி பதில்களைக் கொண்டது. அரசாங்க உத்தியோகங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான தகுதிகாண் பொதுப்பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களுக்கும், தமது திறனையும் அறிவையும் விருத்தி செய்து கொள்ள விரும்பும் பிறருக்கும் ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே வெளியிடப்பட்ட இந்நூலின் முதலாம் பகுதியின் தொடராக இதில் பக்க இலக்கமிடப்பட்டுள்ளது. முதற் பகுதியில் அத்தியாயங்கள் 1 முதல் 3 வரை இடம்பெற்றிருந்த நிலையில் இப்பகுதியில் 4 முதல் 7 அத்தியாயங்களில் முறையே பெரியார்கள் (ப.97-112), சுருக்கக் குறியீடுகள் (ப.113-117), வரலாறு-அரசியல்-பல்துறை (ப.118-138), இன்றைய பிரமுகர்கள் (138-140) ஆகிய தலைப்புக்களின் கீழ் பொது அறிவுத் தகவல்கள் தரப்பட்டுள்ளன. பின்னிணைப்புகளாக மேலும் சில பொது அறிவுத் தகவல்கள் 32 பக்கங்களில் ரோமன் பக்க இலக்கங்களின் கீழ் தரப்பட்டுள்ளன.

## 1982

**பொது அறிவு.** க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா வெளியீடு, காங்கேசன்துறை வீதி, 7வது பதிப்பு, நவம்பர் 1997, 1வது பதிப்பு, ஜனவரி 1982. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, G.L.1/2 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(4), 176 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 21x13.5 சமீ.

பூமி-உலகம்-இலங்கை, அறிவியல் உண்மைகள், விண்வெளி விந்தைகள், உயிர்ச்சூழல், உலகப் பெரியார்கள், பல்துறைத் தகவல்கள் ஆகிய ஆறு பிரிவுகளில் பொது அறிவுக்குரிய விடயங்களை உள்ளடக்கியதாக இந் நூல் எழுதப்பட்டுள்ளது.

**பொது அறிவு.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 5வது பதிப்பு, ஏப்ரல் 1993, 1வது பதிப்பு, ஜனவரி 1982. (யாழ்ப்பாணம்: மகாலட்சுமி அச்சகம்).

144 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14.5 சமீ.

பூமி, இலங்கை, உலகம் என்ற அடிப்படையில் பொது அறிவு விடயங்களை இந்நூல் வழங்குகின்றது. நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் புவியியல் பயிற்சியாளராகவும், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் புவியியல் விரிவுரையாளராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் தொழில்நுட்பக் கல்லூரி, கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் ஆசிரியராகவும் பணியாற்றியவருமாவார். பின்னாளில் கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபராகப் பணியாற்றிய வேளையில் இந்நூலை வெளியிட்டுள்ளார்.

**ஏன் எப்படி எவரால்?** *க.குணராசா (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1982. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி). 36 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 4.00, அளவு: 20x13.5 சமீ.*

அறிவியல் உண்மைகளை மாணவர்கள் உட்பட அனைவரும் தெரிந்துகொள்வதற்கும் புரிந்துகொள்வதற்கும் உதவும் நூல் இது. புதிய கருவிகளைக் கண்டுபிடித்தவர்கள் யார் எவர் என்ற பட்டியலுடன், இறந்த உடல் நீரில் மிதப்பதேன்? மின்னல் எவ்வாறு தோன்றுகின்றது? இரவில் வெளவால்கள் எவ்வாறு பறக்கின்றன? கானல் நீர் எவ்வாறு தோன்றுகின்றது? மின்மினிப் பூச்சிகள் ஒளிர்வது எவ்வாறு? என்பன போன்ற சுவாரஸ்யமான கேள்விகளுக்கான சுருக்க விளக்கங்களை இந் நூலில் காணமுடிகின்றது.

## 1983

**அக்கினிக்குஞ்சு.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஜனவரி 1983. (யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்).*
*x, 80 பக்கம், விலை: ரூபா 6.90, அளவு: 17.5x12.5 சமீ.*

யாழ். இலக்கிய வட்டத்தின் 29வது வெளியீடு. தினகரன் நடத்திய குறுநாவல் போட்டியில் 1978இல் பரிசில் பெற்றது. தமிழ்மக்கள் மீதான இனவெறிக் கொடுமையும், தமிழர்களிடையே புரையோடிப்போன சாதிப்பாகுபாட்டுக் கொடுமைகளும் ஒப்பீட்டுரீதியில் பிணையப்பெற்ற குறுநாவல். 1976களில் யாழ்ப்பாணத்தில் தீவிரவாத இளைஞர்களைத் தேடி இராணுவமும் பொலிசாரும் வலைவீசித் திரிந்த காலத்தினைச் சித்திரிக்கும் கதையம்சம். 1973இல் வீரகேசரியில் வெளிவந்த யொகாறா என்ற இஸ்லாமிய சமூகப் பின்னணியில் மலர்ந்த குறுநாவலும் இணைக்கப்பட்டுள்ளது.

**காற்றில் கலக்கும் பெருமூச்சுகள்.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: சாந்தி பிரசுரம், சுஜாதா பப்ளிக்கேஷன்ஸ், 50/29, வைரவர் கோவில் ஒழுங்கை, கொட்டடி, 1வது பதிப்பு, 1983. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை)*

*98 பக்கம், விலை: ரூபா 7.90, அளவு: 21x14 சமீ.*

இக்கதையின் நாயகி, தனது பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே உழல்கின்ற ஒரு பரிதாபத்துக்குரிய பாத்திரமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளாள். தியாகமென்றால் கிலோ என்னவிலை என்று கேட்டுநிற்கும் ஒரு சமுதாயத்தின் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளாள். பகட்டும் படாடோபமும் தானே எல்லாம் என்ற எண்ண மேலீட்டில் தங்களை உயர்ந்த மனிதர்கள் என்று காட்டிக்கொள்ளும் உளுத்துப்போன இவ்வுலகத்தின் பிரகிருதிகளுக்கு மத்தியில் அவள் ஒரு சுமைதாங்கியாக, துயரத்தின் சின்னமாக, துன்பத்தின் பிறப்பிடமாக, வலம்வருகிறாள். சோதனைகள், துயரங்கள் அத்தனையும் மனவுறுதியுடன் தாங்கியும், அது வெடித்துச் சிதறும் நிலைக்கு வந்துவிடும் போது தன் உள்ளத்தை பெருமூச்சுகளால் தேற்றிக்கொண்டு நிலை தழும்பாமல் நிமிர்ந்து நிற்கிறாள். செங்கை ஆழியானின் சமூக நாவல்களுள் இதுவும் ஒன்று.

## 1984

**கிரகித்தல் Comprehension.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 6ஆவது பதிப்பு, மே 1989, 1வது பதிப்பு, ஜனவரி 1984. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

(4), 50 பக்கம், விலை: ரூபா 25.00, அளவு: 20x13.5 சமீ.

இது Comprehension என ஆங்கிலத்தில் வழங்கும் கிரகித்தல் பயிற்சியை வளர்க்க உதவும் நூல். கல்வியறிவோடு இயல்பான பகுத்தறிவு, சிந்தனைத் திறன், ஆக்கபூர்வச் செயற்பாடுகள், பலரிடையே தன்னை இனம்காட்டும் ஆளுமை, பொறுப்பேற்கும் ஆற்றல் என்பனவற்றைக் கிரகித்தல் திறன் வளர்க்கின்றது. ஒருவரின் அறிவுத்திறனை மதிப்பிடுவதற்கும் கண்டறிவதற்கும் சில தேர்வுகள் அவசியமாகின்றன. கிரகிப்புத் திறன், கிரகிக்கும் மெய்க் கருத்து, சுருக்கக் கிரகித்தல்-கிரகிக்கும் சுருக்கக் கருத்து, விரிவுக் கிரகித்தல்-கிரகிக்கும் விரிவுக் கருத்து, கிரகித்தல் மாற்றுக் கூற்றுக்கள் ஆகிய ஐந்து அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**கிரகித்தல்** Comprehension. க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 2வது திருத்திய பதிப்பு, ஜனவரி 1995, 1வது தமிழகப் பதிப்பு, ஏப்ரல் 1990. (யாழ்ப்பாணம்: மகாலட்சுமி அச்சகம்).

(4), 58 பக்கம், விலை: ரூபா 25.00, அளவு: 19x13.5 சமீ.

பொதுவாக உலக நாடுகளில் பொது அறிவு, நுண்ணறிவு, கிரகித்தல் ஆகிய மூன்று துறைகளில் ஒருவரின் அறிவுத்திறன் மதிப்பிடப்படுகின்றது. சொல்பவற்றிலிருந்தும் படிப்பவற்றிலிருந்தும் மெய்க்கருத்தைப் புரிந்துகொள்வது கிரகித்தலாகும். கிரகிக்கும் மெய்க்கருத்து, கிரகிக்கும் சுருக்கக் கருத்து, கிரகிக்கும் விரிவுக் கருத்து, கிரகிக்கும் மாற்றுக் கூற்றுகள் ஆகிய நான்கு பகுதிகளாக இந்நூலில் கிரகித்தற் பயிற்சிகள் விபரிக்கப்பட்டுள்ளன. ஜனவரி 1984இல் இலங்கையில் வெளியான இந்நூலின் தமிழக முதற்பதிப்பு 1990இல் சென்னை நியு செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடாக வெளிவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிடுகுவேலி.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: ஜே.எம்.ஆர். குகநாதன், ரஜனி வெளியீடு, 248/5, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜூன் 1984. (யாழ்ப்பாணம்: அன்பு பிரின்டர்ஸ், கே.கே.எஸ்.வீதி).
(4), 76 பக்கம், விலை: ரூபா 4.90, அளவு: 21x14 சமீ.

**கிடுகுவேலி.** செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கியவட்டம், 2வது பதிப்பு, 1989. 1வது பதிப்பு, ஜூன் 1984. (யாழ்ப்பாணம்: சுவர்ணா அச்சகம், கே.கே.எஸ். வீதி)

(16), 96 பக்கம், விலை: ரூபா 30.00, அளவு: 18x12 சமீ.

**கிடுகுவேலி.** செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A பிரவுண் வீதி, 4வது பதிப்பு, ஏப்ரல் 2003, 1வது பதிப்பு, ஜூன் 1984, 2வது பதிப்பு, 1989, 3வது பதிப்பு, 1992. (யாழ்ப்பாணம்: Higher Education Press).
(16), 96 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 19.5x14.5 சமீ.

ரஜனி வெளியீடாக சிலகாலம் வெளியிடப்பட்ட மாதநாவல் வரிசையில் மே- ஜூன் 1984க்குரிய முதலாவது இதழில் (மலர் 1, இதழ் 1) இந்நாவல் முன்னதாகப் பிரசுரமாகியிருந்தது. இரண்டாவது பதிப்பு யாழ் இலக்கிய வட்டத்தினால் நவம்பர் 1989இலும், மூன்றாவது பதிப்பு ஜனவரி 1992இல் யாழ்ப்பாணம் கமலம் பதிப்பகத்தினாலும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. ஈழநாடு வாரமலரில் தொடராக வெளிவந்ததுடன் 1982-85 காலப்பகுதியில் வெளியான சிறந்த குறுநாவலுக்கான 'தகவம்" பரிசையும் பெற்ற நாவல். ஈழத்து வாசகர் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியதுடன் செங்கை ஆழியானின் பரந்த வாசகர் கூட்டத்தை மேலும் அகலப்படுத்திய நாவலாக இது அமைந்திருந்தது. யாழ்ப்பாணக் கலாச்சாரம் புறக்காரணிகளால் எவ்வாறு மாறுபடுகின்றது என்றும், மனித உறவுகளில் பணவசதி எப்படி மாற்றத்தைக் கொண்டு வருகின்றது என்பதையும் கணவன் மனைவி உறவுகள் எவ்வாறு பூசி மெழுகலின்றி நேரடியாக வார்த்தைகளில் பரிணமிக்கின்றன என்பதையும் ஆசிரியர் இந்த நாவலில் காட்டுகின்றார். தன் சகோதரிகளின் வாழ்விற்காக வெளிநாடு சென்று உழைக்கும் அண்ணன்களையும், அதனால் அத்தகைய ஒருவனின் வாழ்வில் புதியதொரு சிக்கலை ஏற்படுத்தும் மனைவியையும் சுற்றி இக்கதை படர்கின்றது. சமகால யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கிடுகுவேலிக் கலாச்சாரத்தின் விரைவான மாறும் முகத்தோற்றத்தை புறவாழ்வில் மட்டுமன்றி அகவாழ்விலும் காணமுடிகின்ற வரவேற்கத்தக்க அல்லது ஒதுக்கத்தக்க அம்சங்களை இந்த நாவலில் செங்கை ஆழியான் சுட்டிக் காட்டுகின்றார்.

**ஓ அந்த அழகிய பழைய உலகம்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: ரஜனி வெளியீடு, 2வது பதிப்பு, 1988. முதற் பதிப்பு, 1984. (யாழ்ப்பாணம்: அன்பு பிரின்டர்ஸ்,)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*66 பக்கம், விலை: ரூபா 8.50, அளவு: 21x14 சமீ.*

**ஓ அந்த அழகிய பழைய உலகம்.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10ஏ, பிரவுண் வீதி, 3வது பதிப்பு, ஜனவரி 2005, 2வது பதிப்பு, 1988, முதற் பதிப்பு, 1984. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B புளுமெண்டால் வீதி).*

ix, *78 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 19x14 சமீ.*

*இரு வேறுபட்ட களங்கள். முரண்பட்ட பாத்திரங்கள் என்பன ஒப்பீட்டு வகையாக விபரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளன. ஒரு காட்டுக் கிராமத்தின் அமைதியும் அழகும் நவீனத்துவங்களின் வருகையால் எவ்வாறு சீரழியத் தொடங்குகின்றனவென்பதை இந்நாவல் பேசுகின்றது. நகர்ப்புறங்களின் சந்தடி மிக்கதும் நவீன நாகரீகம் நிலைத்ததும் இயந்திரமயமானதுமான வாழ்வும், கிராமப்புறங்களின் அமைதியும் அழகும் இயற்கை யோடு இணைந்ததுமான வாழ்வும் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளன. 'ஈழநாடு பாரிஸ்" ஆசிரியர் ரஜனி குகநாதன், யாழ்ப்பாணத்தில் இலக்கியப் பணியாற்றிய வேளையில் அவரது ரஜனி மாதாந்த நாவல் வெளியீட்டுத் தொடரில் ஆறாவது இதழாக 1984இல் இந்நாவல் வெளியிடப்பட்டிருந்தது. பின்னர் சென்னையிலிருந்து வெளிவந்த தாமரை முற்போக்கு இதழிலும், பாரிஸ் ஈழநாட்டிலும் தொடராக வெளிவந்திருந்தது. இப்பதிப்பின் நூலியல் பதிவுகளில் முதற்பதிப்பு மார்ச் 1985 எனவும், இரண்டாம் பதிப்பு ஏப்ரல் 1990 எனவும் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

**நடந்தாய் வாழி, வழுக்கியாறு.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: சிரித்திரன் பிரசுரம், காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு. 1984. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை).*

vi, *40 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 4.00, அளவு: 18x12 சமீ.*

*யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாய்கின்ற ஒரேயொரு நதியான வழுக்கியாற்றைப் பற்றிய சில தகவல்கள் இந்நூலிலிருந்து அறிய முடிகின்றது. தகவல்களை வறட்சியாகக் கூறாமல் அச் சூழலுக்குப் பொருத்தமான கதையினூடாக அவை சொல்லப்பட்டுள்ளன. சிரித்திரன் ஆண்டு மலரில் பிரசுரமான குறுநாவல். வழக்கியாறு தோற்றம் பெறுகின்ற அளவெட்டிப் பினாக்கைக் குளத்திலிருந்து, அது கடலோடு சங்கமமாகும் நவாலிக்கடல் வரை நடக்கும் கதை அமைப்பு. மாட்டுச்சவாரி முகத்தாரின் சவாரி மாடொன்று காணாமல் போகிறது. அது வழுக்கியாற்றுப் படுக்கையினூடாக சென்றதாகக் கிடைத்த தகவலையடுத்து தரகர் மயிலர், சண்டியன் செல்லத்துரை, ஊர் அப்புக்காத்து அப்பையர் ஆகியோர் புறப்படுகின்றனர். அவர்களினூடே கதை சுவையாக விரிகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1985

**கடல் கோட்டை.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: சு.இராசகுலேந்திரன், விவேகானந்தா அச்சகம், ஸ்டான்லி வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1985. (யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்).

174 பக்கம், வரைபடம், சித்திரங்கள், விலை: ரூபா 20.00, அளவு: 18x12.5 சமீ.

**கடல் கோட்டை.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10 A, பிறவுன் வீதி, 3வது பதிப்பு, ஓகஸ்ட் 2008, 1வது பதிப்பு, ஜனவரி 1985, 2வது பதிப்பு, ஓகஸ்ட் 1993. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

124 பக்கம், வரைபடம், சித்திரங்கள், விலை: ரூபா 320., அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-1200-06-3.

கடல்கோட்டை, யாழ்ப்பாண வரலாற்றில் போர்த்துக்கேயரின் ஆட்சி மறைவும் ஒல்லாந்தரின் ஆட்சி உதயமும் நிலவிய காலகட்டத்தை படம்பிடித்துக் காட்டுகின்றது. அக்காலத்தில் நிலவிய சமய, சமூக, கலாச்சார, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளை யதார்த்தமாகச் சித்திரிக்கின்றது. ஈழநாடு வாரமலரில் 1984 இல் 20 வாரங்கள் தொடராக வெளிவந்தது.

**அபிவிருத்திப் புவியியல்: உலகப் பாங்குகள்.** க.குணராசா, கமலா குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜூன் 1985. (யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்).
63 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 9.50, அளவு: 21x14 சமீ.

செங்கை ஆழியான்-க.குணராசா, பேராதனை, இலங்கைப் பல்கலைக் கழகத்தில் புவியியல் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றியவர். அவரது துணைவியார் திருமதி கமலா குணராசா கொக்குவில் இந்துக் கல்லூரியின் புவியியல் ஆசிரியராகவும், யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியின் பகுதிநேர விரிவுரையாளராகவும், கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையின் அதிதிப் போதனாசிரியராகவும், புவியியல் ஆலோசக ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

**அபிவிருத்திப் புவியியல்: உலகப் பாங்குகள்.** க.குணராசா, கமலா குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 4வது பதிப்பு, ஜூன் 1988, 1வது பதிப்பு, ஜூன் 1985. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 காங்கேசன்துறை வீதி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(4), 68 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 15.00, அளவு: 20x14 சமீ.*

இந்நூலில் இரு அத்தியாயங்கள் உள்ளன. 'அபிவிருத்தியில் புவியியலின் பங்கு" என்ற முதலாவது அத்தியாயத்தில் அபிவிருத்தியில் புவியியலின் பங்கு, அபிவிருத்தி எண்ணக்கரு, அபிவிருத்தியில் இடவேறுபாடுகள், அபிவிருத்தியடைந்த நாடுகளும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும் ஆகிய தலைப்பகளின் கீழ் அபிவிருத்திப் புவியியலின் சில அம்சங்கள் விளக்கப்பட்டுள்ளன. 'அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கும் இடையில் காணப்படும் இடைவெளி" என்ற இரண்டாவது அத்தியாயத்தின் கீழ் அபிவிருத்தியை அடையாளம் காட்டும் குறிகாட்டிகள், தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி, ஆள்வீத வருமானம் ஒருநாட்டின் அபிவிருத்தியை அளவிடுமா?, சுகாதார மருத்துவ வசதிகள், போக்குவரத்து வசதிகளும் வலு நுகர்வும், நகராக்க மட்டம், வர்த்தக விருத்தி, சேமிப்பு நிலையும் தலைக்குரிய மெய் வருமானமும், பௌதிக வாழ்க்கைச்சுட்டெண் ஆகிய பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**அபிவிருத்திப் புவியியல்: உலகப் பாங்குகள்.** *க.குணராசா, கமலா குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 5வது பதிப்பு, செப்டெம்பர் 1992, 1வது பதிப்பு, ஜீன் 1985. (யாழ்ப்பாணம்: மகாலட்சுமி அச்சகம், 37, கண்டி வீதி).*

*(6), 66 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.*

**அபிவிருத்திப் புவியியல்: உலகப் பாங்குகள்.** *க.குணராசா, கமலா குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 6 வது பதிப்பு, ஓகஸ்ட் 1994, 1வது பதிப்பு, ஜீன் 1985. (யாழ்ப்பாணம்: மகாலட்சுமி அச்சகம், 37, கண்டி வீதி).*

*(4), 67 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 35.00, அளவு: 20x14 சமீ.*

அபிவிருத்தியில் புவியியலின் பங்கு, அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் இடையே காணப்படும் இடைவெளி, பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி ஆகிய நான்கு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**அபிவிருத்திப் புவியியல்: இந்தியா.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 7வது பதிப்பு ஒக்டோபர் 1993, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1985. (யாழ்ப்பாணம்: மகாலக்ஷ்மி அச்சகம், 37, கண்டி வீதி).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(4), 5-54 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 40.00, அளவு: 20x14 சமீ.*

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தர வகுப்பு மாணவர்களின் அபிவிருத்திப் புவியியலின் ஒரு பகுதி, தனி ஆய்வாகும். அதில் ஆராயப்பட வேண்டிய நாடுகளில் ஒன்று இந்தியா. இந்தியாவின் அபிவிருத்திப் புவியியலை இந்நூல் விளங்குகிறது. பாடநூல் தேவையை மனதில் கொண்டு இந் நூல் ஏராளமான விளக்கப்படங்களுடன் ஆக்கப்பட்டிருக்கின்றது. புதிய புள்ளி விபரங்கள் கைக்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியாவின் பௌதிகச் சூழல், இந்தியாவின் காலநிலை, இந்தியாவின் இயற்கை வளங்கள், இந்தியாவின் பண்பாட்டுச் சூழல், இந்தியாவின் பயிர்ச்செய்கை, இந்தியாவின் நீர்ப்பாசனம், இந்தியாவின் கைத்தொழில்கள் என ஏழு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 1986

**சூரியனின் கதை.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: க.குணராசா, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).*

*82 பக்கம், விலை: ரூபா 6.00, அளவு: 21.5x14 சமீ.*

அறிவியல் நூல் வரிசையில் முதலாவது வெளியீடு. சூரியன் பற்றிய விரிந்துவரும் அறிவியல் உண்மைகளை இளையோருக்குப் புரியும் வகையில் எளிமைப்படுத்தி இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் உதவி விரிவுரையாளராகவும், கொக்குவில் இந்துக் கல்லூரியின் புவியியல் ஆசிரியராகவும், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியின் பகுதிநேர விரிவுரையாளராகவும், கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையின் அதிதிப் போதனாசிரியராகவும், புவியியல் சஞ்சிகைளின் ஆலோசக ஆசிரியராகவும் பணியாற்றிய வகையில் புவியியல்துறையில் பரந்த அனுபவம் மிக்கவர்.

**சந்திரனின் கதை: சந்திரத் தரையியல்.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 1வது பதிப்பு, நவம்பர் 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன் துறை வீதி).*
*(5), 32 பக்கம், விலை: ரூபா 6.00, அளவு: 21x14 சமீ.*

அறிவியல் நூல்வரிசையில் ஸ்ரீலங்கா புத்தகசாலையின் 3வது நூலாக வெளிவந்துள்ளது. ஞாயிற்றுத் தொகுதி (1979), சூரியனின் கதை (1986), பூமியின் கதை (1986) என்ற வரிசையில் ஆசிரியர் எழுதியுள்ள இந்நூல், விரிந்துவரும் அறிவியல் உண்மைகளைச் சகலரும் இலகுவில் தெரிந்துவைத்திருக்கவேண்டும் என்ற நோக்கில் மாணவர்களுக்கேற்ற அடிப்படை அறிவியலைப் புகட்டும் வகையில் அமைந்துள்ளது. சந்திரன்-துணைக்கோள், சந்திர ஆய்வு, சந்திரனின் பிறப்பு, சந்திர மேற்பரப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல், சந்திரனின் தரைத்தோற்றம், மலைத் தொடர்கள், எரிமலை வாய்கள், ஓடைகள், ஒளிப்பட்டைகள், எரிமலைகளின் தோற்றம், சந்திரப் பாறைகள், சுற்றுகை, சுழற்சி, சந்திரனின் தோற்றங்கள், கிரகணங்கள், வற்றுப் பெருக்கு ஆகிய உபதலைப்புகளின் கீழ் விளக்கப்படங்கள் சகிதம் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**பூமியின் கதை.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 1வது பதிப்பு, நவம்பர் 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி)*

*32 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 6.00, அளவு: 21x14 சமீ.*

அறிவியல் நூல்வரிசையில் ஸ்ரீலங்கா புத்தகசாலையின் 2வது நூலாக வெளிவந்துள்ளது. சூரியனின் கதை (1986) என்ற நூலைத்தொடர்ந்து இரண்டாவதாக வெளிவந்திருக்கும் நூல் இது. விரிந்துவரும் அறிவியல் உண்மைகளைச் சகலரும் இலகுவில் தெரிந்துவைத்திருக்கவேண்டும் என்ற நோக்கில் பூமியின் பிறப்பு, இயக்கம் தொடர்பாக மாணவர்களுக்கேற்ற அடிப்படை அறிவியலைப் புகட்டும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பூமியின் பிறப்பு, பூமியின் அமைப்பு, பூமியின் அடர்த்தி, பாறைகள், பூமியின் வடிவம், கண்டங்களினதும் சமுத்திரங்களினதும் தோற்றம், கவசத் தட்டுக் கொள்கை, பூமியின் இயக்கங்கள், கோடைச் சூரிய கணநிலை நேரம், சமவிராக்காலங்கள், உலகின் தரைத்தோற்றம், மலைகள், மேட்டு நிலங்கள், எரிமலைகள், நீரூற்றுக்கள், பூமியின் மேற்பரப்பில் ஏற்படும் மாற்றங்கள், பூமியின் வளங்கள் ஆகிய உபதலைப்புகளின் கீழ் விளக்கப்படங்கள் சகிதம் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**அபிவிருத்திப் புவியியல்: ஐக்கிய இராச்சியம்.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி, 5வது பதிப்பு, ஏப்ரல் 1989, 1வது பதிப்பு 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாயி அச்சகம், வண்ணார் பண்ணை).*
*56 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 15.00, அளவு: 21x14 சமீ.*

**அபிவிருத்திப் புவியியல்: ஐக்கிய இராச்சியம்.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 6வது பதிப்பு, ஜனவரி 1994, 1வது பதிப்பு 1986. (யாழ்ப்பாணம்: சுவர்ணா பிரிண்டிங் வேர்க்ஸ், 295/7, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்).*

*58 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 35.00, அளவு: 20x13.5 சமீ.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த.பத்திர உயர்தரவகுப்பு மாணவர்களின் அபிவிருத்திப் புவி யியல் பாடநெறியின் ஒரு பகுதி தனி ஆய்வாகும். அதில் ஆராயப்படவேண்டிய நாடுகளில் ஐக்கிய இராச்சியமும் ஒன்று. ஐக்கிய இராச்சியத்தின் அபிவிருத்திப்புவியியலை அமைப்பும் தரைத் தோற்றமும், காலநிலை, நிலப்பயன்பாடு, கனிப்பொருட்களும் கைத்தொழில்களும், குடித்தொகை, துறைமுகங்கள் நகரங்கள், வர்த்தகம் ஆகிய ஏழு அத்தியாயங்களில் இந் நூல் விளக்குகின்றது.

## 1987

**நல்லை நகர் நூல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், 1வது பதிப்பு, ஒகஸ்ட் 1987. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

xii, 57 பக்கம், புகைப்படங்கள், 4 தகடுகள், விலை: (சாதாரண பதிப்பு) ரூபா 15.00, (விஷேட பதிப்பு) ரூபா 20.00, அளவு: 18.5x14 சமீ.

யாழ்ப்பாண இராச்சியத்தினதும் நல்லூர் கந்தசுவாமி கோவிலினதும் வரலாற்றைக் கூறும் நூல். புராதன ஈழமண்டலம் (நாகர் குடியேற்றம், ஆரியர் குடியேற்றம், தமிழர் குடியேற்றம், முதலாவது சிங்களப் படையெடுப்பு, கதிரமலையிலிருந்து மணற்றி, இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன், உக்கிரசிங்கன், தென்னிந்தியப் படையெடுப்புகள், சோழராட்சி, புவனேகவாகு), முதலாவது ஆலயம் (கைலாசமாலைப் பாடல், கோயிலைக் கட்டியவர் யார்?), தமிழரசர்கள் (ஆரியச் சக்கரவர்த்திகள், கலிங்கமாகன், சாவகமன்னன், குலசேகரசிங்கை ஆரியன், தென்னிலங்கைமீது படை), சிறீசங்கபோதி புவனேகவாகு (சப்புமல்குமரயா, கந்தசுவாமி கோவிலின் அழிவு, இரண்டாவது கந்தசுவாமி கோயில், சிங்கைப் பரராசசேகரன், மன்னார்ப் படுகொலைகள்), போர்த்துக்கேயப் படையெடுப்புகள் (முதற் படையெடுப்பு, தொடர்ந்த படையெடுப்புகள், யார் இந்த யோகியார்?, முஸ்லீம் குடியேற்றம், கோயில் அழிவு), கந்த மடாலயம் (சைவமத வழிபாடு, கிருஷ்ணையர் சுப்பையர், மடாலயம் அமைந்த இடம்), நான்காவது ஆலயம் (நான்காவது ஆலயம், மாப்பாண முதலியார், இரகுநாத மாப்பாண முதலியார் சமூகா!), ஆங்கிலேயர் காலம் (ஆலய நிர்வாகப் பிரச்சினை), தொடரும் திருப்பணி (ஆரம்பக் கட்டமைப்பு, ஆதியில் வழங்கிய வழக்கம்), நல்லூரும் நாவலரும் (நல்லூரும் நாவலரும், முடிவுரை) ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 1988

**மழைக்காலம்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, வேம்படி வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1988. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம்).

(10), 90 பக்கம், விலை: ரூபா 20.00, அளவு: 18.5x12.5 சமீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மழைக்காலம்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 2வது பதிப்பு, ஜனவரி 2005, 1வது பதிப்பு, ஏப்ரல் 1988. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

vi, 82 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x15 சமீ.

1984இல் ஈழமுரசு வாரமலரில் தொடராக வெளிவந்த கதை. யாழ்ப்பாணத்து இளைஞர்களின் மனப்பாங்கினையும் மேலைத்தேயக் கலாச்சாரத்தில் ஊறிவிட்ட தமிழ் இளைஞர்களின் மனப்பாங்கினையும் ஒப்பிட்டு நோக்கும் கதையம்சம். யாழ்ப்பாணத்துச் சீதனக் கொடுமையால் வாழ்வின் ஆரம்பத்திலேயே பாதிக்கப்பட்ட ஒருத்தியின் கதை இது. நிறைவேறாத காதலால் தன் பாதையை மாற்றிக்கொண்ட ஒரு பக்குவப்பட்ட பெண்மையின் இக்கதையில் காதலுக்குத் தடையாவது சீதனம். காதலிக்க முன்வரும் இளைஞர்களில் எத்தனை பேர் சீதனக் கொடுமையை மீறத் தயாராக உள்ளனர்? அதனை மீற முடியாத ஒரு கோழைக் காதலனின் அவலக் கதையாகவும் இது அமைகின்றது. சீதனம் கொடுக்க முடியாத நிலையில் தன்னையும் தன் குடும்பத்தவரையும் வாழவைப்பதற்கு மேற்கு ஜேர்மனியில் வாழும் முகமறியாத ஒருவனுக்கு கடல் கடந்து சென்று ஒப்பந்த மனைவியாக வாழ்வதற்குத் தயாராகி ஜேர்மன் செல்கின்றாள் கதாநாயகி தேவி. ஒப்பந்த மனைவியாகி ஐந்தாண்டுகள் வாழ்ந்து பின்னர் ஊர் திரும்பிய தேவியின் நினைவிலும் அனுபவத்திலும் இக்கதை வளர்க்கப்படுகின்றது. பெருந்தொகைப் பணத்தைச் சீதனமாகப்பெற்று வேறொரு பெண்ணுக்கு கணவனாகியிருந்த தனது முன்னாள் காதலன் தியாகுவின் மன அவசங்களையும் அவலங்களையும் அவளால் காணவும் முடிகின்றது. வெளிநாட்டுப் பயணத்தின் நோக்கத்துக்கு புதிய விளக்கம் தருவதாக அமையும் கதையம்சம் கொண்டது இந்நாவல்.

**தீம்தரிகிட தித்தோம்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஜூன் 1988. (யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம்).
xii, 80 பக்கம், விலை: ரூபா 15.00, அளவு: 17x12.5 சமீ.

செம்பியன்செல்வனை ஆசிரியராகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் வெளிவந்த 'அமிர்தகங்கை" என்ற சஞ்சிகையில் தொடராக வெளிவந்த நாவல் இது. யாழ். இலக்கிய வட்டத்தின் 40வது வெளியீடாக நூலுருவானது. சுரேந்திரன் தன் அலுவலகத்தில் பணியாற்றும் சிங்களப்பெண் சோமாவைக் காதலிக்கிறான். ஜீன் மாதம் நடைபெற்ற காலிமுகத்திடல் சத்தியாக்கிரகத்தினால் கொழும்பில் இனக்கலவரம் வெடிக்கின்றது. அதன் விளைவாக அவர்களது காதலும் வெடித்துச் சிதறுகிறது. 1956ம் ஆண்டு தமிழ் மக்களின் அரசியல் நிலைமைகள் இன்றைய இனப்பிரச்சினைகளை எவ்வாறு உருவாக்கின என்பதே இந்த நாவல் தரும் சமூகச் செய்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1989

**இந்த நாடு உருப்படாது.** செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி).

vi, 103 பக்கம், தகடு, விலை: ரூபா 25.00, அளவு: 19.5x13.5 சமீ.

தம் வயல்களில் உழைக்கவும் வருவாய் பெறவும் மனித உரிமைகளுடன் வாழவும் முடியாது, அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு கிராம மக்களில் சிலர் தமது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இடையறாது முயற்சிப்பதும் அந்த முயற்சியில் வெற்றியடையாவிடினும் மாற்றுத் திட்டமொன்றின் மூலம் தம் வாழ்வைச் சீர்செய்வதும் இந்த நாவலின் பிரதான பொருளாகவுள்ளது. 1977ம் ஆண்டுப் பகைப்புலத்தைக்கொண்ட இது 1983இல் எழுதப்பட்டது. இந்நாவல் 'தீராச்சுமைகள்" என்ற பெயரில் வீரகேசரி வாரமலரில் வெளிவந்தது. 'மண்ணின் தாகம்" என்ற பெயரில் மீரா பதிப்பக வெளியீடாகவும் 1989இல் வெளியிடப்பட்டது. இப்பதிப்பிற்கான நீண்ட முன்னுரையை பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் 21.1.1983இல் எழுதியுள்ளார்.

**பொது உளச்சார்பு.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம்பதிப்பகம், 2வது பதிப்பு, ஜூன் 1990. 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: சுவர்ணா அச்சகம்)

(8), 120 பக்கம், விளக்கப்படம், விலை: ரூபா 50.00, அளவு: 18x13.5 சமீ.

Intelligence Quotients (IQ) என வழங்கப்படும் பொது உளச்சார்பு வினாக்களும் விடைகளும். வாசகர் தமக்குரிய பொது உளச்சார்பு நிலையை மதிப்பிடும் அளவுகோலாகவும் இந்நூல் அமைகின்றது.

**பொது உளச்சார்பு.** க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, திருத்திய பதிப்பு, 1998. 1வது பதிப்பு. 1989,(Colombo 14: Kall Kwick Printers, 169, Grandpass Road).

332 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ.

பொது உளச்சார்பு என்ற பரந்த நுண்ணறிவைப் பூரணமாகப் பயிலத் தயாராகிவிட்ட மாணவர் உலகிற்கும் பயிற்றுவிக்கத் தயாராகிவிட்ட ஆசிரிய உலகிற்கும் அறிமுகப்படுத்திச் சரியான இடத்தை அமைத்துக் கொடுப்பதற்கு இவ்விரிவான நூல் உதவுகின்றது. சகலவிதமான பொதுப்பரீட்சைகளுக்கும் பொது உளச்சார்பு இன்று தேர்வு வாயிலாகிவிட்ட நிலையில் இந்நூல் மிகுந்த பயன்பாட்டைப்பெறும்.

**மண்ணின் தாகம்.** செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

x, *103 பக்கம், விலை: ரூபா 25.00, அளவு: 18x12.5 சமீ.*

*தம் வயல்களில் உழைக்கவும் வருவாய் பெறவும் மனித உரிமைகளுடன் வாழவும் முடியாது, அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு கிராம மக்களில் சிலர் தமது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இடையறாது முயற்சிப்பதும் அந்த முயற்சியில் வெற்றியடையாவிடினும் மாற்றுத் திட்டமொன்றின் மூலம் தம் வாழ்வைச் சீர்செய்வதும் இந்த நாவலின் பிரதான பொருளாகவுள்ளது. 1977ம் ஆண்டுப் பகைப்புலத்தைக்கொண்ட இது 1983இல் எழுதப்பட்டது. இந்நாவல் தீராச்சுமைகள் என்ற பெயரில் வீரகேசரி வாரமலரில் வெளிவந்தது. நாவலின் மூலப்பெயர் இந்த நாடு உருப்படாது என்பதாகும்.*

**மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226 காங்கேசன்துறை வீதி)*

*104 பக்கம், விலை: ரூபா 35.00, அளவு: 17.5x13 சமீ.*

*ஒரு குடியேற்றத்திட்டத்தின் கதை. மனித முயற்சிகள் இயற்கையின் கர்ப்பத்தில் ஏற்படுத்தும் தாக்க விளைவுகளின் பெறுபேறாக சமூக நிலையில் நிகழும் நார்ப்பரியத்தை நாவல் விபரிக்கின்றது. காடு மூடி, காட்டு விலங்குகள் நிறைந்து, பருவத்துக்குப் பருவம் வெள்ளப்பெருக்குக்குட்பட்டு மக்கள் வாழாப் பிரதேசமாக விளங்கிய கிளிநொச்சிப் பிரதேசம் இரணைமடுக் குளத்தின் நிர்மாணத்துடன் எவ்வாறு புத்துயிர் பெற்றது என்பதை இந்நாவல் சித்திரிக்கின்றது.*

## 1991

**ஆறுகால்மடம்: சிறுவர் நாவல்.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: ஹம்சா வெளியீடு, 1வது பதிப்பு, ஜனவரி 1991. (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம், செம்பியன் ஒழுங்கை)*
*(4), 56 பக்கம், விலை: ரூபா 16.00 அளவு: 16x10 சமீ.*

*ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்ததாகப் புனையப்பட்ட விறுவிறுப்பான சிறுவர் நவீனம். இது 10 முதல் 15 வயது வரையான தமிழ்ச் சிறார்களுக்காக எழுதப்பட்டது. தில்லை என்ற சிறுவன் எதிர்பாராத வகையில் தான் சந்தித்த கள்வர்களை சட்டத்தின் கையில் பிடித்துக் கொடுக்க முயல்வதே கதையாகும். தில்லை, திருடர்களே தான், மாணிக்கச் சித்தப்பா, எங்கே அவன், கேள்விக்குறி, குடிகாரத் தந்தை, தந்தத்திற் செய்த யானை, உடையார் வீட்டில் களவு, மாமா வீட்டில்?, நாளைக்கு வருவாய், தில்லை அழுதான், முறிந்த தந்தம் ஆகிய 12 அத்தியாயங்களில் இந்நாவல் விறுவிறுப்பாக எழுதப்பட்டுள்ளது. யாழ் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில், 1957ஆம் ஆண்டு வாக்கில், அக்கல்லூரியில் க.பொ.த. சாதாரண தர வகுப்பில் பயின்றுகொண்டிருந்த ஆசிரியர், எழுதியிருந்த நாவல் இது. தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்த 'கண்ணன்" சிறுவர் சஞ்சிகையின் தொடர்கதைப் போட்டிக்காக எழுதி அனுப்பப்பெற்று பாராட்டினைப் பெற்ற கதை. 1965ஆம் ஆண்டில் சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியர் சங்கரால் 'வளர்மதி" சிறுவர் பகுதியில் தொடராக வெளிவந்தது. அதன்போது எழுதப்பட்ட வாசகர் கடிதங்கள் சிலவற்றையும் இந்நூலில் காணமுடிகின்றது.

**ஒரு மைய வட்டங்கள்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம் கமலம் பதிப்பகம், 1வது பதிப்பு, ஜனவரி 1991. (ஏ.எஸ்.ஜே பிரிண்டிங் வேர்க்ஸ்).
94 பக்கம், விலை: ரூபா 30.00, அளவு: 19x14 சமீ.

மருதங்கேணி என்னும் காட்டு விவசாயக்கிராமத்தில் தமிழ் சிங்கள மக்கள் குடியேறி ஒன்றாக வாழும் வகையினையும், அவ்வப்போது நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் இக்கிராமிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்க முயன்றதையும் அம்மக்களின் மனவிரிசல்களையும் உணர்வுகளையும் வாழ்க்கைப்பிரச்சினைகளையும் பகைப்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல். சிங்களமக்களும் தமிழ்மக்களும் இலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு மைய வட்டங்களே. பெரிய வட்டம் சிறிய வட்டத்தை அமுக்கிவிட முயல, சிறிய வட்டம் தனித்துவமாக விளங்க முயல்கின்ற அன்றைய அரசியல் சூழ்நிலையின் காட்சிப்படுத்தல் கதையின் களமாகின்றது.

**கந்தவேள் கோட்டம்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82 பிரவுண் வீதி, நீராவியடி. 1வது பதிப்பு, ஜனவரி 1991. (யாழ்ப்பாணம்: சுவர்ணா அச்சகம்).

(4), 141 பக்கம், விலை: ரூபா 35.00, அளவு: 16x10 சமீ.

யாழ்ப்பாண இராச்சியத்தை அந்நியப்படைகள் ஆக்கிரமித்த போது நாடும், மண்ணும், மக்களும் தமிழ் மக்களது விழுமியங்களும் எவ்வாறு பாதிப்புற்றன என்பதனைச் சித்திரிக்கும் வரலாற்று நாவல். ஐந்து நூற்றாண்டுக்கால யாழ்ப்பாண வரலாற்றை நல்லூர்க் கந்த சுவாமி கோவிலின் வரலாற்றினூடாக செங்கைஆழியான் இழையோடியுள்ளார். ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல் என்ற நான்கு அங்கங்களில் இதை நாவலாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஈழநாடு வாரமலரில் 8.9.1985 முதல் 19.1.1986 வரை தொடராக வெளியானது.

**குவேனி.** செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: தமிழ்த்தாய் பதிப்பகம், 1வது பதிப்பு, ஜனவரி 1991. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை).
(8), 136 பக்கம், வரைபடம், விலை: ரூபா 40.00, அளவு: 21x14 சமீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குவேனி.** *செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82 பிரவுண் வீதி, நீராவியடி, 2வது பதிப்பு, செப்டெம்பர் 2001, 1வது பதிப்பு, தை 1991. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 56, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).*

*(8), 136 பக்கம், வரைபடம், விலை: ரூபா 150., அளவு: 21x14 சமீ.*

'இந்நாவல் நான் எழுதும் **நறுமறாசா வீடு** என்ற நாவலின் முன்னீடு ஆகும். வெறும் சரித்திர நாவலென்ற கருத்தில் இதனைப் படிக்கில் இந்த நாவலின் பண்பாட்டியல்புகளின் பாரம்பரியத்தையும் மனித குல வரலாற்றின் நெறிகளையும் புரிந்துகொள்ளத் தவறி விடுவோம்". -செங்கை ஆழியான் (முன்னுரையில்). மஹாவம்சத்தின் கதாபாத்திரங்களினூடாக இலங்கைக்குச் சிங்களவர் வந்து குடியேறுவதற்கு முன்னர் திராவிடர் இந்நிலத்தின் ஆதிமக்களாக இருந்துள்ளனர் என்பதையும், எமது மூதாதையர் விட்ட தவறுகள் எவ்வாறு இன்று எமது தலைகளில் விடிந்திருக்கின்றன என்பதையும் 26 அத்தியாயங்களில் சுட்டிக்காட்டும் வரலாற்று நாவல்.

**யாக குண்டம்.** *செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82 பிரவுண் வீதி, 1வது பதிப்பு, தை 1991. (யாழ்ப்பாணம்: தயா அச்சகம், நாவலர் வீதி).*

x, *128 பக்கம், விலை: ரூபா 35.00, அளவு: 16x10 சமீ.*

வெளிநாடுகளுக்குத் தொழில் நிமித்தம் கடல் தாண்டிச்சென்று விட்ட இளைஞர்கள், அவர்களைப் பின்தொடர்ந்து வாழ்க்கைத் துணை தேடி வெளியேறும் இளம்பெண்கள், புதிய சூழலில் வம்ச விருட்சத்தை வளர்க்கும் இவர்களின் பிரிவுத்துயரால் இந்த மண்ணில் ஏங்கும் முதிய உறவுகள், இந்த மண்ணின் உறவுத்துயர்களை நாவல் பேசுகிறது. யாழ்ப்பாணத்து மண்ணோடியைந்த வாழ்க்கைமுறை பற்றி நிறைய விபரிக்கப்பட்டுள்ளது.

**ஜன்மபூமி.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A, பிரவுண் வீதி, நீராவியடி, 2வது பதிப்பு, மார்ச் 2005, 1வது பதிப்பு, ஏப்ரல் 1991.* (Colombo 12: Kribs, 162, Dam Street).
*131 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *955-1200-05-5.*

தென்னிலங்கையில் புகழ்பெற்ற கதிர்காமத் திருத்தலச் சூழலில் மாணிக்க கங்கை நதிக்கரையில் வேட்டையாடுதலைத் தம் பிரதான தொழிலாகக் கொண்டுவாழ்ந்த வேடுவ மக்களின் மண்சார்ந்த பிரச்சினைகளையும் மண்பற்றையும் கதைக் கருவாகக் கொண்டு உருவான நாவல். தினகரன் பத்திரிகையில் 1982இல் தொடராக வெளிவந்தது.

**அக்கினி.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, 1991. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லட்சுமி அச்சகம், 37, கண்டி வீதி).*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

xiv, *134* பக்கம், விலை: ரூபா *50.00*, அளவு: *17.5x12.5* சமீ.

*1987*இல் ஈழநாடு வாரமஞ்சரியில் தொடராக வெளிவந்தது. யாழ்ப்பாணத்தின் சாதியக்கொடுமையின் பல்வேறு வடிவங்களைச் சித்திரிக்கின்ற அதே வேளையில் சமூக மாற்றமானது கல்வி, தொழில்மாற்றம், செல்வத்தேடல் என்பவற்றின் மூலம் ஏற்படுமெனச் சொல்லும் கதை. மண்மீட்பு, சமூக மீட்புக்குரல்கள் ஓங்கி ஒலிக்கும் ஒரு காலகட்டத்தில், மக்களது வாழ்க்கை நடத்தைகளையும், சமகால அரசியலையும் சமூக ஒழுங்கும் அகத்திலும் புறத்திலும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விமர்சிக்கும் நாவலாகவும் இது அமைகின்றது. இது 15வது மீரா பிரசுரமாக வெளிவந்துள்ளது.

## 1992

**ஆய்ந்தறிதல் திறன்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், *82*, பிரவுண் வீதி, *1*வது பதிப்பு, ஜனவரி *1992*. (யாழ்ப்பாணம்: டினேஷ் பதிப்பகம், *64*, புதுச் செம்மணி வீதி, கல்வியங்காடு).

*34* பக்கம், விலை: ரூபா *20.00*, அளவு: *20x14.5* சமீ.

நுண்மதி என்பது ஒருவரது இயல்பான ஆற்றலாகும். தன்னையும் தான் வாழ்கின்ற சூழலையும்பற்றிய பூரணமான விழிப்புணர்ச்சியே அதுவாகும். ஒருவரின் நுண்மதியைக் கணக்கிட நுண்மதி ஈவுப் பரீட்சைகளில் பல்வேறு அறிவுத்திறன்கள் பரீட்சிக்கப்படும். எண் அறிவு, மொழி அறிவு, சொல்லறிவு, தர்க்க அறிவு, கணித அறிவு, கட்புலனறிவு, எனப் பலவாறான புலமைகள் பரீட்சிக்கப்படும். அவ்வகையில் ஆய்ந்தறிதல் திறனும் (Reasoning Ability) ஒன்றாகும். இவை ஒருவனின் அறிவு, விவேகம், ஆளுமை, பொறுப்பேற்கும் திறன் என்பனவற்றை இனம்காட்டுகின்றன. இந்நூல் ஆய்ந்தறிதல் திறன் பற்றிய விரிவான தகவல்களைத் தருகின்றது. இதன்மூலம் ஒருவர் தனக்குள் குறிப்பிட்ட திறனை வளர்த்துக்கொள்ளும் வழிமுறைகளை இனம்காணமுடிகின்றது.

**செங்கை ஆழியான் நாவல்கள்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், *82*, பிரவுண் வீதி, நீராவியடி, *1*வது பதிப்பு, ஜனவரி *1992*. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*562* பக்கம், விலை: ரூபா *210.*, அளவு: *21x14* சமீ.

இந்த நாடு உருப்படாது, பிரளயம், முற்றத்து ஒற்றைப்பனை, கிடுகுவேலி, மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து, ஒரு மைய வட்டங்கள் ஆகிய ஆறு நாவல்கள் இத்தொகுதியில் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த நாடு உருப்படாது என்ற நாவல் *1981*இல் எழுதப்பட்டு, *1986*இல் வீரகேசரி வார இதழில் தீராத சுமைகள் என்ற தலைப்பில் தொடராகப் பிரசுரிக்கப்பட்டது. பின்னர் *1989*இல் மண்ணின் தாகம் என்ற தலைப்பில் மீரா வெளியீடாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்பட்டது. செங்கை ஆழியான் நாவல்கள் என்ற தலைப்பில் கந்தையா முருகதாசன் அவர்கள் செங்கை ஆழியானின் நாவல்களை ஆய்வுசெய்து நூலொன்றை இலங்கை இலக்கியப்பேரவை வெளியீடாக வெளியிட்டுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**படவேலை: இட விளக்கவியற் பயிற்சிகள்(1:50,000).** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 2வது பதிப்பு, ஜனவரி 1994, 1வது பதிப்பு ஜூன் 1992. (யாழ்ப்பாணம்: மகாலக்ஷ்மி அச்சகம், 37, கண்டி வீதி).

48 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 60.00, அளவு: 28x22 சமீ.

படவேலை என்ற இந்நூல் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக ஆக்கப்பட்டுள்ளது. 1: 50,000 என்ற அளவுத்திட்ட மெட்றிக் இட விளக்கவியல் பற்றிய விளக்கங்கள் இந் நூலில் இடம்பெற்றுள்ளன. புதிய பாடத்திட்டத்திற்கு இணங்க இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. புவியியில் விளக்கத்திலிருந்து புவியியல் நிலத்தோற்றத்தை எவ்வாறு வரையலாம் என்பதனை படிப்படியாக இந்நூல் விளக்குகின்றது. இலங்கை நில அளவைத் திணைக்களம் வெளியிட்ட 1:50,000 மெட்ரிக் இடவிளக்கவியற் படங்களில் சமவுயரக் கோடுகள் அக்காலகட்டத்தில் 'அடி"யிலேயே காட்டப்பட்டிருந்த சூழ்நிலையில், பரீட்சைக்குக் கேட்கப்படும் கேள்விகளில் சமவுயரிகள் 'மீற்றர்" அளவுத்திட்டத்திலேயே கேட்கப்பட்டு வந்தன. இந்நிலையில் பரீட்சை நோக்கில் இந்நூல் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது.

**ஈழத்தவர் வரலாறு: கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ம் ஆண்டு வரை.** க.குணராசா. கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 2வது பதிப்பு, நவம்பர் 2000, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1992. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ்).

xii, 172 பக்கம், வரைபடம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14 சமீ.

கி.மு. 5ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஈழத்தமிழரின் அரசியல், நிர்வாக, சமூகக் கட்டமைப்பு வரலாறு. ஈழநாடும் ஈழத்தவர்களும், வரலாற்றுதய காலத்தமிழ் மன்னர்கள், ஈழராஜா எல்லாளன், சிங்கை நகர் அரசு, யாழ்ப்பாண இராச்சியம்: ஆரியச் சக்ரவர்த்திகள், சிங்கை பரராசசேகரன் தொட்டு, சங்கிலி செகராசசேகரன் வரை, வன்னின் சிற்றரசுகள், நல்லூர் கந்தசுவாமிக் கோயில் ஆகிய அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றில் தமிழ் மன்னர்களதும் அவர்கள் சார்ந்த மக்களதும் முதன்மை சரிவரக் கணிப்பீடு செய்யப்படவில்லை. இனச்சார்பான சிந்தனைகள் உண்மையான வரலாற்றைத் திரிவுபடுத்தியுள்ளன. நடுநிலை நின்று நமது வரலாற்றைக் கூறவேண்டுமென்ற அவாவின் ஆய்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஈழத்தவர் வரலாறு' என்ற இந்நூலாகும். இலங்கையின் ஆட்சியதிகாரம் பதின் மூன்றாம் நூற்றாண்டு வரை சிங்கள மன்னர்களிடமும் தமிழ் மன்னர்களிடமும் மாறி மாறி இருந்து வந்துள்ளது என்பதனை கி.மு.3 ஆம் நூற்றாண்டிற்கும் கி.மு.1ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட 230 ஆண்டு கால அனுராதபுர அரசியல் வரலாற்றில், இக்கால எல்லைக்குள் ஆட்சிபுரிந்த 19 மன்னர்களுள் 8 தமிழ்மன்னர்கள் 81 வருடங்களுக்கு மேல் ஆட்சிபுரிந்துள்ளனர் என்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**பொது விவேகப் பயிற்சிகள்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 2வது பதிப்பு, மே 1993, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1992. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், கல்வியங்காடு).

83 பக்கம், விலை: ரூபா 70.00, அளவு: 20x14.5 சமீ.

அரச சேவைகளில் ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைகளில் மொழி அறிவு, பொது அறிவு, பொது உளச்சார்பு, விவசாயம், கிரகித்தல் முதலான துறைகளில் பரீட்சைகள் நடத்தப்பெறுவதுண்டு. இத்தகைய பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்ட நூல் இதுவாகும். இது பொது அறிவு சம்பந்தமானதொரு மாதிரி வினா-விடை நூலாக அமைகின்றது.

## 1993

**ஆய்ந்தறிதல் திறன்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1993. (யாழ்ப்பாணம்: டினேஷ் பதிப்பகம், 64, புதுச் செம்மணி வீதி, கல்வியங்காடு).

34 பக்கம், விலை: ரூபா 20.00, அளவு: 20x14.5 சமீ.

நுண்மதி என்பது ஒருவரது இயல்பான ஆற்றலாகும். தன்னையும் தான் வாழ்கின்ற சூழலையும்பற்றிய பூரணமான விழிப்புணர்ச்சியே அதுவாகும். ஒருவரின் நுண்மதியைக் கணக்கிட நுண்மதி ஈவுப் பரீட்சைகளில் பல்வேறு அறிவுத்திறன்கள் பரீட்சிக்கப்படும். எண் அறிவு, மொழி அறிவு, சொல்லறிவு, தர்க்க அறிவு, கணித அறிவு, கட்புலனறிவு, எனப் பலவாறான புலமைகள் பரீட்சிக்கப்படும். அவ்வகையில் ஆய்ந்தறிதல் திறனும் (Reasoning Ability) ஒன்றாகும். இவை ஒருவனின் அறிவு, விவேகம், ஆளுமை, பொறுப்பேற்கும் திறன் என்பனவற்றை இனம்காட்டுகின்றன. இந்நூல் ஆய்ந்தறிதல் திறன் பற்றிய விரிவான தகவல்களைத் தருகின்றது. இதன்மூலம் ஒருவர் தனக்குள் குறிப்பிட்ட திறனை வளர்த்துக்கொள்ளும் வழிமுறைகளை இனம் காணமுடிகின்றது.

**ஆய்ந்தறிதல் திறன்: புதிர்கள் (Puzzles).** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 3வது பதிப்பு, மே 2003,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1வது பதிப்பு ஜனவரி 1993. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).*

*48 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 75.00, அளவு: 20x14.5 சமீ.*

ஆய்ந்தறிதல் திறனை வளர்க்கக்கூடிய நூறு புதிர்களும் அவற்றுக்கான விடைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. பொது அறிவு சார்ந்த ஆய்ந்தறிதல் திறனைப் பரீட்சிக்கும் 3 புதிர்களும், அறிவியல் சார்ந்த ஆய்ந்தறிதல் திறனைப் பரீட்சிக்கும் 4 புதிர்களும், தர்க்கம் சார்ந்த ஆய்ந்தறிதல் திறனைப் பரீட்சிக்கும் 3 புதிர்களும், எண்சார்ந்த ஆய்ந்தறிதல் திறனைப் பரீட்சிக்கும் 90 புதிர்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

**யாழ்ப்பாணத்து இராத்திரிகள்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபம், பருத்தித்துறை வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1993. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், கல்வியங்காடு).

xviii, *182 பக்கம், விலை: ரூபா 80.00, அளவு: 20.5x14.5 சமீ.*

இருபத்திமூன்று சிறுகதைகள் கொண்ட தொகுப்பு. உப்பங்கழி, அறுகுவெளி, திசநாயக்காவும் கந்தசாமியும், வல்லூறுகள், முதலிப்பழம், ஒரு கிராமத்தின் பன்னீராயிரம் நிர்வாண வயிறுகள், அறுவடை, ஒன்றும் இரண்டும், அப்படி இருக்குமோ, ஷெல்லும் ஏழு இஞ்சிச் சன்னங்களும், காட்டுத்தேன், மண்ணில் சரியும் விழுமியங்கள், பாலைப்பழம், விடியவில்லை, விளாமரம், கங்குமட்டை, பிச்சைக்காரர் ஆக்கவேண்டாம், செருப்பு, யானைக்காடு, நிம்மதியாகச் சாகவாவது விடுங்கள், விரால் மீன், விடியாத இரவும் ஒரு மனிதனும், யாழ்ப்பாணத்து இராத்திரிகள் ஆகிய 23 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஆசிரியர் தான் வாழும் யாழ்ப்பாணத்துச் சூழலை, மக்களின் மன ஓட்டங்களை, அவர்களது ஆசாபாசங்களைத் துல்லியமாகத் தனது கதைகளுள் கொண்டுவந்துள்ளார். பத்திரிகைத்தாள் தட்டுப்பாடான காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் பயிற்சிக்கொப்பிகளுக்கான கோட்டுத்தாளில் இந்நூல் அச்சிடப்பட்டது.

**வரலாறும் சமூகக் கல்வியும்-படவேலைப் பயிற்சிகள் செயல்நூல்-ஆண்டு 11.** கமலா குணராசா (மூலம்), க.குணராசா (மீள்பார்வை). யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1993. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

*60 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x20 சமீ.*

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) வகுப்பு மாணவர்களின் வரலாறும் சமூகக் கல்வியும், பரந்ததொரு பாடத்திட்டத்தைக் கொண்டதாகும். இப்பாட அலகிலுள்ள பட வேலைப் பயிற்சிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாக்களின் பல்வேறு கட்டங்களிலும் இடம்பெறுகின்றன. எனவே, படவேலைப் பயிற்சிக்கான செயல்முறைப் பயிற்சிகள் அவசியமாகின்றன. அத்தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்நூலில் சமவுயரக் கோட்டுப் பயிற்சிகள், உலகப் படப் பயிற்சிகள், இலங்கைப் படப் பயிற்சிகள் பல தரப்பட்டுள்ளன. அவற்றில் வரலாறு, சமூகக் கல்வி சார்ந்த வினாக்கள் வினாவப் பட்டுள்ளன. இப்பயிற்சிகளை மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம் நமது செயலறிவைத் திறம்பட அபிவிருத்தி செய்ய முடியும். பரீட்சை நோக்கிற்கு மட்டுமன்றி, நமது பரந்த அறிவு விருத்திக்கும் இச்செயல்நூல் உதவுகின்றது.

## 1994

**காவோலை.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1994. (யாழ்ப்பாணம்: யாழ். ப.நோ.கூ.ச. பதிப்பகம், 261, மின்சாரநிலைய வீதி).

96 பக்கம், விலை: ரூபா 35.00, அளவு: 18.5x13.5 சமீ.

1980இல்எழுதப்பட்டு1982இல்தினகரனில்தொடராகவெளியிடப்பட்டது. தனித்துவமான பண்பாட்டுச் சூழல் கொண்ட அனலைதீவை இந்த நாவல் பகைப்புலமாகக் கொண்டது. 'தீயினில் தூசு படிவதில்லை" என்ற பெயரில் செட்டிகுளத்தில் நாடகமாகவும் இது மேடையேற்றப்பட்டது. இந்நாவலில் இராசையா என்ற பாத்திரம் 'எங்கட தீவில சைவக்காரரைத் தவிர பிற மதத்தவர் ஒருவர்கூட இல்லை. சைவக் கோயிலைத் தவிர வேறு ஒரு கோயிலும் இல்லை. எங்கட ஊரில் சமயத் தூய்மை இருக்கிறது. எங்கட ஊருக்கு பொலிசார் வந்ததில்லை" என்று கூறுவதாக எழுதப்பட்டுள்ளது. முதலில் நாடக வடிவில் எழுதப்பட்டு பின்னர் நாவலாக்கப்பட்டதால் அவ்விரு வடிவங்களுக்கும் இடையிலான பின்னணியில் இயல்பாகவே மிக்கு நிற்கும் நாடகத்தன்மையை இந்நாவலில் அவதானிக்கலாம் என ஆசிரியர் 'நானும் எனது நாவல்களும்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**நுண்ணறிவு.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜூன் 1994. (யாழ்ப்பாணம்: மஹாலட்சுமி அச்சகம், 37, கண்டி வீதி).

(4), 136 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

நவீன உலகில் நம்மை இனம்காட்டுவது நுண்ணறிவாகும். இந்த நுண்ணறிவை (Intelligence Quotients-IQ) மேம்படுத்த உதவும் வகையில் அமைந்த இந்நூலில் 10 பயிற்சிகள் உள்ளன. படிப்படியாக உளவயதினை வளர்த்துச்செல்லும் பாங்கில் உருவாக்கப்பட்டவை. கடந்த கால பொதுப்பரீட்சைகளின் வினாப்போக்குகளை கவனத்திற்கெடுத்து உருவாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புள்ளிவிபரப் படவரைகலையியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 1, முதலாம் ஒழுங்கை, பிரவுண் வீதி, திருத்திய 3வது பதிப்பு, ஏப்ரல் 2004, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1994. (யாழ்ப்பாணம்: ராம் பிறின்ரேர்ஸ் கிராப்பிக்ஸ், பலாலி வீதி).

(6), 7-243 பக்கங்கள், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 250., அளவு: 20x14 சமீ.

இந்நூலில் ஏழு பகுதிகளும் 29 அத்தியாயங்களும் உள்ளன. பார் வரைப்படங்கள் (சாதாரண பார் வரைப்படம், வீத பார் வரைப்படம், கூட்டு பார் வரைப்படம், கூம்பக பார் வரைப்படம், நிரல் வரைப்படம்), சில்லு விளக்கப்படங்கள் (பிரிக்கப்பட்ட வட்டங்கள், விகித சம வட்டங்களும் உள்ளமைந்த வட்டங்களும்), கோட்டு வரைப்படங்கள் (கோட்டு வரைப்படங்கள், சராசரி விலகல் வரைப்படம், நியம விலகல் வரைப்படம், நகரும் சராசரி விலகல் வரைப்படம், லொறன்ஸ் வளையி, ண-வரையம், திரள்கோட்டு வரையம்), மீடிறன் வரைப்படங்கள் (இழை வரையம், மீடிறன் பல்கோணியும் ஒராய வளையிகளும், திரட்டு மீடிறன் வளையி, ஓகைவ் வளையிகள்), காலநில வரைப்படங்கள் (கொட்டு நிரல் வரைப்படம், காலநிலை வளையி, மணிக்கூட்டு வரையம், கிளைமோ வரையம், ஹைதர் வளையி), சிதறல் வரைப்படங்கள் (பிரிக்கை வரைப்படங்கள், இருமாறிகள் வரையம் /சிதறல் வரைப்படம், முக்கூட்டு வரையம்), சமயகணிய/இடக்கணியப் படங்கள் நிழற்றுமுறை வரைப்படங்கள், புள்ளிமுறை வரைப்படங்கள், இடக்கணிய பை வரைப்படம்) ஆகிய ஏழு பகுதிகளாக இவை பிரித்து விளக்கப்பட்டுள்ளன. புள்ளி விபர வரைப்படங்களைத் தெளிவாக விளக்கும் 216 விளக்கப்படங்களும் இந் நூலில் உள்ளன.

**பூமித் தாய்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: புதிய உயர் கல்லூரி வெளியீடு, பட்டப் படிப்புகள் பிரிவு, ஆரியகுளம் சந்தி, 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (யாழ்ப்பாணம்: மணி ஓசை அச்சகம், சென் பற்றிக்ஸ் வீதி).

(8), 92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

சூழலை அழிக்கும் மானிடச் செயற்பாடுகளையும், அதனால் தோன்றியுள்ள அவலங்களையும் இந்நூல் விளக்குகின்றது. மனிதனின் தேவைகளின் அதிகரிப்பும், பேராசையும் ஒன்றுதிரண்டு பூமியின் அளப்பரிய வளங்களைத் திட்டமிடப்படாத முறையில் எதிர்விளைவுகளைக் கருத்தில்கொள்ளாது அழித்து வருகின்ற நிலையில் விரைந்து வரும் உலக அழிவைத் தடுத்து நிறுத்தமுடியாவிட்டாலும்கூட தாமதப்படுத்தலாம் என்ற மன உணர்வினையும் விழிப்புணர்வினையும் ஏற்படுத்தும் வகையில் சுற்றுச்சூழலியல் தொடர்பான இந்நூல் தனது 20 அத்தியாயங்களின் வாயிலாகவும் சில உணர்வலைகளைத் தோற்றுவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1995

**இரவுநேரப் பயணிகள்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82 பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, ஜனவரி 1995. (யாழ்ப்பாணம்: யாழ். ப.நோ.கூ.ச.பதிப்பகம், 261, மின்சார நிலைய வீதி)

viii, 100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13.5 சமீ.

செங்கை ஆழியானின் மூன்றாவது சிறுகதைத்தொகுதி. போராட்டச் சூழலில் தமிழ்மக்கள் படுகின்ற அவலங்களையும் அந்த அவலங்களைச் சந்திப்பதால் வன்மம் பெறுகின்ற உள்ளங்களையும் சித்திரிக்கும் கதைகள். டொமினிக் ஜீவாவின் முன்னுரையுடன் கூடிய இந்நூலில் உள்ள சிறுகதைகள் மல்லிகை, வீரகேசரி, வெளிச்சம், ஈழநாதம், ஈழநாடு(பாரிஸ்) ஆகியவற்றில் பிரசுரமானவை. சமூக அறிவியல் தரவுகளைச் செவ்வனே உணர்ந்து கொண்டு ஆக்க இலக்கியம் படைப்பவன் அவ்விலக்கியத்துக்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்குகிறான். ஒரு சமூக அறிவியலாளனாகிய செங்கை ஆழியானுடைய ஆக்க இலக்கியங்கள் பல இவ்வகையிலே புதிய பரிமாணத்தைப் பெறுகின்றன. இந்த 'இரவுநேரப் பயணிகள்" நூலில் பதினொரு கதைகள் அடங்கி உள்ளன. இந்தப் பதினொன்றில் ஏழு கதைகள் மல்லிகையில் பிரசுரமாகியவை. தெரு விளக்கு (மல்லிகை), ஊரியான் பாதை (மல்லிகை, ஈழநாடு-பாரிஸ்), விறகு (மல்லிகை, ஈழநாடு-பாரிஸ்), தாயும் குஞ்சுகளும் (வீரகேசரி), கஞ்சிப் பொழுது (கணையாழி), எங்கட கிராமம் (மல்லிகை, ஈழநாடு-பாரிஸ்), இரவுப் பூச்சிகள் (மல்லிகை, ஈழநாடு-பாரிஸ்), சிறுபிள்ளை வேளாண்மை (வெளிச்சம், ஈழநாடு), புடையன் குட்டி (மல்லிகை, ஈழநாடு-பாரிஸ்), மோதிர விரல் (ஈழநாதம், ஈழநாடு-பாரிஸ்), மேற்கும் கிழக்கும் (மல்லிகை, ஈழநாடு-பாரிஸ்) ஆகிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**களம்பல கண்ட யாழ். கோட்டை: யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு.** நீலவண்ணன் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், பிரவுண் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1995. (கல்வியங்காடு: டினேஷ் அச்சகம், புதிய செம்மணி வீதி).

xx, 105 பக்கம், 8 படங்கள், விலை: ரூபா 60.00, அளவு: 18x13.5 சமீ.

இவ்வாய்வின் முதற்பகுதி 8.7.1990 முதல் யாழ்ப்பாணத்தில் முரசொலியில் தொடராக வெளிவந்திருந்தது. மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய இத்தொடர் மேலும் விரிவாக்கப்பட்டு முழுநூலாக வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக்கோட்டையின் உருவாக்கம் முதல் தமிழீழ விடுதலைப் புலிகளால் அது விடுவிக்கப்பட்ட செப்டெம்பர் 26, 1990 வரையிலுமான காலவரலாற்றை, பிலிப் தே ஒலிவேறா (போர்த்துக்கேயர் காலம்), றைக்ளோப் வன் ஹூன்ஸ் (ஒல்லாந்தர் காலம்), ஆங்கிலேயர் ஆட்சி (ஆங்கிலேயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம்), ஈழயுத்தம்-1, ஈழயுத்தம்-2 என்ற ஐந்து அத்தியாயங்களில் இந் நூல் பதிவுசெய்கின்றது.

**புவிவெளியுருவவியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1995. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், கல்வியங்காடு).

(4), 194 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 125.00, அளவு: 20.5x13.5 சமீ.

**புவிவெளியுருவவியல் Geomorphology.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 2வது பதிப்பு, ஒக்டோபர் 1999, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1995. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு).

(6), 198 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 160.00, அளவு: 20.5x13.5 சமீ.

புவிவெளியுருவவியல் (Geomorphology) பற்றிப் புவியியல்துறை மாணவர்க்கான விரிவானஅறிவை இந்நூல் வழங்குகின்றது. ஞாயிற்றுத் தொகுதி-பூமி-சந்திரன், பூமியின் உள்ளமைப்பும் கண்டங்கள் சமுத்திரங்கள் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பும், புவியிற் செயற்படும் அகவிசைகள், பாறைகளும் மண்வகைகளும், புறவிசைகள், நீர் ஆகிய ஆறு பகுதிகளில் இந்நூல் விரிவாகவும் எளிமையாகவும் எழுதப்பட்டுள்ளது. இதே தலைப்பில் 1978இல் ஆசிரியரால் தொகுக்கப்பட்ட கட்டுரைத் தொகுப்பும் வெளிவந்திருக்கிறது.

**சுற்றாடற் புவியியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், கல்வியங்காடு).

(5), 268 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

1995ஆம் ஆண்டிலிருந்து கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பு மாணவர்களுக்குப் புதியதொரு பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்வகையில் சுற்றாடல் புவியியல் (Environmental Geography) என்ற பாடநெறிக்கான உபபாடநூலாக இந்நூல் வெளிவந்துள்ளது. சூழல், கண்டங்களும் சமுத்திரங்களும், புவியியற் செயற்படும் அகவிசைகள், பாறைகளும் மண்வகைகளும், புறவிசைகள், நீர், வளி ஆகிய ஏழு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுற்றாடற் புவியியல்.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, திருத்திய இரண்டாம் பதிப்பு, 1999, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு).*

*(5), 266 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21x14 சமீ.*

**சுற்றாடற் புவியியல்.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, திருத்திய நான்காம் பதிப்பு, 2007, 3வது பதிப்பு, 2001, 2வது பதிப்பு, 1999, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*276 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-1013-03-4.*

*அத்தியாயத் தலைப்புகள் மாற்றப்பட்டு திருத்திய பதிப்பாக 22 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த நான்காம் பதிப்பு வெளிவந்துள்ளது. ஞாயிற்றுத் தொகுதி, புவித் தொகுதி, புவியிற் செயற்படும் அகவிசைகள், பாறை வகைகளும் மண்வகைகளும், புறவிசைகள், நீர், வளி ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் புதிய பல தகவல்களுடன் வெளிவந்துள்ளது. நூலியல் தகவல் பகுதியில் முதற்பதிப்பு ஜனவரி 1998 என்று குறிப்பிடப்பட்டுள்ளமை தவறாகும். இந்நூலின் முதற்பதிப்பு ஒக்டோபர் 1995இல் வெளிவந்தது.*

## 1997

**பிரபஞ்சம்: ஆய்வு.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1997. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், கல்வியங்காடு).*

*58 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 40.00, அளவு: 21x14 சமீ.*

*பிரபஞ்சம் (Universe) பற்றிய ஆரம்ப அறிவைத் தரும் விஞ்ஞான அறிவு நூல். பிரபஞ்சவியல் (பிரபஞ்ச ஆய்வு, பிரபஞ்சத்தின் தோற்றம், புலனாகும் பிரபஞ்சம்), அண்டங்கள் பிறந்தன, உடுமண்டலங்களின் தோற்றம் (உடுக்களின் பிறப்பு, உடுக்களின் பிறப்பை விளக்கும் புதிய கருத்து, உடுக்களின் இயல்பு, நமது உடு-சூரியன், சூரியனின் மேற்பரப்பு, உடுத் தொகுதிகள், உடுவுருக் கோலங்கள், மே - ஜீன் மாத வானம், ஓகஸ்ட் - செப்டெம்பர் மாத வானம், பெப்ரவரி - மார்ச் மாத வானம்), பிரபஞ்சக் காட்சிகள் (வால் வெள்ளிகள், உற்கைகள்/ஆகாயக் கற்கள், பிரபஞ்ச வெளியில் கரும்பள்ளங்கள், குவேஸார்கள், பிரபஞ்சத்தின் இறுதிக் காலம்) ஆகிய நான்கு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மானிடப் புவியியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1997. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).

(4), 216 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: ரூபா 250.00, அளவு: 26x19 சமீ.

**மானிடப் புவியியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1997. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).
(6), 237 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: ரூபா 300.00, அளவு: 26x19 சமீ.

மனித வளம் (மானிடப்புவியியல்: வளர்ச்சி, நோக்கம், உள்ளடக்கம், குடிப்பெருக்கம், உலகின் குடிப்பரம்பல், குடிப்பெருக்கவாதம், இலங்கையின் குடித்தொகை, இலங்கையின் குடிப்பரம்பல், இலங்கையின் குடியமைப்பு), குடியிருப்புகள் (குடியிருப்புக்கள், குடியிருப்பு வகைகள், நகராக்கம், நகர உருவியற் கோட்பாடுகள், இலங்கையின் நகரங்கள்), பொருளாதார நடவடிக்கைகள் (விவசாய நடவடிக்கைகளை நிர்ணயிக்கும் ஏதுக்கள், உலகின் விவசாய வகைகள், செறிவான சுயதேவைப் பயிர்ச்செய்கை - நெல், இலங்கையின் நெற்செய்கை, இலங்கையின் நீர்ப்பாசனத் திட்டங்கள், வர்த்தக பெருந்தோட்டப் பயிர்செய்கை, இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்செய்கை, மத்தியதரைப் பயிர்ச்செய்கை, வர்த்தக தானியச் செய்கை, வர்த்தக கலப்பு வேளாண்மையும் சுயதேவைக் கலப்பு வேளாண்மையும், வர்த்தக பாற்பண்ணை வேளாண்மை), மீன்பிடி-காட்டு-சுரங்கத் தொழில்கள் (உலக மீன்பிடித்தொழில், இலங்கையின் மீன்பிடித்தொழில், உலகின் காட்டுத் தொழில்கள், இலங்கையின் காட்டுத் தொழில்கள், காட்டுத் தொழிலின் புதிய போக்குகள், வலுப்பொருட்கள், உலகின் உலோகப் பொருட்களும் உலோகமல்லாத பொருட்களும், இலங்கையின் கனிய வளங்கள்), கைத்தொழில்கள் (உலகின் பிரதான கைத்தொழிற் பிரதேசங்கள், கைத்தொழில்களை ஓரிடப்படுத்தும் ஏதுக்கள், இரும்புருக்கு தொழில்கள், பொறியியற் கைத்தொழில்கள், நெசவுக் கைத்தொழில்களும் இரசாயனக் கைத்தொழில்களும், இலங்கையின் கைத்தொழில்கள்), உலகப் பாங்கு-வியாபாரம்-போக்குவரத்து-தொடர்பாடல் (அபிவிருத்தியடைந்த நாடுகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும், போக்குவரத்தும் தொடர்பாடலும், உலக வர்த்தகம்) ஆகிய ஆறு பிரதான இயல்களின்கீழ் இந்நூல் மானிடப் புவியியல் (Human Geography) என்ற பாடத்தின் 40 உபபிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது.

**இடவிளக்கவியற் படங்கள்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1997.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, ஜீ.எல். 1/2, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

vi, 100 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 175., அளவு: 27.5x20.5 சமீ.

**இடவிளக்கவியற் படங்கள்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 2வது பதிப்பு, ஜூன் 2004, 1வது பதிப்பு, மார்ச் 1997. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, ஜீ.எல். 1/2, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

190 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 27.5x20.5 சமீ.

14 அத்தியாயங்கள் கொண்டதும் ஏராளமான விளக்கப்படங்களைக் கொண்டதுமான நூல். வகைக்கு ஒன்றாக ஓரங்குல இட விளக்கவியல் படங்களும், (Topographical Maps) மெட்ரிக் அளவைப் படங்களும் இடம்பெற்றுள்ளன. வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணப்படும் இடவிளக்கவியல் படங்களுக்கான தட்டுப்பாட்டினை இந்நூல் ஓரளவு தீர்க்கின்றது. முன்னுரை (க.குணராசா), உசாத்துணை நூல்கள் ஆகிய அறிமுகத் தகவல்களைத் தொடர்ந்து, தேசப்படங்கள், இலங்கையின் இடவிளக்கவியற் படங்கள், சமவுயரக்கோட்டு வடிவங்கள், குறுக்குப் பக்கப் பார்வை வரைதல், படங்களை சுருக்குதலும் பெருக்குதலும், சாய்வு விகிதமும் சாய்வுப் பாகுபாடும், திண்ம விளக்கப்படங்கள், உயரம் தரும் நிழற்றுமுறையும் உயர மானியியல் நிகழ்ந்தவரையமும்,

புவியியல் நிலத்தோற்றம் ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் விளக்கப்படங்களுடன் தெளிவுபடுத்துகின்றது. நூலின் இறுதியில் இப்பாடம் தொடர்பான பயிற்சிகளும், புவியியல் நிலத்தோற்றத்தை அமைத்தல் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன.

**சுற்றுச் சூழலியல்: சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும்.** க.குணராசா. கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L. 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 3வது பதிப்பு, ஓகஸ்ட் 2006, 1வது பதிப்பு, ஏப்ரல் 1997, 2வது பதிப்பு, பெப்ரவரி 2002. (கொழும்பு 6: சு.கிருஷ்ணமூர்த்தி, கிரிப்ஸ்).

228 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 20x13.5 சமீ., ISBN: 955-1013-05-0.

உலகச் சூழல் நெருக்கடி, உயிர்ச்சூழல், உயிரியல் பல்வகைமை, புவியில் சுருங்கும் பசுமைப் போர்வை, நிலத்தின் வளத் தேய்வு, நீர் மாசடைதல், மாசடைந்துவரும் வளிமண்டலம், காலநிலை மாற்றம், ஓசோன் படையில் துவாரம், பரவி வரும் பாலை, சூழலை அச்சுறுத்தும் தொழிற்சாலைகள், சூழலிற்கு அச்சுறுத்தலாகும் கிருமிநாசினிகளும் அசேதன வளமாக்கிகளும், அணுக்கதிர் மாசுபாடு, அச்சுறுத்தும் அமில மழை, நகராக்கம் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழற்பிரச்சினைகள், இலங்கையின் உள்நாட்டுச் சூழற்பிரச்சினைகள், இலங்கையின் கரையோரச் சூழற் பிரச்சினைகள், சூழல் தொடர்பான இயக்கங்கள், கிழக்கு - மேற்கு சூழல் சார் ஒழுக்க நெறிகள், சூழல் பாதுகாப்புச் சட்டங்கள், சூழலும் அபிவிருத்தியும் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. உசாத்துணை நூல்களும் கட்டுரைகளும், வினா விடைப் பயிற்சிகள் என்பன இறுதியில் தரப்பட்டுள்ளன.

**சூழலியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு ஏப்ரல் 1997. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு).

(6), 127 பக்கம், விலை: ரூபா 100.00, அளவு: 20x13.5 சமீ.

**சூழலியல்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 2வது பதிப்பு, பெப்ரவரி 2002, 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L. 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(6), 120 பக்கம், விலை: ரூபா 150.00, அளவு: 21x14.5 சமீ.

உலகச் சுழல் நெருக்கடி, மாற்றமடையும் புவிக்கோளச் சூழல், விவசாயம் தொடர்பான சூழற் பிரச்சினைகள், கைத்தொழில் மயமாதல் தொடர்பான சூழற் பிரச்சினைகள், நகராக்கம் தொடர்பான சூழற் பிரச்சினைகள், இலங்கையின் சூழற் பிரச்சினைகள், சூழற் பாதுகாப்பு, இலங்கைச் சுழல் பாதுகாப்புச் சட்டங்கள், சூழல் தொடர்பான இயக்கங்கள், கிழக்கு-மேற்கு சூழல் சார் ஒழுக்கநெறிகள், சூழலும் அபிவிருத்தியும் ஆகிய பதினொரு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**பூதத் தீவுப் புதிர்கள்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82 பிரவுண் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (கொழும்பு: ஸ்ரீ லங்கா புத்தகசாலை)

128 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

பூதங்களிடம் அகப்பட்டுப் பல அபாயங்களைக் கடந்து அவற்றை வெற்றி கொண்டு வந்த வசந்தனதும் அவனது நண்பர்களதும் கதை சிறுவர் அறிவியல் நாவலாக எழுதப்பட்டுள்ளது. வீரகேசரி வாரமலரில் 1994 மே 08 முதல் 26 வாரங்கள் தொடராக வெளிவந்தது. இந்நாவலுக்கான சித்திரங்களை ஓவியர் ரமணி வரைந்துள்ளார். கடற் பயணம், பாதையோரத்து வேடன், பழத் தோட்டத்துக் கமக்காரன், கோபுரந் தாங்கி, கழுகு முட்டை வேட்டை, சத்திரக்காரன் சதி, குளக்கரை மனிதன், இளவரசர்கள் சொன்ன புதிர், புதிர்ப் பூதம், ஆற்றங்கரைச் சிக்கல், வானத்தில் இருந்து வந்தவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் சத்திரம், ஆற்றங்கரை மனிதன், கோட்டை வாசல் தலைவன், மீண்டும் பூதந்தாங்கி, யுக்திப் பூதம், புதிர்கள் புரிந்தன, பூதத் தீவா? ஆகிய 18 இயல்களில் சிறுவர்களுக்கான இந்நாவல் விரிகின்றது.

**மறுமலர்ச்சிக் கதைகள்.** செங்கை ஆழியான் (தொகுப்பாசிரியர்). திருக்கோணமலை: கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (திருக்கோணமலை: அச்சகத் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம், லவ் லேன், உப்புவெளி).

x, 103 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 24.5x15.5 சமீ.

மறுமலர்ச்சி என்ற ஈழத்துச் சஞ்சிகை 1946ம் ஆண்டு பங்குனி மாதம் வெளிவரத் தொடங்கியது. 1948 வரை 24 இதழ்கள் வெளியாகின. குறுகிய கால இதழானபோதிலும், ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலம் என்றொரு காலக் கணிப்பிற்கு இவ்விதழ் வித்தூன்றியது. மறுமலர்ச்சியின் ஆசிரியர் குழுவில் தி.ச.வரதராசன் (வரதர்), கா.மதியாபரணம், நாவற்குழியூர் நடராசன்,ச.பஞ்சாட்சர சர்மா, க.இ.சரவணமுத்து ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். ஈழத்து இலக்கியப் புனைகதைத் துறையின் மறுமலர்ச்சிக் காலகட்டத்துச் சிறுகதைகளில் சிறப்பானவை என ஆசிரியர் கருதிய 25 சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இவற்றை எழுதிய காலகட்டம் 1946-48 என்பதையும் எழுதியவர்கள் தமது இளம்வயதில் இவற்றை ஆக்கியுள்ளனர் என்பதையும் இச்சிறுகதைத் தொகுதியைப் படிப்பவர்கள் நினைவிற்கொள்ள வேண்டும். அ.செ.முருகானந்தன் (பழையதும் புதியதும், மாடு சிரித்தது), சம்பந்தன் (இரண்டு ஊர்வலங்கள், அவள்), இலங்கையர்கோன் (சக்கரவாகம், மேனகை), வரதர் (இன்பத்திற்கு ஓர் எல்லை, வேள்விப் பலி), து.ருத்திரமூர்த்தி (தூக்கணாங் குருவிக்கூடு), சு.வேலுப்பிள்ளை (பரோபகாரம், நிலைகேடு), நாவற்குழியூர் நடராஜன் (சாயை), கு.பெரியதம்பி (எட்டாப்பழம், அம்மான் மகள், வீண் வதந்தி), நடனம் (வாழ்வு), வே.சுப்பிரமணியம் (நகக்குறி), தாழையடி சபாரத்தினம் (ஆலமரம், தெருக்கீதம்), இராஜநாயகன் (அவன், உலகக் கண்கள்), எஸ்.ஸ்ரீநிவாசன் (முன்னேற்றம்), இ.பொன்னுத்துரை (வண்டிக்காரச் சுப்பன்), சொக்கன் (பொன்பூச்சு), வல்லிக்கண்ணன் (புகழ் அரசி) ஆகியோரின் கதைகள் இத்தொகுப்பில் இடம்பிடித்துள்ளன.

## 1998

**சம்பந்தன் சிறுகதைகள்.** சம்பந்தன் (மூலம்), செங்கைஆழியான், செம்பியன்செல்வன் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: இலங்கை இலக்கியப் பேரவை வெளியீடு, 82, பிறவுன் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1998. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*

*146 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19x12.5 சமீ.*

ஈழத்துச் சிறுகதைத்துறையின் வளர்ச்சிக்கு உரமூட்டிய திருமூலர்களுள் சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன் ஆகியோருடன் க.ஞானசம்பந்தனும் இணைந்து போற்றப்படுகின்றார். 1913இல் பிறந்த இவர் சம்பந்தன் என்ற பெயரில் படைப்புலகில் தன் 25ஆவது வயதில் அறிமுகமாகியவர். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் மாணவர். பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றியவர். 1930-1950 காலகட்டத்தில் இவர் எழுதிய பத்து சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மகாலட்சுமி (கலைமகள்), மதம் (கலைமகள்), சலனம் (கலைமகள்), விதி (கலைமகள்/கதைக்கோவை), தூமகேது (கலைமகள்), இரண்டு ஊர்வலங்கள் (மறுமலர்ச்சி), அவள் (மறுமலர்ச்சி), துறவு (கலைமகள்), சபலம் (கலைச்செல்வி), பிரயாணி (ஈழகேசரி) ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

**கொழும்பு லொட்ஜ்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (யாழ்ப்பாணம்: பொஸ்கோ பதிப்பகம், 252, பருத்தித்துறை வீதி, நல்லூர்).

*(4), 84 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 19x13 சமீ.*

இலங்கையின் ஆட்சிப்பொறுப்பை சந்திரிகா அரசு ஏற்றுக்கொண்ட ஆரம்பகாலவேளையில் எழுதப்பட்டதும், சமகால வாழ்வியல் இடர்பாடுகளின் ஓர் அம்சத்தைச் சித்திரிப்பதற்காக எழுதப்பட்டதுமான ஒரு நாவல். யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் பெருநிலப்பரப்புக்கும் இடையிலான ஆனையிரவுப்பாதை அடைக்கப்பட்ட நிலையில் கிளாலிக்கடலேரியூடாக யாழ்ப்பாண மக்கள் இரவுநேரங்களில் பயணம்செய்து, பல இடர்ப்பாடுகளினூடாகக் கொழும்பு வந்து, அங்குள்ள விடுதிகளில் பல்வேறு கனவுகளோடும் ஏக்கங்களோடும் தங்கி வாழ்ந்த துயரங்களை இந்நாவல் சித்திரிக்கின்றது. இன்றைய அவலச் சூழ்நிலையில் நமது மக்கள் பாரம்பரியமான பண்பாட்டு இறுக்கங்களையும் மரபுக் கட்டுப்பாடுகளையும் உதறிவிடும் மீறல்களை இந்த நாவல் விபரிக்கின்றது. தினக்குரல் ஞாயிறு மலரில் 1997இல் தொடராக வெளிவந்தது. வடக்குக் கிழக்கு மாகாண இலக்கியப்பரிசில் பெற்ற நூல்.

## 2000

**யாழ்ப்பாண அரசபரம்பரை: விஜயகாலிங்கன் முதல் நரசிங்கன் வரை.** க.குணராசா. கொழும்பு 4: யாழ்ப்பாண அரசபரம்பரை வரலாற்றுக் கழகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*19 - 4/6 மிலாகிரிய அவென்யு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (கொழும்பு 13:* Unie Arts, 48 B, Bloemendhal Road*).*

vi, *140 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிக்கப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.*

*யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசபரம்பரையினரின் வழித்தோன்றல்களைத் தேடி அறியும் பரம்பரை அறிவியல் முயற்சி. விஜயகாலிங்கன் முதல் நரசிங்கன் வரையிலான அரசபரம்பரையினரின் வம்சாவளி ஆய்வு இது. வடவிலங்கை அரசும் புராதன மக்களும்,வடவிலங்கை அரசின் மன்னர்கள், சிங்கைநகர் அரசு, யாழ்ப்பாண இராச்சியம்: விஜய காலிங்கன், சங்கிலி செகராசசேகரனும் பரநிருபசிங்கனும், பரநிருப சிங்கன் பரம்பரை, விசயதெய்வேந்திரமுதலி, இளையதம்பி - நரசிங்கன் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

**நானும் எனது நாவல்களும்.** *செங்கை ஆழியான். கொழும்பு 13: மல்லிகைப்பந்தல், 201-1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2000. (கொழும்பு 13: யு.கே. பிரின்டர்ஸ், 9ஏ, விவேகானந்தா மேடு).*

*107 பக்கம், விலை: ரூபா 80.00, அளவு: 21.5x14 சமீ.*

*தன்னால் சிருஷ்டிக்கப்பெற்ற நாவல்கள் பிறந்து வளர்ந்து எழுத்தில் வடிக்கப்பட்ட வரலாற்றை நூலுருவில் தந்துள்ளார். சமகால ஈழத்து இலக்கிய முயற்சிகள் பற்றிய ஒரு வரலாற்று நூலாக இது மலர்ந்துள்ளது. ஈழத்து நாவல்களும் நானும், வரலாற்று நாவல்கள், கடற்கோட்டை - கந்தவேள் கோட்டம், பல்கலைக்கழகச் சூழல், நகைச்சுவை நாவல்கள், சாதிய நாவல்கள், வாடைக்காற்று, வாடைக்காற்று திரைப்படம், யானை- ஒரு மைய வட்டங்கள், சமூக நாவல்கள், புலம்பெயர் நாவல்கள், அரசியல் நாவல்கள், காட்டாறு, தமிழ்த் தேசிய இனத்துவ நாவல்கள், முடிவுரை ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

**ஈழகேசரிச் சிறுகதைகள்.** *செங்கை ஆழியான் (தொகுப்பாசிரியர்). திருக்கோணமலை: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2000. (திருக்கோணமலை: அச்சகத் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம்).*

xviii, *218 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.*

*ஈழத்து இலக்கியப் புனைகதைத்துறையின் 1930 முதல் 1958 வரையிலான காலகட்டத்தில் ஈழகேசரியில் எழுதப்பட்ட 42 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தண்ணீர்த் தாகம் (ஆனந்தன்), நாட்டியப் பெண் (சானா), எதிர்பாராதது (பரிதி), கற்சிலை (நவாலியூர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ.நடராஜன்), நெடுவழி (சி.வைத்திலிங்கம்), குருட்டு வாழ்க்கை (அ.ந.கந்தசாமி), கலாக்ஷேத்திரம் (சம்பந்தன்), விபசாரி (வரதர்), வண்டிற் சவாரி (அ.செ.முருகானந்தம்), வெள்ளிப்பாதசரம் (இலங்கையர்கோன்), மாமி (நாவற்குழியூர் நடராஜன்), துள்ளிய உள்ளம் (சி.குமாரசாமி), வயலுக்குப் போட்டார் (இராஜ அரியரத்தினம்), பொன்னர் செத்த கதை (சோ.சிவபாதசுந்தரம்), செல்லி (ந.பாலசுப்பிரமணியம்), ஒரு பிடி சோறு (யாழ்ப்பாடி), வேலைநிறுத்தம் (ராதாகிருஷ்ணன்), புஞ்சிமெனிக்கா (செ.நடராசா), ஏழையின் கொடை (மயில்வாகனன்), மன்னிப்பு (பொ. பாலசிங்கம்), ஆசைச் சட்டம்பியார் (பவன்), கனவுக்கோயில் (சொக்கன்), பாற்காவடி (சு.வேலுப்பிள்ளை), சிதைந்த வாக்கு (நடனம்), விடிவு (எஸ். கே), தெளிவு (சில்வரம்புலி), சேதுப்பாட்டி (அழகு சுப்பிரமணியம்), வேதனைச் சுடர் (இராஜநாயகன்), நல்ல மாமி (தியாகராஜன்), அமர இரவு (பரணி), தோணி (வ.அ.இராசரத்தினம்), கௌதமி (புதுமைலோலன்), போலிக்கௌரவம் (குறமகள்), நழுவிய பழம் (இ.அம்பிகைபாகன்), செய்ந்நன்றி (கசின்), பழக்கமில்லை (சிற்பி), இலட்சிய நெருப்பு (என். கே.ரகுநாதன்), சவுக்குமரத்து முனி (சுயா), நிலவில் நடந்தது (எஸ். பொன்னுத்துரை), வாழ்வளித்த விலங்கு (நாகராஜன்), தேர்தல் விழா (டொமினிக் ஜீவா), வானம் வெளுத்தது (கே.டானியல்) ஆகிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 2001

**ஈழத்து முன்னோடிச் சிறுகதைகள்.** செங்கை ஆழியான். கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 340, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஜூன் 2001. (கொழும்பு: சக்தி என்ரர்பிரைசஸ்).

xxxiv, 164 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 955-9396-05-6.

1936-50 காலகட்டத்தில் ஈழத்தின் முன்னோடிப் படைப்பாளிகளில் 25 பேரின் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சம்பந்தன், சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன் தொடக்கம், கசின், சொக்கன் ஆகியோரின் கதைகளும், புனைபெயரில் எழுதி இன்றுவரை யாரென்று அடையாளம் காணப்படாத படைப்பாளிகளின் கதைகள் வரை இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பில், படுகொலை (சுயா), பரிசுக்கட்டுரை (சோ.சிவபாதசுந்தரம்), தண்ணீர்த் தாகம் (ஆனந்தன்), ஆறிய மனம் (பாணன்), வாழ்வு (சம்பந்தன்), பாற்கஞ்சி (சி.வைத்தியலிங்கம்), வஞ்சம் (இலங்கையர்கோன்), ஆசைச்சட்டம்பியார் (பவன்), உழைக்கப் பிறந்தவர்கள் (சி.வி.வேலுப்பிள்ளை), வண்டிற்சவாரி (அ.செ. முருகானந்தன்), நல்ல மாமி (சோ. தியாகராஜன்), கற்சிலை (நவாலியூர் சோ.நடராஜன்), கற்பு (வரதர்), நள்ளிரவு (அ.ந.கந்தசாமி), ஒருபிடிசோறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கனக செந்திநாதன்), கிடைக்காத பலன் (சு.வே), மாமி (நாவற்குழியூர் நடராஜன்), வெள்ளம் (இராஜ அரியரத்தினம்), சத்தியபோதிமரம் (கே. கணேஷ்), பிழையும் சரியும் (கசின்), கடல் (சொக்கன்), சேதுப்பாட்டி (அழகு சுப்பிரமணியம்), சொந்தமண் (சு.இராஜநாயகன்), குருவின் சதி (தாழையடி சபாரத்தினம்), மனமாற்றம் (கு.பெரியதம்பி) ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பிலுள்ள சில கதைகள், ஆசிரியரின் ஈழகேசரிச் சிறுகதைகள் என்ற தொகுப்பிலும் காணப்படுகின்றன.

**ஆ.முத்துத்தம்பிப் பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம் 1912: ஒரு மீள்வாசிப்பு.** கந்தையா குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை).

(8), 112 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 22x15 சமீ.

1912ம் ஆண்டில் முதற்பதிப்பைக் கண்ட யாழ்ப்பாணச் சரித்திரம், தொடர்ந்து 1915 இல் யாழ்ப்பாணம் நாவலர் அச்சகத்திலும், 3ம் பதிப்பினை 1933இல் க.வைத்தியலிங்கம் என்பவராலும் மீள்பதிப்புக் கண்டது. இந் நூல் வெளிவந்த பின்னர் நிகழ்ந்த ஆய்வுகள், யாழ்ப்பாண வரலாற்றின் புதிய பக்கங்களுக்கு வெளிச்சமூட்டின. இம்முடிவுகளை அடியொற்றி இந்த நூலை செங்கை ஆழியான் மீள்வாசிப்பாக வெளிக்கொண்டுவந்துள்ளார்

**ஈழத்துச் சிறுகதை வரலாறு.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226 காங்கேசன்துறை வீதி).

xii, 300 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21 x15 சமீ.

இந்நூலின் முதலாவது பதிப்பு, மூதறிஞர் தி.ச.வரதராஜன் (வரதர்) அவர்களின் பவளவிழா நினைவாக ஈழத்துச் சிறுகதை வரலாறு என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.

**ஈழத்து தமிழ்ச் சிறுகதை வரலாறு.** செங்கை ஆழியான். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, People's Park, 2வது பதிப்பு, 2009, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (கொழும்பு 12: சேமமடு பதிப்பகம், பீப்பிள்ஸ் பார்க்).

272 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21 x14.5 சமீ., ISBN: 978-955-1857-49-3.

ஈழத்துச் சிறுகதைகள் சரியான வடிவமைப்பில் எழுதத்தொடங்கிய 1930களின் பிற்பகுதியிலிருந்து 2001ம் ஆண்டு வரை வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த 800 வரையிலான சிறுகதைகளையும வாசித்து, சுமார் 274 சிறுகதைத் தொகுதிகளையும் 400



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைப் படைப்பாளிகளையும் கணிப்பீடு செய்து ஒரு பாரிய நூலை ஈழத்துச் சிறுகதை வரலாற்றுக்குத் தந்திருக்கிறார். சமுதாய சீர்திருத்தக்காலம் (1930-49), முற்போக்குக்காலம் (1950-60), புத்தெழுச்சிக்காலம் (1961-83), தமிழ்த் தேசிய உணர்வுக்காலம் (1983- ) என நான்கு பெரும்பிரிவாக வகுத்து சிறுகதைகளை நூலாசிரியர் மதிப்பீடு செய்துள்ளார். 2001வரை ஈழத்தில் வெளிவந்த சிறுகதைத் தொகுதிகளின் பெயர்கள் ஆண்டுவாரியாகப் பட்டியலிட்டு பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது. மூதறிஞர் தி.ச.வரதராஜன் (வரதர்) அவர்களின் பவளவிழா நினைவாக வெளிவந்துள்ளது.

## 2002

**சுதந்திரன் சிறுகதைகள்.** செங்கை ஆழியான் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபம், ஆரியகுளம்-பருத்தித்துறை விதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2002. (யாழ்ப்பாணம்: உயர்கல்விச் சேவை பதிப்பகம், இராமநாதன் வீதி).

xxiii, 716 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 23x15.5 சமீ.

ஈழத்துச் சிறுகதை இலக்கியத்துக்குச் சுதந்திரன் ஆற்றிய பங்களிப்பையும், அதில் தம் சிறுகதைகளை எழுதிய படைப்பாளிகளின் ஒரு காலகட்டத்துப் படைப்பாற்றலையும் ஆவணப்படுத்தும் ஒரு முயற்சி. 109 சிறுகதைகளைக் கொண்ட இத்தொகுதி 1947 ஜூன் 1ம் திகதியிலிருந்து 1983 டிசம்பர் வரையிலான மூன்றரை தசாப்தகாலத்தில் சுதந்திரன் பத்திரிகை கொழும்பிலும், பின்னர் யாழ்ப்பாணத்திலும் வெளிவந்த போது அதில் பிரசுரமான சிறுகதைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

**போரே நீ போ.** செங்கை ஆழியான். கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 340 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஜூன் 2002. (கொழும்பு: சக்தி என்ரர்பிரைசஸ்).

vi, 194 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-9396-06-4.

தாயகத்தின் சமகாலப் பிரச்சினையைக் கூறும் நாவல். 1995இல் நிகழ்ந்த பாரிய இடப்பெயர்வின்போது, இடம்பெயர்ந்த மக்களையும், இடம்பெயராத மக்களையும் இணைத்த நூலாக இது அமைகின்றது. மானிடவாழ்வின் பெறுமதி வாய்ந்த உயிர்களையும் இளமைக் கனவுகளையும் போர் எவ்வளவுதூரம் நாசப்படுத்தி வருகின்றதென்ற அவலநிலைகளை போரே நீ போ சித்திரிக்கின்றது. யாழ்ப்பாணம், உதயன் பத்திரிகையில் தொடராக வெளிவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மல்லிகைச் சிறுகதைகள்.** செங்கை ஆழியான் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201-1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஜூன் 2002. (கொழும்பு 13: யு.கே. பிரிண்டர்ஸ், 98A விவேகானந்த மேடு).

xxiv, 263 பக்கம், விலை: ரூபா 275., அளவு: 21x14 சமீ., ISBN: 955-8250-18-x.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களின் பவளவிழா ஞாபகார்த்தமாக 27.6.2002இல் வெளியிடப்பட்டது. சீதனம்(வரதர்), கணம் (டொமினிக் ஜீவா), பெற்ற தாயும் பிறந்த நாடும் (அகஸ்தியர்), பதுங்குகுழி (நந்தி), ஆகுதி (ஈழத்துச் சோமு), சமுதாயக் கருணை (குறமகள்), ஷெல்லும் ஏழு இஞ்சிச் சன்னங்களும் (செங்கை ஆழியான்), சர்ப்பவியூகம் (செம்பியன் செல்வன்), சின்னமீன் பெரியமீன் (செ.யோகநாதன்), பொட்டு (தெளிவத்தை ஜோசப்), வள்ளம் (துரை சுப்பிரமணியன்), வெளிச்சத்துக்கு வருவோம் (சிவா சுப்பிரமணியம்), நான் ஆளப்பட வேண்டும் (தெணியான்), தண்ணீர்த்தொட்டி (மா.பாலசிங்கம்), உலா (க.சட்டநாதன்), தமிழன் (சாந்தன்), தெரியாத பக்கங்கள் (சுதாராஜ்), மனதையே கழுவி (கோகிலா மகேந்திரன்), சிறு தீப்பொறி மூண்டு பெரு நெருப்பாக எரியும் (எம். எல்.எம்.மன்சூர்), சமாந்தரங்கள் (முருகபூபதி), இலந்தைப் பழத்துப் பூக்கள் (நீர்கொழும்பூர் முத்துலிங்கம்), வெறும் மனிதன் ஒருவனின் மரணம் (டானியல் அன்ரனி), தரைமீன்கள் (ச.முருகானந்தன்), புழுதிகள் போர்த்திய புனிதங்கள் (திக்குவல்லை கமால்), ஊறிய உணர்வுகள் வழிந்து ஓடுகின்றன (பா.ரத்னஸபாபதி ஐயர்), நீறு பூத்த... (காவலூர் ஜெகந்நாதன்), வட்டத்திற்கு வெளியே (ப.அப்டீன்), பாம்பாட்டி (நாகேசு தர்மலிங்கம்), அந்த அஸ்தமனங்கள் இந்த அருணோதயங்கள் (தாமரைச்செல்வி), கடவுள் ஒருவனல்ல (கே.ஆர்.டேவிட்) ஆகிய 30 தேர்ந்த மல்லிகைக் கதைகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

**எஸ். ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம் 1878: ஒரு மீள்வாசிப்பு.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை).

v, 48 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x15 சமீ.

தெல்லிப்பளை போதனாசக்தி வித்தியாசாலை (Tellippalai Training School) தலைமை ஆசிரியராகவிருந்த எஸ். ஜோன் அவர்களால் 1878இல் ஆக்கப்பட்டு அவரது புதல்வர் டானியல் ஜோன் M.B.அவர்களால் பரிசீலிக்கப்பட்டுப் பிரசுரமான யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூல் பற்றிய மீள்வாசிப்பு. இது யாழ்ப்பாணம் மயில்வாகனப் புலவரது யாழ்ப்பாண வைபவமாலையின் தழுவலாகவிருப்பினும் அதில் விடுபட்டவற்றிற்கும், கூறப்பட்டவைக்கும் புதிய விளக்கங்கள் தரும் நோக்கில் இந்நூல் வெளிவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2003

**The Jaffna Dynasty: Vijayakalingan to Narasinghan-Royal History at it's Magnificient Best.** K.Kunarasa. Colombo 4: Dynasty of Jaffna Kings' HISTORICAL Society, 19, 4/6, Milagiriya Avenue, 1st Edition, February 2003. (Malaysia: Economy Express Printing & Graphics Sdn. Bhd., 6 & 8, Jalan Perdagangan, 3 Taman Universiti Industrial Park, 81300 Skudai, Johor Bahru).

82 p., photos, Price: Not Marked, Size:22x15 cm., ISBN: 955-8455-00-8

Contents: Northern Sri Lanka: Kingdom & People of Antiquity, Kings of Northern Kingdom, Singhai Nagar Kingdom, Jaffna Dynastry: Vijayakalingan, Sankili Segarajasekaran & Paranirupasinghan, Paranirupasinghan & his Descndants, Vijayathevendra Mudali, Eliyathambi to Narasingham, References, The Jaffna Dynasty (Family Tree), Photos of Jaffna & Eliyathamby's Family, Map of Jaffna.

**மல்லிகைச் சிறுகதைகள்:** *இரண்டாம் தொகுதி. செங்கை ஆழியான் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201-1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2003. (கொழும்பு 13: யு.கே. பிரிண்டர்ஸ், 98*A *விவேகானந்த மேடு).*

xiv, *338 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *955-8250-23-6.*

*38 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் மல்லிகை இலக்கிய மாசிகையில் வெளிவந்த 700க்கு மேற்பட்ட சிறுகதைகளில் இருந்து தேர்ந்த 41 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இதில் அரைஞாண் தாலி (ராஜஸ்ரீகாந்தன்), கருணையின் விலை என்ன (கே.எஸ்.சிவகுமாரன்), சவப்பெட்டி (மு.கனகராஜன்), சங்கிலித்தொடர்கள் அறுகின்றன (மருதூர்க்கொத்தன்), ஒழுக்கு (பெரிசண்முகநாதன்), பூமிவட்டமானதுதான் (சிதம்பர திருச்செந்திநாதன்), சூடேறும் செய்திகள் (யோகா பாலச்சந்திரன்), தார்க் கொப்புளங்கள் (கே.விஜயன்), மேற்காவுகை (சி.சுதந்திரராஜா), புதிய பொலிக்கொடி (அ.பாலமனோகரன்), என்னதான் நடக்கின்றது (மல்லிகை சி.குமார்), இதோ மனிதன் (மு.புஷ்பராஜன்), உண்மை-பொய்-மௌனம் (செந்தாரகை), ஒற்றைக்கால் கோழி (க.ஆனந்தமயில்), வதைப்படலம் (மாத்தளை வடிவேலன்), உள்ளும் புறமும் (மு.பொன்னம்பலம்), லண்டன்காரன் (மாவை நித்தியானந்தன்), சிறை (துரை.மனோகரன்), தீட்டு (எஸ்.ஜோன்ராஜன்), மண்ணும் மழையும் (வே.தனபாலசிங்கம்), ஒரு தாத்தாவும் அம்மாவும் நாங்களும் (சு.நவம்), பன்னீர் வாசம் பரவுகிறது (மருதூர் ஏ.மஜீத்), பெரியதம்பியின் புள்ளி ஆடு (மலரன்பன்), உரமான கால்கள் (த.கலாமணி), இது என்ன பாவம் (புலோலியூர் க.சதாசிவம்), சாண் ஏற (நற்பிட்டிமுனை பளீல்), ஏணி (அருண் விஜயராணி), மழைப்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாங்கம் (வடகோவை வரதராஜன்), சைவப் பிள்ளை (அல் அஸ/மத்), மீறல்கள் (ஆ.இரத்தினவேலோன்), யுகபுருஷர்கள் (எஸ்.எச்.நிஃமத்), உள் மறைந்த உணர்வொன்று (யோகேஸ்வரி சிவப்பிரகாசம்), விடிய நேரமிருக்கு (எம்.எம்.நௌஷத்), நம்பிக்கை (பன்னீரன்), முகத்திரைகள் (மு.பஷீர்), மெல்ல இனிச் சாகும் (நெல்லை க.பேரன்), உண்மைக் காதல் என்பது (கெக்கிறாவ சஹானா), வாமனம் (மாத்தளை சோமு), சூனியம் (தாட்சாயணி), ஒரு கிராமம் அழுகிறது (முத்துமீரான்), எண்ணங்கள் (சௌமினி) ஆகிய கதைகள் இடம்பெற்றுள்ளன.

**கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும்.** செங்கைஆழியான். கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு).

x, 144 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21x14 சமீ., ISBN: 955-8250-19-8.

செங்கை ஆழியானின் 17 சிறுகதைகள் இதில் அடங்கியுள்ளன. இது இவரது நான்காவது சிறுகதைத் தொகுதி. இச்சிறுகதைகள் சமகால வாழ்வின் அவல அம்சங்களைக் குறியீடாகக் கூறமுயல்கின்றன. மாணிடர்களோடு அவர்கள் வாழும் சூழலில் காணும் உயிரினங்களும் சிறுகதைகளை நகர்த்திச் செல்கின்றன. கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும், நாணயத்தின் இரு பக்கங்கள், நக்றோமா, ஓநாய்கள், என்ன உறவு, அரவங்கள், அசோகவனம், கரப்பான்பூச்சி, குளவிக்கூடு, வௌவால்கள், எங்கள் பூமி, கறுப்பியைக் காணவில்லை, மார்க்கண்டேயர், கனலும் புனலும், மறைகாய், பொய்ப்பிஞ்சு, சீனவெடி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கதைகள் இவை.

**சாம்பவி.** செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10 ஏ, பிரவுண் வீதி,1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

108 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 19x14 சமீ.

மூன்று குறுநாவல்களின் தொகுப்பு. இத்தொகுப்பில் அடங்கியுள்ள 'மீண்டும் ஒரு சீதை", கலைமகள் அமரர் ராமரத்தினம் குறுநாவல் போட்டியில் பரிசுபெற்றது. 'யாழ்ப்பாணக் கிராமம் ஒன்று" கணையாழி அமரர் தி.ஜானகிராமன் குறுநாவல் போட்டியில் பரிசு பெற்றது. சாம்பவி, கணையாழியில் இரு இதழ்களில் தொடராக வெளிவந்த குறுநாவல். மூன்றும் போர்க்கால அவலங்களிலே பிறந்தவை. சாம்பவி ஒரு பெண்போராளியின் கதை. தமிழீழவிடுதலைப் போராட்டம் தோற்றம்பெற நேர்ந்தமைக்கான காரணிகள் கலாரூபமாக விபரிக்கப்பட்டுள்ளது. 1956,1958,1974,1983களில் இடம்பெற்ற இனக்கலவர வன்செயல்கள் எவ்வாறு சாம்பவியைப் பாதித்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் அவள் போராளியாக மாறநேர்ந்த காரணமும் இந்நாவலில் விபரிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தால் கைதுசெய்யப்படும் காதலியின் தூய்மை பற்றிச் சந்தேகிக்கும் காதலன் பற்றிய கதை மீண்டும் ஒரு சீதை. ஒரு கிராமம் தன் போர்க்கால அவலங்களைக் கூறுவதாக, யாழ்ப்பாணக் கொட்டடிக் கிராமத்தைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்டது.

**வானும் கனல் சொரியும்.** செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, மே 2003. (யாழ்ப்பாணம்: சக்தி என்ரர்பிரைசஸ்).

*130 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 21.5x15 சமீ.*

ஒரு கொலைச் சம்பவத்தினால் ஏற்பட்ட நலன்களின் பொதுமையை நோக்காது, அச்சம்பவத்தின் விளைவாக ஏற்பட்ட குடும்பப் பாதிப்பினை மனதிற்கொண்டு பழிவாங்கும் வன்மம் கொண்டவனாக இக்கதையின் பிரதான பாத்திரம் விளங்குகின்றது. பத்திரிகையில் முன்னர் வெளிவராத இந் நாவல், நேரடியாக நூலாக்கம் பெற்றுள்ளது.

**மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம்.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10 A, பிறவுன் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2003. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, G.L.1/2, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

*144 பக்கம், புகைப்படங்கள், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ.*

மகாவம்சம் கூறுகின்ற இலங்கை வரலாற்றினை ஒருங்கே தொகுத்து, தனது விளக்கத்துடன் நூலாசிரியர் இந்நூலை ஆக்கியுள்ளார். இலங்கைச் சரித்திரம் குறித்து சுருக்கமும் விளக்கமும் நிறைந்த ஒரு நூலின் தேவை இங்கு பூர்த்தியாகின்றது. மகாவம்சம் விபரிக்கும் மூலக்கதைகளைக் கூறாது மகாவம்சம் கூறும் இலங்கை வரலாற்றை விபரிக்க முடிந்தாலும், வரலாற்றின் உண்மைகளையும் பொய்மைகளையும் வாசகர் அறிந்து அளவிட ஏதுவாக அக்கதைகளைத் தவிர்க்காது இந்நூலில் உள்ளபடி விபரிக்கப்பட்டுள்ளது. மகாவம்சத்தின் நம்பகத் தன்மை பற்றிய முடிவினை வாசகரே உணர்ந்துகொள்ள இந்நூல் வழிவகுக்கின்றது. மகாவம்சம், புத்தரின் இலங்கை விஜயங்கள், பௌத்த மகாநாடுகள், விஜயனின் வருகை, குவேனி, விஜயனும் ததாகதரும், பாண்டுவாசுதேவன், அபயன், பண்டுகாபயன், தேவநம்பிய தீசன், மகிந்ததேரரின் வருகை, ஐந்து மன்னர்கள், துட்டகாமினியின் பிறப்பு, சகோதரர்களுக்கிடையிலான போர், படை நகர்வு, சத்தாதீசன் - மகாசேனன், இலங்கை மன்னர்கள் ஆட்சி, நிறைவுரை ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2004

**ஈழராஜா எல்லாளன்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 188 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ.

ஓவியர் ரமணியின் சித்திரங்களுடன் வெளியாகியுள்ள இந்த வரலாற்று நாவலில் கி.மு.145 இலிருந்து கி.மு.101 வரையிலான 44 ஆண்டுகள் இலங்கையில் மாமன்னனாக விளங்கிய எல்லாள மன்னனின் வரலாறு சொல்லப்படுகின்றது. இலங்கையில் மிகப் புராதன காலத்திலிருந்தே தெற்கே சிங்கள அரசும் வடக்கே (வன்னி) தமிழரசும் விளங்கியுள்ளன. ஈழதேசம் எனப்படும் உத்தரப் பிரதேசத்திலிருந்து நிகழ்ந்த தமிழ்ப் படையெடுப்புக்கள் தமிழ் நாட்டிலிருந்து வந்தவையல்ல. மேலும் இந்த நாடும் இந்த நாட்டின் ஆட்சியும் இரு இனங்களுக்கும் உரித்துடையவை. மன்னர்கள் மோதிக் கொண்டார்கள் மக்கள் இருதிறத்து ஆட்சிகளையும் அங்கீகரித்து வாழ்ந்திருக்கிறார்கள் என்ற செய்தியை இந்நாவல் சொல்கின்றது.

**சிங்களச் சிறுகதைகள்.** செங்கை ஆழியான் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (கொழும்பு 13: யூ கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்தா மேடு)

(8), 142 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-8250-27-9.

அயல்மொழி சமூக இலக்கிய பண்பாட்டுப் புரிதல்களுக்கும் ஒப்பியலாய்வுக்கும் பெரும் பயனளிக்கும் வகையில் தொகுக்கப்பட்டுள்ளது. எதிர்வீர சரச்சந்திர, மார்ட்டின் விக்கிரமசிங்க, ஜீ.பீ.சேனநாயக்க, குணசேன விதான, கே.ஜெயதிலக, குணதாச அமரசேகர, ரத்ன பீ. ஏக்கநாயக்க, நிஹால் ரஞ்சித் ஜயதிலக்க, எட்வின் ஆரியதாச, நிமால் சரத்சந்திர, குணதாச லியனகே, T.B.சுபசிங்க, V.M.ஜயவர்த்தன போன்ற ஈழத்தின் முன்னணிச் சிங்களப் படைப்பாளிகளின் சிங்கள மூலத்திலான கதைகள் மல்லிகையில் காலத்துக்குக் காலம் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டு வந்தது. இவற்றில் 25 சிறுகதைகளை இத்தொகுப்பில் காணமுடிகின்றது. தம்பிஐயா தேவதாஸ், சிவா சுப்பிரமணியம், எம்.ஏ.நுஃமான், இப்னு அஸீமத், செந்தீரன், M.L.M.மன்சூர், S.M.J.பைஸ்தீன், நீள்கரைநம்பி, பெரி.சண்முகநாதன், யாதவன், கனகசபை துரைராஜா, ஏ.பியதாச, திக்குவல்லை ஸப்வான் ஆகிய ஈழத்துப் படைப்பாளிகள் இம்மொழிபெயர்ப்புகளை மேற்கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவன் யாழ்ப்பாணம் சிறுகதைகள்.** தேவன் (மூலம்), க.குணராசா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ். கலை இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, மே 2004. (Jaffna: Bosco Artone Printers, Nallur).

*107 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.*

ஈழத்தின் மூத்த படைப்பாளிகளுள் ஒருவர் இளையப்பா மகாதேவா என்ற தேவன் யாழ்ப்பாணம் ஆவார். 27.09.1924இல் பிறந்த தேவன், தனது எழுத்துலக வாழ்க்கையை 1944இல் ஆரம்பித்து 1982 வரை தொடர்ந்தார். நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், நாடகாசிரியர், நாடக இயக்குநர், பேச்சாளர் என்று பல்பரிமாணங்களில் அவர் வாழ்ந்தவர். வாடிய மலர்கள், கேட்டதும் நடந்ததும் என்பன அவரது நாவல்கள். அவன் சுற்றவாளி அவரது குறுநாவல். மணிபல்லவம் அவரது மொழிபெயர்ப்பு நூல். தென்னவன் பிரமராயன் அவரது நாடகநூல். புட்டபர்த்தியில் நான் என்ற நூல் தேவனின் ஆத்மீக அனுபவங்களின் பிழிவு. அவரது மொழி நடை எளிமையானது, அர்த்தம் செறிந்தது. 1963இல் இலங்கை எழுத்தாளர் சங்கத்தினை உருவாக்கியதில் அவருக்குரிய பங்கு அதிகம். தேவன் யாழ்ப்பாணத்தின் 10 சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்பிடித்திருக்கின்றன.

**சுவாமி ஞானப்பிரகாசரின் யாழ்ப்பாண வைபவ விமர்சனம்: தமிழூர் உகம் 1928.** க.குணராசா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, ஜூலை 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*107 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ.*

மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலை ஆராய்வதற்காக சுவாமி ஞானப்பிரகாசரால் சன்மார்க்கபோதினி என்ற பத்திரிகையில் அவ்வப்போது தொடராக அக்காலத்தில் வெளிவந்த தனித்தனிக் கட்டுரைகள் பின்னாளில் அச்சுவேலியிலிருந்து ஞானப்பிரகாசர் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டு 1928ம் ஆண்டு தனிநூலாகவும் வெளியிடப்பட்டது. அந்த மூலநூலின் மீள்வாசிப்பே இதுவாகும்.

## 2005

**உங்கள் பொது உளச்சார்பு.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10 V, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (கொழும்பு 13 : யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

*110 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I Q என்று சுருக்கக் குறியீடாகவும் Intelligence Quotients என்று விரிவுச் சொல்லாகவும் அழைக்கப்படும் நுண்ணறிவுத் துறை, இன்று உலகெங்கும் மனிதனது உளவாற்றலை Mental Ability அளவிட உதவும் துறையாக வளர்ந்துள்ளது. ஆல்பிரெட் பினே Alfred Binet என்ற பிரான்சிய அறிஞரால் இந்த அளவிடும் முறை முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந் நூல் பொது உளச்சார்புப் பயிற்சிகளை வழங்குகின்றது.

**சுனாமி: கடற்கோள் 26/12 (2004).** கந்தையா குணராசா. யாழ்ப்பாணம் கமலம் பதிப்பகம், 75/10 A, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

xvi, 192 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 350., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-1200-03-9.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் 26, டிசம்பர் 2004ம் திகதி பெரும் உயிரழிவையும், சொத்தழிவையும் ஏற்படுத்திச் சென்ற சுனாமி ஆழிப்பேரலை பற்றிய ஆவணம். சுமாத்திராவில் உருக்கொண்டு இந்து சமுத்திரப் பிராந்தியத்தையே கலக்கிய இந்த ஆழிப்பேரலையின் தோற்றப்பாட்டினை அறிவியல்ரீதியாக இந்நூல் விளக்குவதுடன், அந்நிகழ்வினை வரலாற்றுப் பதிவாக்கியுமுள்ளது. 115 கறுப்பு-வெள்ளை, வண்ணப் புகைப்படங்களும் அவற்றிற்கான விளக்கக்குறிப்புடன் தரப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். முன்னுரை (க.குணராசா), சுனாமி அனர்த்தப் புகைப்பட விளக்கம்,

Dr.Sengai Aaliyaan K.Kunarasa (K.S.Sivakumaran), ஆகிய ஆரம்பப் பக்கங்களைத் தொடர்ந்து உள்ளடக்கம், புவியின் உள்ளமைப்பு, மிதக்கும் புவியோடு, கண்டங்கள் நகர்ந்தன, புவித் தகட்டோடுகள், தகட்டோடுகளின் நகர்வு / விளைவுகள், புவி நடுக்கங்கள், சுனாமிப் பேரலை, சுமாத்திராச் சுனாமி, சுனாமியின் விளைவுகள், பேரலைப் பேரழிவுகள் (இலங்கை தவிர்ந்த நாடுகள்), இலங்கையில் சுனாமிப் பேரழிவுகள், சுனாமியிலிருந்து பாதுகாப்பு ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்: வரலாறு.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10 A, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜூலை 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

(2), 46 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 50.00, அளவு: 17x12 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் சுருக்கமான வரலாற்றினைக் கூடியவரை திருத்தமாகக் கூறுவதற்கு இந்நூல் முயற்சிக்கின்றது. இக்கட்டுரை, இந்து சமய விவகார அமைச்சின் 2ஆவது உலக இந்து மாநாட்டு மலரில் முதலில் இடம்பெற்றது. அதனை நல்லைக் குமரன் மலர் 2003இல் மீள்பிரசுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செய்தது. அக்கட்டுரையை விரிவாக்கி இச்சிறுநூல் எழுதப்பட்டுள்ளது. வரலாற்றுச் சங்கிலியின் பிணைக்கப்படாத வளையங்களும், நொய்தலான வளையங்களும் ஆய்வாளர்களால் சீர்செய்யப்படும் போது, இவ்வாலய வரலாறு இன்னமும் செம்மைப்படும்.*

**அடிப்படைப் புவியியல்: இலங்கை, உலகம்-தரம் 10,11.** *க.குணராசா, பிரியா குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு செப்டெம்பர் 2005. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, கு.டு. 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*

*292 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.*

*ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பகுதி 1-இல் பூமியின் பொதுவியல்புகள், பூமியின் தன்மை, புவிக்கோளம் ஆகிய பாடங்களும், பகுதி 2-இல் இலங்கை, இலங்கையின் நிலையம், இலங்கையின் பிறப்பும் தோற்றமும், இலங்கையின் பௌதிகவியல்புகள், இலங்கையின் மண்வகைகள், இலங்கையின் காலநிலை, இலங்கையின் காலநிலைப் பிரதேசங்கள், இலங்கையின் இயற்கைத் தாவரம், இலங்கையின் பயிர்ச்செய்கை, இலங்கையின் கனியங்கள், இலங்கையின் கைத்தொழில்கள், இலங்கையின் மீன்பிடித் தொழில், இலங்கையின் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், இலங்கையின் சூழற் பிரச்சினைகள், சூழற் பாதுகாப்பு ஆகிய தலைப்புகளில் பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. பகுதி 3-இல் உலகின் பௌதீகவியல்புகள், உலகின் பௌதீக உறுப்புகள், பாறைகளும் மண்ணும், வானிலையும் காலநிலையும், உலகின் காலநிலைப் பிரதேசங்கள், உலகின் இயற்கைத் தாவரம் ஆகிய தலைப்புகளில் பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. பகுதி 4-இல் உலகின் சனத்தொகை, மனித வளம், உலகின் குடிப்பரம்பல், இலங்கையின் குடித்தொகை ஆகிய பாடங்களும், பகுதி 5-இல் உலகின் பொருளாதார நடவடிக்கைகள், உலகின் பயிர்ச்செய்கை, உலக மீன்பிடித் தொழில், உலகின் காட்டுத் தொழில்கள், உலகின் வலுப்பொருட்களும் கனிப் பொருட்களும், உலகின் கைத்தொழில்கள், உலக வர்த்தகம், போக்குவரத்தும் தொடர்பாடலும் ஆகிய பாடங்களும் இடம்பெற்றுள்ளன.*

**காட்டாறு.** *செங்கை ஆழியான். சென்னை 600017: கவிதா பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 6123, 8, மாசிலாமணி தெரு, பாண்டிபஜார், தி.நகர், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2005. (சென்னை: மணி ஒப்செட் அச்சகம்).*

*208 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x13.5 சமீ.*

*(பார்க்க: பிரதான பதிவு 1977)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மரணங்கள் மலிந்த பூமி.** செங்கை ஆழியான். சென்னை 600017: கவிதா பப்ளிக்கேஷன்ஸ், தபால் பெட்டி என் 6123, 8. மாசிலாமணி தெரு, பாண்டிபஜார், தி.நகர், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2005. (சென்னை 600005: மணி ஓப்செட்).

224 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x13.5 சமீ.

1995 ஒக்டோபர் 30ம் திகதி வலிகாமத்தில் வாழ்ந்த 5 லட்சம் மக்கள் ஒருவழிப்பாதையூடாகக் கொட்டும் மழையில் ஏதிலிகளாகத் தென்மராட்சிக்கும் வடமராட்சிக்கும் வன்னிக்கும் இடம்பெயர்ந்துசெல்ல நேரிட்டது. அந்தப் பாரிய இடப்பெயர்வைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் இது. இதன் முதலாவது பதிப்பினை நூலாசிரியர் யாழ்ப்பாணத்திலிருந்து, தான் சார்ந்த யாழ். இலக்கிய வட்டத்தின் வாயிலாக ஏப்ரல் 2000இல் ஏற்கெனவே வெளியிட்டிருக்கிறார்.

**ஆயிரமாயிரம் ஆண்டுகள்.** செங்கை ஆழியான். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/8-10 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/8-10 ஆற்காடு சாலை).

224 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 110., அளவு: 21x14 சமீ., ISBN: 81-89748-06-8.

1972இல் எழுதப்பட்ட நிலமகளைத் தேடி என்ற குறுநாவல் தொடங்கி 2001இல் எழுதப்பட்ட தவமும் வரமும் என்ற குறுநாவல் வரை 10 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பழைய வானத்தின் கீழ், முதல் தவறு, ஒரு பௌர்ணமிக் காலம், நிலமகளைத் தேடி, யொகாறா, அக்கினிக் குஞ்சு, சாம்பவி, யாழ்ப்பாணக் கிராமம் ஒன்று, மீண்டும் ஒரு சீதை, வரமும் தவமும் ஆகிய அனைத்தும் 30 ஆண்டுகால இடைவெளியில் எழுதப்பட்ட கதைகள். கொட்டடி, யாழ்ப்பாணம், விசுவமடு, பூநகரி, கிண்ணியா என்று ஈழத்தின் பல இடங்களுக்கும் எம்மை இக்கதைகள் மானசீகமாக அழைத்துச் செல்கின்றன. இக்குறுநாவல்கள் ஈழத்தின் சஞ்சிகைகளிலும் தமிழகச் சஞ்சிகைகளிலும் முன்னர் வெளிவந்தவை. வெளிவந்த காலகட்டங்களில் பலரின் கவனஈர்ப்பினையும் பெற்றவை. பழைய வானத்தின் கீழ், முதல் தவறு, ஒரு பௌர்ணமிக்காலம் ஆகிய மூன்று குறுநாவல்களும் ஈழத்தமிழரின் ஆரம்ப இருப்பினைச் சுட்டுவன. நிலமகளைத் தேடி, அக்கினிக் குஞ்சு, யொகாறா மூன்றிலும் பின்னவை இரண்டும் கடும் விமர்சனத்துக்குள்ளானவை. சாம்பவி, யாழ்ப்பாணக் கிராமமொன்று ஆகிய இரண்டும் கணையாழியில் வெளிவந்து கணிசமான கனதியான வாசகரின் கவனத்தை ஈர்த்தவை. யாழ்ப்பாணக் கிராமம் ஒன்று தி.ஜானகிராமன் நினைவுக் குறுநாவல் போட்டியில் பரிசில் பெற்றுப் பலரின் பாராட்டுக்குமுள்ளானது. மீண்டும் ஒரு சீதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமகள் நடத்திய அமரர் ராமரத்தினம் குறுநாவல் போட்டியில் முதற்பரிசினைப் பெற்றுக்கொண்டது. ஆயிரமாயிரம் ஆண்டுக்கு மேற்பட்ட ஈழத்தமிழர்களுடைய வாழ்க்கைத் தேடல்களின் ஊடாகப் பயணிக்கும் ஓர் அபூர்வ இலக்கிய ரசானுபவம் வாசகருக்குக் கிட்டுவதால் நூலின் தலைப்பும் அதனைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது.

## 2006

**பொது அறிவுச் (N)சாதனை: Your IQ.** க.குணராசா. சென்னை *600014:* அறிவுப் பதிப்பகம், *142*, ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை, *2*வது பதிப்பு, பெப்ரவரி *2007, 1*வது பதிப்பு, ஏப்ரல் *2006*. (சென்னை: பாவை பிரிண்டர்ஸ்).

*(2), 110* பக்கம், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா *40.00*, அளவு: *20*x*13* சமீ., ISBN: *81-88048-36-4*.

இந்நூலில் மூளைக்கு வேலை கொடுக்கும் கேள்விகள் பல இடம் பெற்றுள்ளன. சிறுவயதில் கேள்விகளின் சிக்கல்களை விடுவிக்கும் முறையை தெரிந்துகொண்டால், வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் மனப்பக்குவத்தைப் பெறுவார்கள்.

**யாழ்ப்பாண தேசம்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: அறிவுக்களஞ்சிய நூல்வரிசை, வரதர் வெளியீடு, *84/3*, மானிப்பாய் வீதி, *1*வது பதிப்பு, ஏப்ரல் *2006*. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).

*32* பக்கம், விலை: ரூபா *30.00*, அளவு: *18*x*12* சமீ.

ஒரு பாடசாலை மாணவன் யாழ்ப்பாண வரலாற்றை அறிந்துகொள்ள பல்வேறு நூல்களையும் வாசித்தே அறிந்துகொள்ளவேண்டிய இன்றைய நிலையில், யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாறு ஆதிகாலம் முதல் தற்காலம் வரை முழுமையாகவும் சுருக்கமாகவும் ஈழத்தவர் வரலாறு (க.குணராசா-*1996*), யாழ்ப்பாணச் சரித்திரம் (செ.இராசநாயகம்-*1933*), Notes on Jaffna (John M.Martyn-1923), A Handbook to the Jaffna Peninsula (American Ceylon Mission Press-1905), The Kingdom of Jaffnapatnam (P.E.Pieris-1920) ஆகிய பல்வேறு நூல்களிலும் இருந்து தேர்ந்து எடுத்துத் தொகுத்து, சுவாரஸ்யமான தனிநூலாக இதில் வழங்கியுள்ளார். வரதர் வெளியீடாக வந்த அறிவுக்களஞ்சிய நூல்வரிசையில் முதலாவது நூல். இதனைத் தொடர்ந்து கிரண்பேடி (எஸ்.பி.கிருஷ்ணன்), மனிதர்களின் தேவைகள் (சாமிஜீ) என்ற நூல்களை அறிவுக்களஞ்சிய நூல் வரிசையில் காணமுடிகின்றது.

**யுத்த பூமி.** செங்கை ஆழியான். சென்னை *600098:* New Century Book House, 41 B, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், *1*வது பதிப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் 2006. (சென்னை 14: ஸ்ரீ மகேந்திரா கிராப்பிக்ஸ்).

iv, 130 பக்கம், விலை: ரூபா 162.50, இந்திய ரூபா 50.00, அளவு: 21x14 சமீ., ISBN: 81-234-0972-9.

இலங்கையில் இனமோதல்கள் வெடித்த நிலைமையில் இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காக்கவும், அங்கு அமைதியை நிலைநாட்டவும் சென்ற இந்திய அமைதிகாக்கும் படை, அங்கே தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்ட வரலாற்றுத் தவறு இந்த நாவலின் பின்னணியாகின்றது. கிட்டத்தட்ட மரணத்தின் விளிம்பில் வாழும் ஈழத்தமிழர்கள் எப்படி எல்லாம் மண்மீது பற்றும் பாசமும் கொண்டிருந்தார்கள் என்பதை இந்த நாவல் சித்திரிக்கின்றது.

**பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி.** க.குணராசா. இலங்கை: யாழ்ப்பாணத்து ஆறுமுகசாமி அறக்கட்டளைச் சபை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2006. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

32 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

மகாகவி பாரதியார் 1908முதல் 1918வரையிலான காலப்பகுதியில் புதுவை நகரில் அரசியல் காரணங்களுக்காக மறைந்துவாழ நேரிட்டபோது சில ஞானியர்களுடன் தொடர்புவைத்திருந்தார். அவர்களுள் யாழ்ப்பாணத்துச் சாமியாரும் ஒருவர். பாரதியார் போற்றிய அந்த யாழ்ப்பாணத்துச் சாமியார் யார் என்பதை செங்கை ஆழியான் இந்நூலில் ஆய்வுசெய்துள்ளார். யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமிகள்தான் அவர் என்று இவ்வாய்வில் நிறுவமுற்படுகிறார். 1863இல் யாழ்ப்பாணத்தில் பிறந்த ஆறுமுகம் சிறுவயதுமுதலே தேவிபக்தனாக இருந்தவர். 1891இல் கடையிற் சுவாமிகள் சமாதி அடைந்த வேளையில் அருகே இருந்தவர். 1891இல் திருமணம் செய்து ஆறு குழந்தைகளுக்குத் தந்தையான இவர் மார்கழி 1908இல் குடும்பவாழ்வைத் துறந்து இந்தியாவுக்குச் சென்று சித்தர்களுடனும் துறவிகளுடனும் அலைந்து இறுதியில் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆறுமுகசாமியாக நிரந்தரமாகத் தங்கி அங்கேயே சமாதியடைந்தார். அவரது சமாதியில் அவருக்கு அணுக்கமாக இருந்த சாலியர் சமூக மக்கள் யாழ்ப்பாணத்துச் சாமி பற்றிய பாரதியாரின் பாடலையும் பொறித்து வைத்துள்ளார்கள்.

**செங்கை ஆழியான் நாவல்கள்: ஒரு திறனாய்வு நோக்கு.** கந்தையா முருகதாசன். யாழ்ப்பாணம்: இலங்கை இலக்கியப் பேரவை வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*182 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ.*

*இவ்வாய்வில் 1960-2003 காலப்பகுதிக்குரிய செங்கை ஆழியானின் நாவல்கள் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. செங்கை ஆழியானின் ஆளுமை உருவாக்கம் (இலக்கியமும் படைப்பாளியும், வாழ்வும் எழுத்தும், கல்லூரிக்காலம், பல்கலைக்கழகச் சூழல், செங்கை ஆழியானின் படைப்புக்கள்), செங்கை ஆழியானின் நாவல்களில் பொருளாதாரப் பிரச்சினைகள் (அறிமுகம், வர்க்கங்களின் தோற்றமும் வறுமையும், செங்கை ஆழியான் நாவல்களில் வறுமை, சீதனம், சுரண்டலும் சமூக ஊழல்களும்), செங்கை ஆழியான் நாவல்களில் சாதியம் (அறிமுகம், ஈழத்தில் சாதியம் தொடர்பான நாவல்கள், செங்கை ஆழியானின் நாவல்களில் சாதியம்), செங்கை ஆழியான் நாவல்களில் புலப்பெயர்வு சார் சிக்கல்கள் (புலம்பெயர்வு), செங்கை ஆழியானின் வரலாற்று நாவல்கள் (வரலாறு என்றால் என்ன, வரலாற்று நாவல்கள், தமிழில் வரலாற்று நாவல்கள், ஈழத்தில் வரலாற்று நாவல்கள், செங்கை ஆழியானின் வரலாற்று நாவல்கள்), செங்கை ஆழியான் நாவல்களில் படைப்பாளுமை (கதை மாந்தர் படைப்பு), நிறைவுரை ஆகியஆறு இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2005இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட எம். பில் தேர்வுக்கானஆய்வு இதுவாகும்.*

**பூதத்தம்பி.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: அறிவுக்களஞ்சிய நூல் வரிசை, வரதர் வெளியீடு, 84/3, மானிப்பாய் வீதி, 1வது பதிப்பு, 2006. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை).*

*32 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 30.00, அளவு: 17.5x12 சமீ.*

*யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான நாட்டுக்கூத்தாக பூதத்தம்பி விலாசம் பதிவுபெற்றது. யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தரின் ஆட்சி அதிகாரம் நிலவிய காலகட்டத்தில் இராசவாசல் முதலியார்களில் ஒருவனாக இருந்த பூதத்தம்பி என்பவனின் சோக நாடகமாக இது ஆடப்பெற்று வந்தது. ஒல்லாந்தரின் ஆட்சிக்கு எதிராக இயங்கி மரணதண்டனைக்குள்ளான அந்தத் தமிழ் மறவனின் கதை இது. பல்வேறு வரலாற்று நூல்களிலும் பூதத்தம்பி பற்றி வெளிவந்த குறிப்புகளைப் பயன்படுத்தி செங்கை ஆழியான் பூதத்தம்பியை தற்கால வாசகனுக்கு மீள் அறிமுகம் செய்கின்றார். வரதர் வெளியீடாக வந்த அறிவுக்களஞ்சிய நூல்வரிசையில், யாழ்ப்பாண தேசம் (செங்கை ஆழியான்), கிரண்பேடி (எஸ்.பி.கிருஷ்ணன்), மனிதர்களின் தேவைகள் (சாமிஜீ) என்ற நூல்களைத் தொடர்ந்து நான்காவது நூலாக இது வெளிவந்துள்ளது.*

## 2007

**குந்தி இருக்க ஒரு குடிநிலம்: சிறுகதைகள்.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: திருமதி கமலா குணராசா, கமலம் பதிப்பகம், 75/10 A,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

117 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-1624-00-9.

இது செங்கை ஆழியான் க.குணராசாவின் ஐந்தாவது சிறுகதைத் தொகுதி. இதிலுள்ள 15 கதைகளில் 5 சிறுகதைகள் கலைக்கதிர் இதழ்களிலும், 4 கதைகள் வெளிச்சம் இதழ்களிலும், 2 கதைகள் ஈழநாடு பத்திரிகையிலும் ஏனைய மூன்று கதைகள் தீராநதி, கலைமகள், நுண்ணறிவியல் ஆகிய வெளியீடுகளிலும் இடம்பெற்றவை. எமது பிராந்திய பண்பாட்டுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாத்து அவற்றைப் பற்றிய குறிப்புகளையும் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச்செல்லவேண்டும் என்பதை ஆசிரியரின் ஆடுகால் துலா, ஆவுரோஞ்சிக்கல், குட்டுக்காய், வேலிப்பொட்டு ஆகிய கதைகள் குறித்து நிற்கின்றன. கிராமத்துள் புகுந்த மாயமனிதன், ஊர் பார்க்க வந்த யானைகள் ஆகியவை நகைச்சுவைக் கதைகளாயினும் மக்களின் அறியாமை இருளைப்போக்கும் நோக்கம் கொண்டதாக அமைகின்றன. குந்தி இருக்க ஒரு குடிநிலம், மனிதம் ஆகியவை இனத்துவ முரண்பாட்டின் பின்னணியில் புனையப்பெற்றவை. எஞ்சியவை அறிவியல் சிறுகதைகளாகும்.

**செங்கை ஆழியானின் வாழ்வும் படைப்புகளும்.** ரேணுகா பிரதீபகுமார் (தொகுப்பாசிரியர்). இரத்மலானை: கலாநிதி ரேணுகா பிரதீப்குமார், பிரணவம், 23/4ஏ, ரஜமாவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (கொழும்பு 13 : யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

156 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 22.5x14.5 சமீ.

செங்கை ஆழியானின் மணிவிழா 25.1.2001 அன்று நடந்தவேளையில் மணிவிழா மலரை வெளியிடத் தடங்கல்கள் ஏற்பட்டிருந்தன. மணிவிழாவுக்கெனக் கட்டுரைகளைப் பெறாது, செங்கை ஆழியானின் பணிகள் குறித்துக் காலத்திற்குக் காலம் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்து, 31.12.2006 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில், அவரது அகவை 65 பாராட்டு விழா நடைபெற்றவேளையில் இம்மலர் வெளியிடப்பட்டது. இதில் பல்வேறு பிரமுகர்களின் பார்வையில் செங்கை ஆழியானுடைய வாழ்வும் பணிகளும் பதிவுசெய்யப்படுகின்றன. சு.வித்தியானந்தன், நா.சுப்பிரமணியம், கனக செந்திநாதன், எஸ்.பொன்னுத்துரை, அ.சண்முகதாஸ், கா.சிவத்தம்பி, டொமினிக் ஜீவா, சுந்தரம் டிவகலாலா, எஸ்.பத்மநாதன், அநு.வை.நாகராஜன், ஆ.கோகுலன், ஏ.ஜே.கனகரத்தினா, சிற்பி சிவசரவணபவன், பொ.பாலசுந்தரம்பிள்ளை, கே.எஸ்.சிவகுமாரன், எஸ்.எம்.ஜே.பைஸ்தீன், து.வைத்திலிங்கம், தி.வேலாயுதம்பிள்ளை, செ.சிவஞானசுந்தரம், சிரித்திரன் சுந்தர், எஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கராஜா, இ.பாலசுந்தரம், பொ.சண்முகநாதன், சோ.பத்மநாதன், ம.இரகுநாதன், சு.சபாரத்தினம், கே.சிவராஜா ஆகியோர் பாராட்டுரை வழங்கியவர்களாவர்.

**வற்றா நதி.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10ஏ, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).

iv, 108 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 18x12.5 சமீ.

ஆசிரியரின் நினைவுப்பெட்டகத்திலிருந்து கருக்கொண்ட 11 கதைகளைக் கொண்ட தொகுப்பு. ஒருவகையில் செங்கை ஆழியானின் சுய வரலாறு கூறும் ஒரு பதிவாகவும் அமைந்துள்ளது. வீரகேசரி, தினகரன். தினக்குரல் பத்திரிகைகளிலும் மல்லிகை, ஞானம் சஞ்சிகைகளிலும் வெளிவந்த 9 கதைகளும், முதற்பதிப்புக்காணும் இரு கதைகளுமாக இவை அமைகின்றன. ஆசிரியரின் மொழி நடையும், காட்சிப்படுத்தும் திறனும் வாசகரை கதைகளுடன் ஐக்கியமாக வைக்கின்றது. அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தமது எழுத்துக்களால் ஈழத்துப் படைப்பிலக்கியத்துறையை வளம்படுத்தியவர் செங்கைஆழியான். இவர்தனது அந்தக்காலநினைவுகளை- அந்த அனுபவங்களைப் பெறும் வாய்ப்பற்றதொரு போர்க்காலச் சூழலில் வாழும் இளந் தலைமுறையினருக்காக சிறு அனுபவப்பிழிவுகளாக சுவையாக வழங்கியிருக்கிறார். புனைகதைத் தன்மைகொண்டதும் பயன்தரு தகவல்களைச் சுவைபடத்தரும்வகையிலானதுமான ஆக்கங்கள் இவை. அடிவளவுப் புளியமரம், சைவக்கார ஆச்சி, குஞ்சிஅம்மா, பலாமரத்துக் கூகை, அளவெட்டி மாமி, பெரியய்யாவின் றங்குப்பெட்டி, பால்குடிச் சிறுவன், எங்கவீட்டு அழகி, ஐந்து வயதுச் சினேகிதி, ஜெயில் கார்ட் அத்தான், ஒரு தேவதை ஆகிய 11 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**கூடார வாழ்க்கை: பல்சுவை பல்துறைக் கட்டுரைத் தொகுப்பு.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10 யு, பிறவுன் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

iv, 108 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 17.5x12 சமீ., ISBN: 978-955-1624-01-9.

இந்நூலில், நாடறிந்த ஈழத்துப் புனைகதைப் படைப்பாளி க.குணராசா தனது அனுபவங்களைப் படைப்பாக்கக் கட்டுரைகளாகத் தந்துள்ளார். தனது கனடிய, இந்தியப் பயணங்களில் தாம் கண்டனவற்றையும், அறிந்துகொண்டவற்றையும் வாசகர்களுடன் பகிர்ந்துகொண்டுள்ளார். எட்டயபுரம், (இலண்டனில் தான் சந்தித்த) சோ.சிவபாதசுந்தரம் ஆகிய இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகளும் புதிய பல இலக்கியத் தகவல்களைத் தருகின்றன. கனடிய செவ்விந்தியக் கிராமம், காதல் நினைவுச் சின்னம், பிக்பென் கடிகாரம், கூவர்கிராப்ட் பயணம், உயர் கோபுரம், சீ.என்.டவர், நயாகரா நீர்வீழ்ச்சி, ஆகியன பயணக்காட்சி விளக்கக் கட்டுரைகளாகும். சங்கானைச் சந்தை, புலம்பெயர்ந்த நாட்டில் எமது தனித்துவத்தைப்பேணி வாழ விழையும் ஈழத் தமிழர்களையும், விலங்கும் மனிதனும், ஆசிரியரின் யானை என்ற நாவலுக்கான உள்ளடக்கத்தை வழங்கிய மனிதனின் கதையாகவும், கூடார வாழ்க்கை- ஈழத்தமிழர்களின் இடர்சூழ்ந்த ஒரு காலகட்ட வாழ்வியல் சூழலையும் விபரிக்கின்றன. ஜிம் கரியானிஸ், ஆறுமுகசுவாமி ஆகியவை தனி இயல்புகள் கொண்ட இரு மாமனிதர்களின் வாழ்வுப்பணிகள் தொடர்பான கட்டுரைகளாக அமைந்துள்ளன.

**மீண்டும் வருவேன் (நாவல்).** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10ஏ, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (கொழும்பு 13 : யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

iv, 164 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 17x12.5 சமீ., ISBN: 978-955-1624-03-3.

இரண்டரை தசாப்தங்களுக்கு மேலாகப் பின்தங்கிய புராதன வன்னிக் கிராமப் புறங்களிலும் குடியேற்றக் கிராமங்களிலும் பணி நிமித்தம் வாழ்ந்தவர் செங்கை ஆழியான். அந்த மக்களோடு ஒட்டி உறவாடியவர். சூதுவாதற்ற அக்கிராம மக்களது உயர்ந்த மானிடநேயம் மனுக்குலம் உள்ளவரை நினைவில் கொள்ளத்தக்கது என்கிறார். இலகுவில் நம்பமுடியாத எவராலும் சாதாரணமாக ஜீரணிக்கமுடியாத மனிதர்கள் அக்கிராமங்களில் வாழ்வதாகக் கூறும் ஆசிரியர், அறுகுவெளிக் கிராமத்தின் மானிட இயக்கத்தை அங்கு தொழில்நிமித்தம் பணியாற்றச் சென்ற விதானையார் காந்தலிங்கம் மூலமும், கரந்துறைய அக்கிராமத்திற்கு வந்துசேர்ந்த ஈழப்போராளி சபாலிங்கன் மூலமாகவும் அவர்களின் நோக்கில் இந்நாவலில் காட்டியிருக்கிறார். ஈழப் போராட்டத்தினை முன்னெடுத்த நாற்பத்திரண்டு இளைஞர்களில் சபாலிங்கனும் ஒருவன். உறவுமுறையில் ஆசிரியரின் கூடப்பிறந்த சகோதரியின் மகன். அவனுடைய ஆரம்பகாலப் போராட்ட வாழ்வின் ஒரு சிறு புள்ளியை இந்நாவலில் சபாலிங்கன் வடிவில் ஆசிரியர் இட்டுள்ளார். முதுபெரும் ஈழத்துப் படைப்பாளி செங்கைஆழியான் தான் வாழ்ந்து உணர்ந்த ஒரு கிராமத்தின் கதையையே மீண்டும் வருவேன் என்ற நாவலில் உணர்வுபூர்வமாகச் சொல்கின்றார்.

## 2008

**அலையின் கீதம்: நாவல்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: திருமதி கமலா குணராசா, கமலம் பதிப்பகம், 75/10 A, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

iv, 112 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 17x12 சமீ., ISBN: 978-955-1624-02-6.

செங்கை ஆழியானின் வாடைக்காற்று நாவல் எழுதப்பட்ட 1973 காலகட்டத்தில் எழுதப்பட்ட நாவல் இது. மீனவர்களின் வாழ்வியல் பின்புலத்தில் இதுவும் எழுதப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் சத்தியவேத பாதுகாவலன் பத்திரிகையில் 2000ஆம் ஆண்டில் ஆறு இயல்கள் தொடராக வெளிவந்து பின்னர் இடைநிறுத்தப்பட்டது. இந்நாவல் இப்பொழுது முழுமையாக நூலுருவில் வழங்கப்பட்டுள்ளது.

**சூளவம்சம் கூறும் இலங்கை வரலாறு.** க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10V, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B புளுமெண்டால் வீதி).

iv, 172 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-1624-05-07.

ஈழத்தின் புனைகதைத் துறையில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கும் இந்நூலாசிரியர் இலங்கை வரலாற்றுத் துறையிலும் தனது கவனத்தைச் செலுத்துபவர். ஈழத்தின் வரலாற்றுக் கூறுகளை ஜனரஞ்சக நாவல்களாகத் தந்தவர். ஏற்கெனவே மகாவம்சம் கூறும் இலங்கை வரலாற்றை நூலுருவில் வழங்கியவர். மூலநூல்களின் நம்பகத்தன்மையை புரிந்துகொள்ளவும் அவற்றின் செய்திகளைப் புரிந்துகொள்ளவும் இந்நூல் உதவுகின்றது. மகா பராக்கிரமபாகுவை பாட்டுடைத் தலைவனாகக் கொள்வது சூளவம்சம். இந்நூல் சூளவம்சத்தின் ஆரம்ப மன்னர்கள், தாதுசேனனும் காசியப்பனும், அக்கபோதி மன்னர்கள், மானவர்மன், ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன், சோழமன்னன் வல்லபன், விஜயபாகு, பராக்கிரமபாகுவின் பிறப்பு, பராக்கிரமபாகுவின் திக்விஜயம், பராக்கிரமபாகுவின் அரண்மனை வாழ்வு, மகா பராக்கிரமபாகு, இலங்காபுரத் தண்டநாயக்கன், பராக்கிரமபாகுவின் பின்னர், கலிங்க மாகன், சந்திரபானு, மூன்றாவது பராக்கிரமபாகு, மூன்று மன்னர்கள், கீர்த்திஸ்ரீ ராஜசிங்கன் ஆகிய 18 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**இலங்கைச் சுருக்க வரலாறு: கி.மு.6ஆம் நூற்றாண்டு முதல் 2007 வரை.** கந்தையா குணராசா, கமலா குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A, பிறவுன் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

vi, 340 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-1624-06-4.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கைச் சுருக்க வரலாறு: கி.மு.6ஆம் நூற்றாண்டு முதல் 2007 வரை.** கந்தையா குணராசா, கமலா குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A, பிறவுன் வீதி, 2வது பதிப்பு, ஜூலை 2013, 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

vi, 368 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 650., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-1624-06-4.

இலங்கையின் வரலாற்றை ஆதிக் குடியேற்றங்களிலிருந்து தொடங்கி இந் நூலில் எளிய நடையில் வழங்கியுள்ளார்கள் செங்கை ஆழியான் க.குணராசாவும் அவரது துணைவியாரும். சிங்கள மக்களின் வரலாற்றைக் கூறும் ஆவணங்களான மகாவம்சம், சூளவம்சம் மற்றும் இது சார்ந்த ஏனைய இலக்கியப் பனுவல்களும், யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றை விபரிக்கும் யாழ்ப்பாண வைபவ மாலை, வையாபாடல் என்பனவும், முத்துத்தம்பிப்பிள்ளை முதலாக சுவாமி ஞானப்பிரகாசர் வரை ஆக்கிய வரலாற்று நூல்களும், நவீன வரலாற்று ஆசிரியர்களது கருத்துக்களும் கவனத்திற்கு எடுக்கப்பட்டு இலங்கைச் சுருக்க வரலாறு ஆக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஆதிக் குடிகளும் ஆரம்பக்குடியேற்றங்களும், இலங்கையின் வரலாற்று உதயகால மன்னர்கள், இலங்கையின் புகழ்பூத்த மன்னன் தேவநம்பியதீசன், சேனன், குத்திகன், எல்லாளன் -தமிழ் மன்னர்களின் ஆட்சி, துட்டகாமினி மன்னன், துட்டகாமினிக்குப் பின்னர், மகாசேனன், ஸ்ரீமேகவண்ணன், தாதுசேனனும் காசியப்பனும், அக்கபோதி மன்னர்கள், மானவர்மன் பரம்பரையினரின் ஆட்சி, உத்தரதேசமும் உக்கிரசிங்கனும், ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் ஆட்சியும் அதன் பின்னரும், சோழராட்சியில் இலங்கை, விஜயபாகு மன்னன், மகா பராக்கிரமபாகு, நிசங்கமல்லன், கலிங்கத்து மாகன், யாழ்ப்பாண இராஜதானி, தென்புலம் பெயர்ந்த தலைநகர்கள், கோட்டை இராஜதானியும் கண்டி இராஜதானியும், போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம், சுதந்திர இலங்கை ஆகிய 25 அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது.

**கனகசெந்தி கதாவிருது பெற்ற சிறுகதைகள்: தொகுதி 1 (2003-2007).** செங்கை ஆழியான் (தொகுப்பாசிரியர்), ஆ.இரத்தினவேலோன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: மீரா பதிப்பகம், 191/23 ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, ஜூலை 2008. (வத்தளை: Page and Image, 202/2B Royal Pearl Garden).

x, 189 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ.

யாழ். இலக்கிய வட்டத்தின் பிதாமகரான அமரர் இரசிகமணி கனக. செந்திநாதன் ஆவார். அவரது ஞாபகார்த்தமாக அவ்வப்போது வெளிவரும் சிறுகதைகளில் தரமானவற்றைத் தேர்ந்து கனகசெந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாவிருது வழங்கப்படுகின்றது. அவ்வகையில் பரிசுபெற்ற 17 சிறுகதைப் படைப்புகளை இத்தொகுப்பு பதிவுசெய்கின்றது. 75ஆவது மீரா பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ள இத்தொகுப்பில் எம்.எஸ். அமானுல்லா (கருவேலங்காடுகள் தாண்டி), ஆ.இரத்தினவேலோன் (வேட்டை), ஏ.எஸ்.உபைத்துல்லா (ஜலசமாதி), சி.கதிர்காமநாதன் (வீடு), ஜூனைதா ஷெரீப் (முள்ளை முள்ளால்), செம்பியன் செல்வன் (மாயாவதியின் கனவு), சாந்தன் (மீள்தல்), நீர்வை பொன்னையன் (ஜென்மம்), குந்தவை (நாடும் நம் மக்களும்), க.சட்டநாதன் (பொழுது), செங்கை ஆழியான் (X வெள்ளவத்தை), பன் பாலா (பெரியவன்), திருமலை வீ.என்.சந்திரகாந்தி (சம்ஹாரம்), ஆ.இரத்தினவேலோன் (நெஞ்சாங்கூட்டு நினைவுகள்), யோகேஸ்வரி சிவப்பிரகாசம் (காணவில்லை), கனகசபை தேவகடாட்சம் (பிணங்கள் விற்பனைக்கு), பவானி தேவதாஸ் (என் இனிய தோழனே) ஆகியோரின் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**ஈழநாடு சிறுகதைகள்: தொகுதி-1.** செங்கை ஆழியான். திருக்கோணமலை: இ.இளங்கோவன், செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு, வடமாகாணம், 1வது பதிப்பு, 2008. (திருக்கோணமலை: ரெயின்போ மினி லாப், 113 வித்தியாலயம் வீதி).

420 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை 1930களிலிருந்து 1958வரை ஆரோக்கியமாக முன்னெடுத்துச் சென்ற ஈழகேசரி வார இதழின் தொடர்ச்சியாக, இலக்கியப்பணி ஆற்றுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஏடாக ஈழத்து இலக்கியவாதிகளினால் ஈழநாடு மதிக்கப்பட்டது. 1959 பெப்ரவரி 09இலிருந்து வெளிவரத்தொடங்கிய ஈழநாடு 90களின் நடுப்பகுதிவரை 36 ஆண்டுகள் வெளிவந்தது. அக்காலகட்டத்தில் 17 நாவல்கள், 12 குறுநாவல்கள், 799 சிறுகதைகள் இப்பத்திரிகையில் வெளிவந்தன. அவற்றில் தேர்ந்த 53 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 2009

**பூ (சிறுகதைகள்).** க.பரராஜசிங்கம் (புனைபெயர்: துருவன்), செங்கை ஆழியான் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ் இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

ix, 92 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 100., அளவு: 20x14.5 சமீ.

துருவன் என்ற புனைபெயரைச் சூடிக்கொண்ட அமரர் க.பரராஜசிங்கம் (22.11.1943-07.04.1989), 'பபூன் இரத்தினம்" எனப் பிரபல்யம் பெற்ற கலைஞர் நமசிவாயம் கனகரத்தினம் அவர்களின் மகனாவார். யாழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்குந்தா இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் பேராதனைப் பல்கலைக்கழக புவியியல்துறை சிறப்புப் பட்டதாரியுமாவார். சிறுகதையாளராக மாத்திரமின்றி நடிகராகவும் இயக்குநராகவும் பல்கலைக்கழக நாடகத்துறையில் பிரபல்யம் பெற்றிருந்தவர். கலைச்செல்வி ஆசிரியர் சிற்பி சிவசரவணபவனின் வழிகாட்டலில் தன் இலக்கியப் பாதையை வகுத்துக்கொண்ட இவர் பல்வேறு சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் எழுதிய சிறுகதைகளுட் சில ஒரு தொகுதியாக அவரின் மறைவின் 20 ஆண்டுகளின் பின்னர் நூலுருப்பெற்றுள்ளன. இத்தொகுப்பில் குருடு, விளாம்பழம், வாய்க்கால், வியாபாரம், பூ, நானும் ஒருவன், ஒரு குலை உள்ளிட்ட பத்துச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

**மெல்ல இருள் இனி விலகும்.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: திருமதி கமலா குணராசா, கமலம் பதிப்பகம், 75/10 A, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

iv, *64 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ.*

இலங்கையின் பெருநிலத்தையும் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் இணைக்கின்ற ஆனையிரவுப் பாதை மக்களின் போக்குவரத்திற்கு அடைபட்டுப்போனதன்பின்னர் இடர் நிறைந்த வழிகள் மக்களைத் தெற்கேயும் வடக்கேயும்இடம்மாற்றி வந்துள்ளது. முதலில் கேரதீவு-சங்குப்பிட்டிப் படகுப்பாதை. அதன்பின்னர் இயக்கச்சி-ஊரியான் அல்லது இயக்கச்சி-கொம்படி களப்புப் பாதை. அதன் பின்னர் கிளாலி-பூநகரிக் குடாக்கடல் பாதை என்பவற்றினூடாக மக்கள் இரவு நேரங்களில் சஞ்சரித்தனர். அவ்வேளை, யாழ்ப்பாணக் குடாநாட்டில் நுகர்வுப்பொருட்கள் இல்லை. எரிபொருட்கள்அரிது. மின்சாரம், தொலைபேசி வசதிகள் எதுவுமேயில்லை. வானத்தில் ஹெலிகளும் பொம்பர்களும் அட்டகாசம் செய்தன. இவற்றிடையே அவசியம் நேர்ந்தவர்கள் அப்பாதைகளில் பயணப்பட்டனர். அவ்வாறான காலகட்டத்தைப் பின்னணியாகக் கொண்ட நாவல் இதுவாகும். இரண்டு களங்களில் நிகழும் இந்நாவலினூடாக யாழ்ப்பாணத்து மக்களின் மனவுணர்வுக் கோலங்களைப் பாவத்தோடும் பலவீனத்தோடும் சித்திரித்துள்ளார்.

**பௌதிகப் புவியியல்-2:** சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும். க.குணராசா. *யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (கொழும்பு 6: சு.கிருஷ்ணமூர்த்தி, கிரிப்ஸ்).*

*228 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 20x14 சமீ.,* ISBN: *978-955-0134-30-4.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகச் சூழல் நெருக்கடி, உயிர்ச் சூழல், உயிரியல் பல்வகைமை, புவியில் சுருங்கும் பசுமைப் போர்வை, நிலத்தின் வளத் தேய்வு, நீர் மாசடைதல், மாசடைந்துவரும் வளிமண்டலம், காலநிலை மாற்றம், ஓசோன் படையில் துவாரம், பரவிவரும் பாலை, சூழலை அச்சுறுத்தும் தொழிற்சாலைகள், சூழலிற்கு அச்சுறுத்தலாகும் கிருமிநாசினிகளும் அசேதன வளமாக்கிகளும், அணுக்கதிர் மாசுபாடு, அச்சுறுத்தும் அமில மழை, நகராக்கம் தொடர்பான சூழற் பிரச்சினைகள், இலங்கையின் உண்ணாட்டுச் சூழற்பிரச்சினைகள், இலங்கையின் கரையோரச் சூழற் பிரச்சினைகள், சூழல் தொடர்பான இயக்கங்கள், கிழக்கு-மேற்கு சூழல் சார் ஒழுக்க நெறிகள், சூழல் பாதுகாப்புச் சட்டங்கள், சூழலும் அபிவிருத்தியும், ஆகிய தலைப்புகளில் இந்நூலில் உள்ள கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. உசாத்துணை நூல்களும் கட்டுரைகளும், வினாவிடைப் பயிற்சிகள் ஆகியன இறுதியில் தரப்பட்டுள்ளன.

**ருத்திர தாண்டவம்: நாவல்.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10V, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B புளூமெண்டால் வீதி).*

vi, *238 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 17x12.5 சமீ.,* ISBN: *978-955-1624-08-8.*

'இலங்கைவரலாற்றில்மீண்டும்ஈழத்தமிழர்கள்ஏமாந்துபோனார்கள்.முப்பது ஆண்டுகளாக நம்பியிருந்த மாமலை சாய்ந்ததும் ஈழப்போராட்டத்தின் இறுதியில் கடைசி அத்தியாயம் நிறைவு பெற்றது. தமிழ்மக்கள் நம்பி ஏமாந்த வரலாற்றின் இறுதி அத்தியாயங்கள் எழுதப்பட்டன. நம்பிக்கைகள் தகர்ந்துபோயின. மாபெரும் போராட்ட வரலாறு இடைநடுவில் அவலமாக நிறைவுபெற்ற நிகழ்ச்சியை நம்பவே முடியவில்லை. ஒரே நம்பிக்கை- அறிந்த வரலாறு அது. எங்கோ ஒரு பின்தங்கிய கிராமத்தில் பிறந்து மாபெரும் போராட்ட வீரனாக மாறிய தலைவரிடம் கொண்டிருந்த தமிழ் மக்களின் அபிலாசைகள் சிதைந்து போயின. முள்ளிவாய்க்கால் கரையில் கரைந்து போயின. அந்த வரலாற்றை விரிவாக எழுதவேண்டும். அதன் முன்னுரையாகவே இந்த நாவல் அமைகின்றது. இந்த நாவலின் மூன்றாம் பாகமே இறுதிப் போரின் இறுதி நாட்களைப் பேசினாலும், நாம் ஏமாந்த கதையைக் கூடியவரை முன்வைக்க முயன்றிருக்கின்றேன் என்ற நம்பிக்கையுள்ளது. நம்பி ஏமாந்த கதையைப் பொழிப்பாக இந்த நாவலில் விபரித்துள்ளேன். கத்திமீது நடப்பதுபோல இருந்தாலும், கூறியே ஆகவேண்டியதாக எனக்குப் படுகின்றது. அபரிமிதமான நம்பிக்கைகள் இழந்துபோனதை நம்பமுடியாதுள்ள இடரை என்னென்பேன்" - செங்கை ஆழியான் (முன்னுரையில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2010

**முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள்.** செங்கை ஆழியான் (தொகுப்பாசிரியர்), பூ.ஸ்ரீதரசிங் (பதிப்பாசிரியர்). கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, மாசி 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ்).

xxxi, 337 பக்கம், விலை: ரூபா 800., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-9396-40-6.

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் 1950 தொடக்கம் 1960 வரையிலான காலகட்டத்தை முற்போக்குக் காலம் என வகுத்திருக்கிறார்கள். ஈழத்தமிழ்ச் சமூகத்தின் விடிவை நோக்கி, அதாவது சமூகப் பிரச்சினைகளான வறுமை, சாதிய அடக்குமுறை, சமூக ஏற்றத்தாழ்வு, இனவொடுக்கல்கள் என்பவற்றுக்கு எதிராக மக்களைச் சமூகப் புரட்சிக்கு ஒன்றிணைக்கும் பணியை இக்காலகட்டத்துப் படைப்பாளிகள் முன்னெடுத்துள்ளார்கள். இந்நூல் அத்தகைய 38 முற்போக்குக் காலகட்டத்துப் படைப்பாளிகளின் சிறுகதைகளின் தொகுப்பாகும். முன்னுரையில் ஈழத்து முற்போக்குப் படைப்பாளிகள் 40 பேரின் புகைப்படங்களும் அவர்களது இலக்கிய வாழ்க்கைக் குறிப்பும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

## 2011

**விடியலைத்தேடி.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10V, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B புளுமென்டால் வீதி).

vi, 67 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 19x14 சமீ., ISBN: 978-955-1624-13-2.

இலக்கியத்துக்கான சாகித்திய ரத்னா விருதுபெற்ற செங்கை ஆழியானால் போர்க்காலப் பின்னணியில் எழுதப்பெற்றதும், 1948இல் இலங்கை சுதந்திரம்பெற்றதிலிருந்து இன்றுவரை அரசியல்வாதிகளையும், ஆயதப் போராட்டத்தையும் நம்பி ஏமாந்து மீண்டும் பூச்சிய நிலையினை வந்தடைந்திருக்கும் ஈழத்தமிழரின் சமகாலத்தைச் சித்திரிக்கும் ஓர் அரசியல் நாவல் இது. மன்னாரிலுள்ள கிராமமான சுங்கன்குழியில் நாவல் ஆரம்பமாகின்றது. அம்பலவாணர் மகன் சண்முகம் இராணுவ நகர்வை எடுத்துச்சொல்லி பூநகரிக்கு இடம்பெயர்கின்றனர். அங்கிருந்து பரந்தன், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு என இடம்மாறி முல்லைத்தீவு வருகின்றனர். இடையில் இழந்த உடைமைகள் உயிர் இழப்புகள் ஏராளம். 56 பேருடன் புறப்பட்ட அம்பலவாணர் குடும்பம் இருபது பேருடன் மீண்டும் சுங்கன்குழியை நாடித்திரும்புகின்றனர். ரசனைக்காக இடையில் போராளி சசீதரன் -வசந்தி காதலும் கதையுடன் இழையோடுகின்றது. போரினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட இழப்புகளை விபரிப்பதில் பெரும்பாலும் கதை நகர்கின்றது. அவ்வகையில் குறிப்பிடத்தக்கதொரு போர்க்கால சமூக வரலாற்றுப் பதிவாக இந்நாவல் அமைகின்றது.

## 2012

**எச்சாட்டி அம்மன் ஆலய வரலாறு.** க.குணராசா. யாழ்ப்பாணம்: ஆலய அறங்காவலர் சபை, எச்சாட்டி மஹாமாரி அம்மன் ஆலயம், வண்ணார் பண்ணை கிழக்கு, கலட்டி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2012. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 424, காங்கேசன்துறை வீதி).

*(12), 63 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x22 சமீ.*

மழை காலத்தில் எள் பயிரிடப்படும் அந்த மேட்டுநில வயல்வெளி அறுவடை முடிந்ததும் பெரும்பான்மையான வேளைகளில் வரண்டு வெங்கணாந்தி வெளியாகக் காணப்படும். 'சாட்டி" என்பது அறுவடையின் பின்னர் வரண்டு கிடக்கும் வயல் நிலத்தைக் குறிப்பது. எள்ளுசாட்டி என்பது மருவி எச்சாட்டி என்றாயிற்றென இடப்பெயர் விளக்கம் தரும் செங்கை ஆழியான், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கில், கலட்டியில் அமைந்துள்ள எச்சாட்டி மகாமாரி அம்மன் கோவிலின் வரலாற்றை இலக்கியச் சுவையுடன் முதல் நான்கு இயல்களிலும் விரிவாக புகைப்பட ஆதாரங்களுடன் எழுதியிருக்கிறார். ஐந்தாம் இயலில் ஆலய அபிவிருத்தியில் பங்குகொண்டோர் பற்றிய வரலாற்று விபரங்களை அவர்களது புகைப்படங்கள் சகிதம் பதிவுசெய்திருக்கிறார். ஆறாவது இயலில் 1993இன் பின்னைய புதிய நிர்வாகத்தின்கீழ் ஆலய நடவடிக்கைகள் பற்றி விபரித்துள்ளார். தொடர்ந்து வரும் ஏழாவது இயலில் 1927முதல் இன்றுவரை நடைபெற்ற கும்பாபிஷேகங்கள் பற்றியும், எட்டாவது இயலில் ஆலய உற்சவங்கள் பற்றியும் விபரித்துள்ளார்.

**மாமன்னன் சங்கிலியன்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10V, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

*100 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-1624-18-7.*

சாஹித்ய ரத்னா விருதுபெற்ற செங்கை ஆழியான் கலாநிதி க.குணராசாவின் 46ஆவது நாவல் இது. யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனான சங்கிலி செகராசசேகரனின் வரலாற்றைத் தழுவி எழுதப்பட்ட நாவல். இதுவரை வெளிவந்த சங்கிலி மன்னன் பற்றிய பல நூல்களில் சொல்லப்படாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை இந்நாவல் கொண்டுள்ளது. சங்கிலி மன்னன் ஒரு அரசனின் வைப்பாட்டியின் மகனாகச் சித்திரிக்கப்படுகின்றான். அவனுக்கு யாழ்ப்பாண அரசுக்கட்டிலேறும் வாய்ப்பே இல்லாத நிலையில் அப்பதவியை எப்படியாவது அடைந்தே தீரவேண்டும் என்ற நோக்கில் மூத்த இரண்டு பட்டத்து இளவல்களையும் சதியால் கொல்கின்றான். அவன் மன்னனாகிய வழி பிழையானதாயினும் நாட்டுமக்களுக்குத் துரோகம் இழைக்கவில்லை. நாட்டை அந்நியர்வசம் போகாது காத்தான். போர்த்துக்கேயருக்குத் திறை செலுத்த மறுத்தான். மதமாற்றம் ஒரு அரசியல் காரணி என்று கருதித் தான் ஆட்சி செய்த 34 வருட காலத்தில் மக்கள் மதம் மாறுவதை அனுமதிக்கவில்லை. மதம் மாறியவர்கள் நாட்டை விற்கவும் துணிவர் என்று அவன் கருதினான். மதம் மாறிய 600 குடிமக்களைப் பலிகொண்டதோடு, மதமாற்றத்திற்கு உதவிய பிரான்ஸிஸ் சேவியரையும் பலிகொண்டான். இவை அனைத்தும் இவ்வரலாற்று நாவலில் இழையோடியுள்ளன.

## 2013

**சாகித்தியரத்னா செங்கைஆழியான் நேர்காணல்.** தி.ஞானசேகரன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 36வது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி).

(4), 80 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-8354-46-9.

இலங்கை அரசின் உயர்விருதான சாகித்திய ரத்னா விருதினைப் பெற்ற ஈழத்துப் படைப்பிலக்கியவாதியான செங்கை ஆழியான் க.குணராஜாவுடன், ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் வைத்திய கலாநிதி தி.ஞானசேகரன் ஒரு விரிவான நேர்காணலை மேற்கொண்டு ஞானம் சஞ்சிகையில் அதனைத் தொடராகப் பிரசுரித்திருந்தார். அதன் நூல்வடிவம் இதுவாகும். 46 நாவல்களையும், ஆறு சிறுகதைத் தொகுதிகளையும், 8 பல்சுவைக் கட்டுரைகளையும் பல்வேறு தொகுப்பு நூல்களையும் இதுவரை தந்தவரான செங்கை ஆழியானின் படைப்பிலக்கியப் பணி இன்னமும் தடையின்றித் தொடர்கின்றது. இந்நேர்காணல் வழியாக அவரது இலக்கியத்தேடலின் ஆழமும் அகலமும் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

## 2015

**பனங்கூடல் (நாவல்).** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, நவம்பர் 2015. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B புளுமெண்டால் வீதி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(6), 7-77* பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா *300.*, அளவு: *22x14.5* சமீ., ISBN: *978-955-1624-18-7.*

சாஹித்ய ரத்னா செங்கை ஆழியான் எழுதிய **54**ஆவது நாவல். தினகரன் வார மஞ்சரியில் **2011**இல் தொடராக வெளிவந்திருந்தது. கடந்து சென்ற முப்பது ஆண்டுகள் நடந்த யுத்தமும், இடப்பெயர்வும், அழிவுகளும், மனித உயிர்களின் இழப்புகளும் எவ்வாறு சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை இந்நாவலின் கருவாகக் காணமுடிகின்றது. அத்துடன் புலம்பெயர் மக்களிடையே ஏற்பட்டுள்ள சமூக, கலாச்சார மாற்றத்தையும் இந்நூல் மூலம் ஆசிரியர் எடுத்துக்கூறியுள்ளார். வடமாகாணத்தில் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தனித்துவமாகவிருந்த கலாச்சாரம், ஒழுக்க விழுமியங்கள், பிரதேச வழமைகள் என்பன போரின் காரணமான இடப்பெயர்வுகளாலும், கலாச்சார குழப்பங்களாலும் மாறுபட்டுக்கிடப்பதையும் ஆசிரியர் இந்நாவலில் வெளிச்சமிட்டுக் காட்டத் தவறவில்லை.

**யாழ்ப்பாணம் பாரீர்.** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளூமெண்டால் வீதி).*

viii, *84* பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா *300.*, அளவு: *21x15* சமீ., ISBN: *978-955-1624-12-5.*

யாழ்ப்பாணம் பற்றிய பல்வேறு தகவல்களை இந்நூலில் தொகுத்து வழங்கியிருக்கிறார். யாழ்ப்பாணம் பற்றிய வரலாற்று அறிமுகத்துடன் தொடங்கும் இந்நூலில் யாழ்ப்பாண தேசத்தின் தோற்றம், யாழ்ப்பாண வளைவு, யாழ்ப்பாணக் கோட்டை, பொதுசன நூல் நிலையம், துரையப்பா விளையாட்டரங்கு, முற்றவெளி றீகல் தியேட்டர், நினைவுக் கற்கள், வீரசிங்கம் மண்டபம், முற்றவெளி முனியப்பர் கோயில், தபாற் கந்தோர், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், மணிக்கூட்டுக் கோபுரம், செல்வா நினைவுக்கோபுரம், பழைய மாநகர சபைக் கட்டடம், கங்காசத்திரம், சொக்கட்டான் சந்தைகள், நவீன சந்தைகளும் ஏனையனவும், யாழ்ப்பாணம் கச்சேரி, யாழ்ப்பாணம் கச்சேரி குடுக்காய் மரம், குருநகர்த் தண்ணீர்த் தாங்கி, நல்லூர்க் கந்தசுவாமி பெருங் கோயில், நல்லூர்ச் சுற்றுக் கோயில்கள், நல்லூர்ப் பூதத்தம்பி வளைவு, நல்லூர் மந்திரி மனை, யமுனா ஏரி, யாழ்ப்பாண நுண்காட்சியகம், வில்லூன்றி, யாழ்ப்பாண வீதித் தர்மம், தெரு மூடிமடம், சங்கடப் படலை, கைதடி பனை அபிவிருத்திச்சபை, கைதடி சாந்தி நிலையம், தெருவோரத் தெய்வங்கள், வல்லை முனியப்பர், சுட்டிபுரம் அம்மன் கோவில், மணல் காடு, புனித அந்தோணியார் தேவாலயம், வல்லிபுரக் கோயில், பல்கிளைப் பனைமரம், வெளிச்ச வீடு, மயிலியதனைக் கிடங்கு, நிலாவரைக் கிணறு, மாவிட்டபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசுவாமி கோயில், கீரிமலை, நகுலேஸ்வரம், சன்னதி முருகன் கோயில், தொண்டைமானாறு, கிறிஸ்தவ தேவாலயங்கள், கந்தரோடை வரலாற்று எச்சங்கள், துர்க்கையம்மன் கோயில், வழுக்கியாறு, பறாளை விநாயகர், களைத்தோடிக் கண்ணகை, மானிப்பாய் இடிகுண்டு, காரைநகர் சிவன் கோயிலும் கசூர்னா கடற்கரையும், காரைநகர் கடற்கோட்டை, ஊருண்டி துறைமுகம் கோட்டை (ஹரில்), நயினை நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு நாகவிகாரை, அனலைதீவு ஐயனார் கோயில், அனலைதீவு நாகேஸ்வரர், நெடுந்தீவு போர்த்துகேயர் கோட்டை, நெடுந்தீவு பாவோபாப் மரம், நெடுந்தீவு குயிண்டாக் கோபுரம், நெடுந்தீவு (குதிரைகள்) காட்டுக் குதிரைகள், நெடுந்தீவு சாராப்பிட்டி ஆகிய தலைப்புகளில் பிரதேச வரலாற்றுக் குறிப்புகள் புகைப்படங்களுடன் சிறு கட்டுரைகளாகத் தரப்பட்டுள்ளன.

## 2016

**செங்கை ஆழியான் நினைவலைகள்.** மலர் வெளியீட்டுக் குழு. யாழ்ப்பாணம்: சாகித்ய ரத்னா கலாநிதி கந்தையா குணராசா அவர்களின் நினைவு வெளியீடு, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2016. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

92 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

சாகித்ய ரத்னா கலாநிதி கந்தையா குணராசா அவர்களின் மறைவையொட்டி, இடம்பெற்ற 31ம் நாள் அந்தியேட்டி நிகழ்வின்போது 29.03.2016 அன்று பல்வேறு பிரமுகர்களின் அஞ்சலிச் செய்திகளை உள்ளடக்கி வெளியிடப்பட்ட நினைவஞ்சலி மலர். செங்கை ஆழியான் என்ற புனைபெயரால் பரவலாக அறியப்படும் க. குணராசா (ஜனவரி 25, 1941 - பெப்ரவரி 28, 2016) ஒரு பன்னூலாசிரியராவார். புதினங்கள், சிறுகதைகள், புவியியல் நூல்கள், வரலாற்று ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் மற்றும் பதிப்புத்துறை எனப் பல துறைகளிலும் க. குணராசாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். நீலவண்ணன் என்ற பெயரிலும் ஆக்கங்கள் எழுதியுள்ளார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ் இந்துக்கல்லூரியிலும், உயர் கல்வியை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பெற்றார். புவியியல் சிறப்புப் பட்டதாரியாக பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்தார். 1984 ஆண்டு முதுகலைமானிப் பட்டத்தையும், 1991 ஆண்டு கலாநிதிப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பெற்றார். செங்கை ஆழியானுக்கு இலக்கிய உலகு, கல்வி உலகு, நிர்வாக உலகு என மூன்று ஆளுமையாற்றல்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜீவநதி செங்கை ஆழியான் சிறப்பிதழ்.** க.பரணீதரன் (பிரதம ஆசிரியர்). அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, வைகாசி 2016. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தி, நல்லூர்).

72 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 28x20.5 சமீ.

சாஹித்தியரத்னா செங்கை ஆழியானின் மறைவையொட்டி வெளியாகியுள்ள சிறப்புமலர். இன்னொருவரால் இட்டு நிரப்ப இயலாத ஆளுமை செங்கை ஆழியான் (தெணியான்), செங்கை ஆழியான்: எழுதிக் குவித்தலும் பிரளயம் நாவலும் (யு.ர்.ஆ.நவாஸ்), செங்கை ஆழியானின் புனைவும் வாழ்வும் (க.சட்டநாதன்), வாடைக்காற்று நாவல் திரைமொழி பேசியபோது (கானா பிரபா), செங்கை ஆழியானின் நாவல்களில் யாழ்ப்பாண சமூக மரபு: சில நாவல்களை மட்டும் முன்வைத்து (சமரபாகு சீனா உதயகுமார்), பெருவாரிப் பிரதியாளி செங்கை ஆழியானின் ருத்திரதாண்டவம் (இ.சு.முரளிதரன்), விடியலைத் தேடி ஊடாக செங்கை ஆழியானை நினைவுகூர்தல் (க.நவம்), செங்கை ஆழியானின் பிரளயத்தின் வாடைக்காற்றில் பிரயாணம் செய்யும் காட்டாறு (கிண்ணியா சபருள்ளா), வரலாறு பேசும் செங்கை ஆழியான் (யோகேஸ்வரி சிவப்பிரகாசம்), செங்கை ஆழியானின் காட்டாறு (தருமராசா அஜந்தகுமார்), செங்கை ஆழியான் படைத்த கிடுகு வேலி (கானா பிரபா), சூழலியலின் தத்துவம் உணர்த்தும் நாவல் செங்கை ஆழியானின் ஓ அந்த அழகிய பழைய உலகம்: நாவல் குறித்த சில மனப்பதிவுகள் (த.கலாமணி), செங்கை ஆழியானின் குந்தியிருக்க ஒரு குடிநிலம்: வாசக நிலை நோக்கு (அ.பௌநந்தி) ஆகிய படைப்பாக்கங்களை இச்சிறப்பிதழ் கொண்டுள்ளது.

**0000**

**பாடிப்பறந்த பறவைகள்: திரைக்கதை வசனம்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கந்தையா குணராசா, 82, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, பதிப்பித்த ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கல்லச்சுப்பிரதி).

(2), 63 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 32x20 சமீ.

31 காட்சிகளில் எழுதப்பட்ட திரைக்கதைப் பிரதி இதுவாகும். 'யானை" என்ற தலைப்பில் முன்னர் வரதர் வெளியீடாக 1978இல் வெளிவந்திருந்த நாவலின் திரைக்கதைவடிவம் இது. அடக்கு முறைக்கு எதிரான ஒரு மனிதனின் போராட்டம் இந்நாவலில் கூறப்பட்டுள்ளது. யானையும் காடும் குறியீடுகளாக அமைகின்றன. தம்பலகமத்தில் வீட்டாருக்குத் தெரியாமல் இரு காதலர்கள் வீட்டைவிட்டுக் கிளம்பி காட்டுப்பாதையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கின்றனர். நொண்டி யானையினால் காதலி கொல்லப்படுகிறாள். காதலன் அந்த யானையைத் தொடர்ந்து சென்று பழிவாங்குவதாகக் கதை அமைகின்றது. The Beast என்ற பெயரில் ஆங்கிலத்தில் இந்நாவல் மொழிபெயர்க்கப்பட்டுமுள்ளது. செங்காரன் என்ற மனிதன் பழிவாங்கல் என்ற உணர்வினால் "நொண்டி யானை"யின் நிலைக்கு இறங்கியிருப்பதும், இறந்துபோன யானை, மனித நிலைக்கு உயர்ந்து நிற்பதும் நாவலின் இறுதியில் மனதில் நிலைக்கின்றது. பழிவாங்கல் மனிதனை மிருக நிலைக்கு இறக்கிவிடுகின்றது என்பதை இந்நாவல் சித்திரிக்கின்றது. மனித குலத்திற்கு ஒவ்வாத பழிவாங்கல் உணர்ச்சிகளின் தீமையை ஆசிரியர் இந்நாவலில் சுட்டிக்காட்டுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 55180).

**புதிய சமூகக் கல்வி பயிற்சிகள் (வினா-விடைகள்) தரம் 10.** *கமலா குணராசா (மூலம்), க.குணராசா (மீள்பார்வை). யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு, 234 காங்கேசன்துறை வீதி, வெளியிட்ட ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).*

*64 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 16.50, அளவு: 20x13.5 சமீ.*

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் புதிய பாடத் திட்டத்தின்கீழ் அமுல்படுத்தப்படும் சமூகக்கல்வி பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்களும் அதற்கான விடைகளும் அடங்கியுள்ள நூல். இரண்டு பகுதிகளாகப் பிரித்து கேட்கப்படும் கேள்விகளில் முதற் பகுதியில் 40 பலவினக் கேள்விகள் வழங்கப்பட்டு, ஒவ்வொரு கேள்விக்கும் பொருத்தமான விடையை நான்கு பதில்களிலிருந்து மாணவர் தேர்வுசெய்வதாகவும் அமைகின்றது. பகுதி-2இல் 10 முதல் 12 வரையிலான கேள்விகளை வழங்கி அவற்றில் முதலாம் கேள்விக்கு கட்டாயம் விடை தருவதுடன் ஏனையவற்றில் ஐந்து கேள்விகளை தேர்வுசெய்து மாணவர் விடைகளை சமயோசிதமாக எழுதவேண்டும். இந்நூலில் அத்தகைய ஐந்து மாதிரி வினாப்பத்திரங்கள் அவற்றிற்கான விடைகளுடன் தரப்பட்டுள்ளன. சமூகக் கல்வி மாணவர்கள் எவ்வாறு பரீட்சையில் விடைகளை வழங்கவேண்டும் என்ற ஆலோசனையை இந் நூல் வழங்குகின்றது.

**புவியியல்: மாதிரி வினா-விடை: 6ஆம் தரம்: (மூன்றாம் பருவம்).** *க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு, 234 காங்கேசன்துறை வீதி, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).*

*32 பக்கம், வரைபடங்கள், விலை: சதம் 0.75, அளவு: 20x13.5 சமீ.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் ஆறாம் தர மாணவர்களுக்கான புவியியல் பாடத்திற்கான ஏழு வினாப்பத்திரங்களும் அவற்றுக்கான விடைகளும் இடம்பெற்றுள்ளன.

**மாணவர் இலகு தேசப்படத் தொகுதி.** *க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).*

*106 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 300., அளவு: 28x20 சமீ.*

மாணவர்களுக்குரிய இத் தேசப்படத் (Atlas) தொகுதியில் பிரபஞ்சத்தில் பூமி, ஞாயிற்றுத் தொகுதி, பூமியின் இயக்கங்கள், வற்றுப்பெருக்கு, உலகின் தரைத்தோற்றம், இலங்கையின் நிலையம், தொலமியின் இலங்கை, இலங்காபுரி, புராதன ஈழம், எல்லாளன் கால இலங்கை, இலங்கை மாவட்டங்கள், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண அயல்தீவுகள், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம், வவுனியா மாவட்டம், மன்னார் மாவட்டம், திருக்கோணமலை மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை மாவட்டம், தென் மாவட்டங்கள், புத்தளம் குருநாகல், இலங்கையின் புவிச்சரிதவியல், இலங்கை தரைத்தோற்றம், இலங்கையின் நதிகள், மண்வகை, கனியங்கள், மழைவீழ்ச்சி, பருவ மழைவீழ்ச்சி, வெப்பநிலை, இலங்கைக் காடுகள், இலங்கை புகலரண்கள், இலங்கையில் நெல், தேயிலை, இறப்பர், தென்னை, இலங்கையின் வீதிகள், புகையிரதப் பாதைகள், குடியடர்த்தி, உலகின் மலைகள், உலகின் நதிகள் என இன்னோரன்ன 106 தலைப்புகளில் இத்தேசப்படத் தொகுதிகள் தெளிவான குறிப்புகளுடன் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் கணனி வடிவமைப்பினை கலாநிதி க.குணராசா, க.உதயகுமார், கு.ஹம்ஸா ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

**வரலாறு ஆண்டு 11 (புதிய பாடத்திட்டம்).** *கமலா குணராசா (மூலம்), க.குணராசா (மீள்பார்வை). யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம், 225, ஸ்ரான்லி வீதி).*

*84 பக்கம், விலை: ரூபா 25.00, அளவு: 20x14 சமீ.*

ஆண்டு 11இற்கான வரலாறு பாடத்திட்டம் 33 பாடவேளைகளைக் கொண்டது. 'இலங்கையில் பிரித்தானியர்ஆட்சி" என்ற முதலாவது பிரிவில் 13 பாடவேளைகள் உள்ளடங்குகின்றன. இவை பின்னணி, கி.பி. 1796 தொடக்கம் 1818 வரை, கி.பி. 1818 தொடக்கம் 1931 வரை, கி.பி. 1932 தொடக்கம் 1948 வரை, பிரித்தானியர் காலத்தில் பொருளாதார அபிவிருத்தி, உணவுப் பயிர்ச் செய்கை, போக்குவரத்தும் தொடர்பாடலும், இலங்கையில் அரசியல் சமய மறுமலர்ச்சி, 1931இன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார சமூக மாற்றங்கள் ஆகிய பாடங்களைக் கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மனித உரிமைகளை வென்றெடுத்தல்" என்ற இரண்டாவது பிரிவில் 8 பாடவேளைகள் உள்ளன. ஆங்கிலேயப் புரட்சி, அமெரிக்க சுதந்திரப்போர், பிரான்சியப் புரட்சி, இரசியப் புரட்சி ஆகிய நான்கு பாடங்களை இப்பிரிவு உள்ளடக்குகின்றது. 'கைத்தொழிற் புரட்சி" என்ற மூன்றாவது பிரிவில் 4 பாடவேளைகளும் "குடியேற்றவாதத்தின் ஆரம்ப வளர்ச்சி வீழ்ச்சி" என்ற நான்காவது பிரிவில் எட்டு பாடவேளைகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எங்கட புத்தகங்கள்

ISBN 624978233-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org